July 2018

# தமிழ்

9ம் ஆண்டில்

நற்றமிழரின் நாடித்துடிப்பு




VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

July 2018

சுவடி — 8
ஓலை — 5


## வணக்கம் பல

தகுதியற்றோரும் பெறக்கூடியது தலைமைப் பதவி. தலைவரானோர் தலைமைப் பண்புகள் நிரம்பியவராக இருக்கிறார்களா என்றால் அதுவும் கேள்விக்குறியே! பதவிக்கு அழகு செய்பவராகவும் பதவியால் அழகு பெறுபவராகவும் இருத்தல் அவர்க்கு சிறப்பு!

தலைமைப் பண்பு என்பது தகுதிகளால் வளர்த்தெடுக்கப்படுவது என்றாலும், தன்னிறைவு பெற்ற பண்புகளால் அது முழுமை அடையும்போது, அந்த மனிதரையும் அந்த மனிதர் சார்ந்த சமூகத்தையும், நிலத்தையும் உயர்த்தி வைக்கிறது.

மீண்டும் துருக்கியின் அதிபராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றாலும், வைக்கப்படும் விமர்சனங்கள் ஜனநாயக முறையில்தான் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டாரா என்ற கேள்வி எழுவதை மறுப்பதற்கில்லை! அவர் தம்முடைய பொறுப்பை உணர்ந்து, நாட்டின் சிறப்பை உயர்த்திப் பிடிப்பதிலும் மக்களின் வாழ்வைச் செம்மையுறச் செய்வதிலும் திறம்பட காட்டுவாரேயானால், வாக்களித்த மக்களுக்கு அவர் உண்மையாக இருக்கிறார் என்பதை அறியலாம். இதை உணர்ந்து மக்களுக்காக அவர் சேவையாற்ற வேண்டும் என்று வாழ்த்துவோம்!

நாட்டை வளப்படுத்துகிறோம் என்றே பெயரில் காட்டை அழிக்கும் கொடுமை ஒருபுறம் நடந்து வருகிறது. இது மனிதன் இயற்கையின் போக்குக்கு எதிரான அதிவேகப் பயணத்தில் இருக்கிறான். இப்பயணம் எதிர்வரும் மனித குலத்துக்கு கடும் சிக்கலையும் சவாலையும் தரும் என்பது திண்ணம்!

மனிதன் இயற்கையைச் சார்ந்தே வாழவேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ளும் படைப்புக்களுடன், உலகளாவிய அளவில் கவனம் பெற்ற செய்திகளையும், சிறந்த இலக்கியப் பனுவல்களையும் ஒன்று திரட்டி வழமைபோலவே தந்திருக்கிறோம்!

கடந்து போகிற ஒவ்வொரு நாட்களும் நமக்கு ஒவ்வொரு அனுபவங்களே! அவற்றை எல்லாம் அழுத்தமான பதிவுகளாய் நாம் ஆவணப்படுத்த வேண்டும்! அதுவே வரும் தலைமுறையினருக்கு ஏற்றம் தரும் செயல்! இந்த நற்சிந்தனையை விதைத்தபடி மலர்கிறது இம்மாத ‘அய் தமிழ்’.

வரவேற்று மகிழுங்கள்!

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு

## உள்ளே...




தலையில் மண்!
என்ன மாயம்
இரு வல்லவர்கள்
இனவெறி மேலாண்மை
வாருமோ? மனிதாபிமான அரசியல்
அறிவோம் தமிழர் பெருமை
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!
சிவகாமியின் சபதம்
வன வளம்
மருத்துவ தமிழ்
தேவை ஒரு கூட்டுக்குடும்பம்



IThamil Monthly Magazine

Chief Editor & Publisher
Sivanesan

Editor
Khottravan

Editorial Team
Ganesan
Navani
Shanthakumar
Vijayarajah

Art & Marketing Director
Jaya

Printers
Kanagam Pathippagam

Contact us:
editor@ithamil.com



*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது

# தலையில்

## துருக்கி அதிபர் தேர்தல்: எர்டோகன் மீண்டும் வெற்றி

துருக்கியில் நடைபெற்ற அதிபர் தேர்தலில், தற்போதைய அதிபர் ரிஸெப் தயீப் எர்டோகன் பெரும்பான்மை வாக்குகள் பெற்று வெற்றியடைந்தார்.




முதல் கட்டமாக நடைபெற்ற இந்தத் தேர்தலில் அவருக்கு 52.5 வாக்குகள் கிடைத்துள்ளதாகக் கூறப்படுவதையடுத்து, இரண்டாம் கட்டத் தேர்தலுக்கு அவசியமில்லாமலேயே அவர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம், பிரதமராகவும், அதிபராகவும் துருக்கியை கடந்த 15 ஆண்டுகளுக்கு ஆண்ட எர்டோகன், மேலும் 5 ஆண்டுகளுக்கு அந்த நாட்டின் தலைமைப் பொறுப்பை வகிப்பார்.

துருக்கியில் ஒருவர் இரு முறை மட்டுமே அதிபர் தேர்தலில் போட்டியிடலாம் என்ற விதிமுறை இருந்தாலும், அண்மையில் இயற்றப்பட்ட புதிய அரசமைப்புச் சட்டத்தின்படி அவருக்கு இதுதான் முதல் தேர்தல் என்பதால் அடுத்த தேர்தலிலும் போட்டியிட்டு, வரும் 2028—ஆம் ஆண்டுவரை அவரால் அதிபர் பதவியை வகிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

துருக்கி நாடாளுமன்றத் தேர்தலுடன் இணைந்து நடைபெற்ற பொதுத் தேர்தலில், அதிபர் எர்டோகனுக்கு குடியரசு மக்கள் கட்சி வேட்பாளரான முஹரம் இன்ஸ் பலத்த போட்டியைத் தருவார் என்று சிலர் கருத்து தெரிவித்திருந்தனர்.

எனினும், அந்த எதிர்பார்ப்புகளைப் பொய்யாக்கும் வகையில், 52.5 சதவீத வாக்குகளைப் பெற்று அதிபர் தேர்தலில் எர்டோகன் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது, கடந்த 2014—ஆம் ஆண்டு அவர் பெற்ற 51.8 சதவீத வாக்குகளை விட அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.




அவரை எதிர்த்துப் போட்டியிட்ட முஹரம் இன்ஸுக்கு 30.7 வாக்குகள் மட்டுமே கிடைத்தன. மூன்றாவது இடத்தில் இருக்கும் குர்து ஆதரவுக் கட்சியான ஜனநாயகக் கட்சிக்கு 8.4 சதவீத வாக்குகள் கிடைத்தன. குர்து தீவிரவாதிகளுக்கு உதவிய குற்றச்சாட்டின் பேரில் கடந்த 2016—ஆம் ஆண்டு முதல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஜனநாயகக் கட்சித் தலைவர் சலேஹாட்டின் டெமிர்தாஸுக்கு இத்தனை அதிக சதவீத வாக்குகள் கிடைத்தது ஒரு சாதனையாகவே கருதப்படுகிறது.

நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றி: அதிபர் தேர்தலுடன் சேர்ந்து நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலும், எர்டோகன் தலைமையிலான நீதி மற்றும் முன்னேற்றக் கட்சி (ஏகேபி) அதிக இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.

நாடாளுமன்றத்தின் மொத்தமுள்ள 600 இடங்களில் 293 இடங்களை அந்தக் கட்சி கைப்பற்றியுள்ளதால், எர்டோகனுக்கு நாடாளுமன்றத்தில் அதிக பலம் கிடைத்துள்ளது. இந்தத் தேர்தலிலும், குர்து ஆதரவு ஜனநாயக் கட்சி 10 சதவீத வாக்குகளைப் பெற்று 67 இடங்களைக் கைப்பற்றி சாதனையை ஏற்படுத்தியுள்ளது.

இதனை, குர்துகள் பெரும்பான்மையாக வசிக்கும் தியார்பக்கீர் பகுதியில் உற்சாகத்துடன் கொண்டாடினர்.

எதிர்க்கட்சியினர் குற்றச்சாட்டு: ஏற்கெனவே, இந்தத் தேர்தல் முறையாக நடைபெறவில்லை என்று கூறி வந்த குடியரசு மக்கள் கட்சியினர், அரசு ஊடகங்களை முறைகேடாகப் பயன்படுத்தி எர்டோகன் வெற்றி பெற்றதாக குற்றம் சாட்டியது.



அவரது 15 ஆண்டு ஆட்சிக் காலத்தில், எதிர்க்கட்சிகள், ஊடகங்கள் ஆகியவற்றுக்கு எதிராக அவர் அடக்குமுறையை கையாள்வதாகக் குற்றம் சாட்டப்படுகிறது. உலகின் மற்ற எல்லா

என எதிர்க்கட்சிகள் அஞ்சுகின்றன. இச்சூழலை ரஷ்யாவில் விளாடிமீர் புடின் இருப்பதுடன் ஒப்பிட்டு பார்க்கின்றன எதிர்க்கட்சிகள்.

எர்துவான் தற்போதே மிகுந்த அதிகாரங்களுடன்




நாடுகளையும் விட, எர்டோகன் தலைமையிலான துருக்கியில்தான் அதிக செய்தியாளர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

மேலும், கடந்த 2016—ஆம் ஆண்டு நடைபெற்ற ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சிக்குப் பின், எதிர்ப்பாளர்களின் குரல்களை நசுக்கும் செயலில் எர்டோகன் ஈடுபட்டு வருவதாக மனித உரிமை ஆர்வலர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

எர்டோகனின் ஆட்சிக் காலம், துருக்கியின் ஜனநாயகத்துக்கு முடிவுக் காலம் எனவும், அவரது ஆட்சி சர்வாதிகாரத்தை நோக்கி நகர்ந்துகொண்டிருப்பதாகவும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

எனினும், உறுதியான நடவடிக்கைகள் மேற்கொண்டு வந்தாலும், மக்களின் ஆதரவுடனே எர்டோகன் ஆட்சி புரிவதாக அவரது ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

எர்டோகனின் தொடர் தேர்தல் வெற்றியை சுட்டிக் காட்டும் அவர்கள், எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுவதைப் போல், தேர்தல்களில் முறைகேடுகள் எதுவும் நடைபெறவில்லை என்று திட்டவட்டமாகக் கூறுகின்றனர்.

துருக்கியில் ஒரு நபர் ஆட்சி வந்துவிடுமோ

உள்ளதாக கூறுகிறார் எதிர்க்கட்சியான குடியரசு மக்கள் கட்சியின் ஆதரவாளர் டெசர் ஒல்கெய்டோ.

அதிபர் தேர்தலும் நாடாளுமன்ற தேர்தலும் ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரே நாளில் நடைபெற வேண்டும் எனக்கூறுகிறது புதிய அரசியல் சட்டம். ஒருவர் அதிபராக அதிகபட்சம் 2 பதவிக்காலம் இருக்கலாம் என்றும் கூறுகிறது புதிய சட்டம். (அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ளதைப் போல இடைக்கால தேர்தலுக்கெல்லாம் இங்கு வாய்ப்பில்லை).

எர்டோகன் ஏற்கனவே 11 ஆண்டுகள் பிரதமாகவும் பின்னர் அதிபராகவும் ஆட்சி புரிந்துவிட்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. துருக்கி குடியரசின் நூறாவது நிறுவன ஆண்டான 2023லும் ஆட்சி புரிய ரெசெப் தாயிப் எர்துவான் திட்டமிட்டுவிட்டார் என அந்நாட்டில் பலரும் நம்புகிறார்கள்.

அந்த இலக்கை குறி வைத்தே இந்த தேர்தல் என அவர்கள் நம்புகின்றனர். இப்படி பல எதிர்ப்புகள் சந்தேகங்கள் இருந்த போதிலும் துருக்கியில் ரெசெப் தாயிப் எர்துவானுக்கு இன்னும் கோடிக்கணக்கான தீவிர ஆதரவாளர்கள் உள்ளனர். நாடு சந்திக்கும் பல சவால்களை சமாளிக்க அதிபர் ஆட்சி

முறை நல்ல தீர்வாக இருக்கும் என்றும் இதன் மூலம் திறமையான தலைவர் பிரச்சினைகளை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியும் என்றும் கூறுகிறார் எர்டோகன்.

மக்களும் இதையே விரும்புகின்றனர் என்கிறார்



ஆளும் கட்சியை சேர்ந்த காண்டுர். இதன் மூலம் நாட்டிற்கு நல்ல அரசு கிடைக்கும் என்கிறார்.

ஆனால் அரசியல் சட்டத்தில் செய்யப்பட்ட பல மாற்றங்கள் நீக்கப்பட வேண்டும் என்கின்றனர் எதிர்க்கட்சி த்தலைவர்கள். ஆனால் எதையும் மாற்ற வேண்டுமென தாங்கள் நிர்பந்திக்கவில்லை என்கிறது வெனிஸ் கமிஷன். மக்களின் கவலைகளையும் கருத்தில் கொள்வதாக அது தெரிவித்துள்ளது.

துருக்கி நாட்டின் தற்போதைய அதிபராக இருக்கும் ரெஜெப் தையீப் எர்டோகன் பதவிக்காலம் அடுத்த வருடம் வரை இருக்கிறது. இருந்தாலும் 2016 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இராணுவ சதி புரட்சி காரணமாக அதிபருக்கு மேலும் சில அதிகாரங்கள் வேண்டும் என்று அரசியல் சாசனத்தில் கூட்டிக்கொண்டார். அதன்படி அடுத்த வருடம் 2019 ல் நடக்க இருந்த தேர்தலை தனது அதிகாரத்தின் கீழ் இந்த வருடமே மாற்றினார்.

ரெஜெப் தையீப் எர்டோகன், 2003—2014 வரை பிரதமராகவும், அதைத் தொடர்ந்து 2014—2018 வரை அதிபராகவும் 16 ஆண்டுகள் பதவி வகித்திருக்கிறார். 1993—1998 வரை இஸ்தான்புல் மேயர். எர்டோகன் தனது பதவியைத் தக்கவைத்துக்கொள்வதற்காக போட்டியாளர்களைப் பேசவிடாமல் செய்தது, பல்வேறு ஊடகவியலாளர்களை சிறையில் அடைத்தது, துருக்கிய அரசியலமைப்பையே மாற்றியமைத்தது போன்ற காரியங்களைச் செய்தார். இதனால், மீண்டும் அவரால் வெற்றி பெற முடியாது என்றார்கள். சமீபத்தில் நடந்து முடிந்த அதிபர் தேர்தலில் மீண்டும் எர்டோகன் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து 'ஊழல் செய்தே வென்றிருக்கிறார்' என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது!

சரித்திர நாயகனா? சர்வாதிகாரியா?

ஒரு சாதாரண பொருளாதார மாணவராகவும், கால்பந்து வீரராகவும் இருந்த ரிஸப் தயீப் எர்டோகன், தற்போது துருக்கியின் அசைக்க முடியாத இரும்புத் தலைவராக உயர்ந்து நிற்கிறார்.

இளம் வயதிலேயே அரசியலில் ஆர்வம் கொண்டிருந்த அவர், 1994—ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டு இஸ்தான்புல் நகர மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இருந்தாலும், அரசில் மதச்சார்பை வலியுறுத்தும் பாடலை பாடியதற்காக தகுதி நீக்கம் செய்யப்பட்ட அவர், 4 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார். அத்துடன், எந்த அரசுப் பொறுப்பையும் அவர் ஏற்பதற்கு வாழ்நாள் தடை விதிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வெளிப்படையான இஸ்லாமிய ஆதரவு பிரசாரத்தைக் கைவிட்ட எர்டோகன், மிதமான சமயசார்புக் கொள்கைகளையுடைய நீதி மற்றும் முன்னேற்றக் கட்சியை (ஏகேபி) அப்துல்லா குலுடன் சேர்ந்து 2001—ஆம் ஆண்டு தொடங்கினார்.

அவரது கொள்கைகள் மக்களுக்கு மிகவும் தேர்தெடுக்கப்பட்டவர்தான் எர்டோகன்.

2003 முதல் 2014 வரை எர்டோகன் துருக்கியின் பிரதமராக இருந்தது குறிப்பிடத்தக்கது. எர்டோகன்னின் ஆட்சியில் துருக்கி பல்வேறாக செதுக்கப்பட்டுள்ளது, நாடு வளர்ச்சி பாதையில் சருக்காமல் சென்றுகொண்டிருக்கிறது என்று செல்லப்பட்டுள்ளது. இப்படியெல்லாம் ஒரு பக்கம்




பிடித்துப் போகவே, 2002—ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் அவரது ஏகேபி கட்சி மாபெரும் வெற்றியடைந்தது; அப்துல்லா குல் பிரதமரானார்.

எனினும், அரசுப் பொறுப்புகளை ஏற்க எர்டோகனுக்கு விதிக்கப்பட்டிருந்த வாழ்நாள் தடையை அப்துல்லா குல் 2003—இல் நீக்கிய உடனேயே, பிரதமர் பதவி எர்டோகன் கைக்கு வந்தது.


அதனைத் தொடர்ந்து நடைபெற்ற தேர்தலிலும் வெற்றி பெற்று பிரதமர் ஆன எர்டோகன், 2014—ஆம் ஆண்டு வரை அந்தப் பதவியை வகித்தார். அதனைத் தொடர்ந்து, 2014—ஆம் ஆண்டிலிருந்து அதிபராகப் பொறுப்பேற்று ஆட்சி நடத்தி வருகிறார்.

துருக்கியில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்கு செலுத்துவதை வைத்துதான் அதிபர்கள் தேர்தெடுக்கப்பட்டு வந்தனர். 2014 ஆம் ஆண்டுக்கு முன்புவரை இப்படித்தான் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். 91 ஆண்டுகளுக்கு பிறகு 2014ஆம் ஆண்டில் நாட்டின் உயரிய பதவியான அதிபர் பதவி மக்களால் தேர்ந்தெடுக்கும் முறை கொண்டுவரப்பட்டது, அந்தத் தேர்தலில் அதிபராக சொன்னாலும்.மறு பக்கத்தில் அவர் ஒருசர்வாதிகாரி என்று சித்தரிக்கப்படுகிறார். எர்டோகன் தனது பதவியைத் தக்கவைத்துக்கொள்வதற்காக போட்டியாளர்களைப் பேசவிடாமல் செய்தார். பல்வேறு ஊடகவியலாளர்களை சிறையில் அடைத்தார். துருக்கிய அரசியலமைப்பையே மாற்றியமைத்தார். இது போன்ற காரியங்களைச் செய்ததனால் நடக்கப்போகும் தேர்தலில் அவரால் வெற்றி பெற முடியாது என்றார்கள், ஆனால் அவர் அந்தத் தேர்தலில் வெற்றி பெற்றார்.

துருக்கியில் இதுவரை ஐந்து முறை இராணுவம் ஆட்சியை அமைந்துள்ளது. இவரது ஆட்சிக் காலத்தில் 2016 ஆம் ஆண்டு இராணுவ சதி கிளர்ச்சி ஏற்பட்டது. ஜூலை 15, 2016 ஆம் ஆண்டு துருக்கியின் பெரிய நகரான இஸ்தான்புல்லில் இருக்கும் பாஸ்போரஸ் ஜலசந்தி மீதுள்ள இரண்டு பாலத்தில் இராணுவ யுத்த டாங்குகளை கொண்டு இரவு 7:30 மணிக்கு ஆட்சி கவிழ்ப்பு முறையை தொடங்கியது இராணுவம்.

தலைநகர் அங்காராவிலும், இஸ்தான்புல்லிலும் திடீர் தாக்குதல் இராணுவத்தினர்களால் நடத்தப்பட்டது. இராணுவ விமானங்கள் தாழ்வாக பறந்தன. அதைத் தொடர்ந்து அங்கு இராணுவ புரட்சிக்கான முயற்சி நடைபெறுவதாக பிரதமர்

பினாலி யில்டிரிம் அறிவித்தார். இராணுவத்தில் உள்ள ஒரு பிரிவினர் புரட்சி முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும், அரசு படைகள் பதிலடி தருவதற்கு அழைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.




ஒரு மணி நேரம் கழித்து இராணுவத்தைச் சேர்ந்த ஒரு பிரிவு ஒரு அறிக்கையை வெளியிட்டது. அதில், ‘நாட்டை அமைதிக்கான அமைப்பு வழிநடத்துகிறது. ஊரடங்கும், இராணுவ சட்டமும் அமல்படுத்தப்படும். அரசியல் சட்ட ஒழுங்கையும், ஜனநாயகத்தையும், மனித உரிமைகளையும், சுதந்திரத்தையும் நிலை நாட்டுவதற்காகத்தான் இந்த புரட்சி’ என அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. மார்மரிஸில் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்த எர்டோகன் கிளர்ச்சி ஏற்பட்டதை தொடர்ந்து தனது கைபேசியின் மூலமாக நாட்டு மக்களுக்கு செய்தி அனுப்பினார்.

இராணுவ தலைமையின் அங்கீகாரத்தை பெறாத ஒரு இராணுவ பிரிவு சதி புரட்சி செய்கிறது, மக்கள்தான் நாட்டுக்காக போராட்ட வேண்டும் என்றார். மக்களும் இஸ்தான்புல் போன்ற நகரங்களுக்கு திரண்டனர். இராணுவ கிளர்ச்சியாளர்களுக்கும் பொதுமக்களுக்குமிடையே சண்டைகள் மூண்டது, இருந்தாலும் நாட்டிற்காக பொதுமக்கள் கிளர்ச்சியாளர்களை அடித்து துவம்சம் செய்தனர். ஆங்காங்கே மக்களிடமும், காவலர்களிடமும் கிளர்ச்சியாளர்கள் சரணடைந்தனர்.

இந்த சம்பவத்தால் அங்கு 200க்கும் மேற்பட்டோர் பலியாகினர். “இராணுவ கிளர்ச்சி முயற்சியினால் நடந்த மோதல்களில் 161 பேர் கொல்லப்பட்டனர், 1,440 பேர் காயம் அடைந்தனர். புரட்சி முயற்சியில் ஈடுபட்ட இராணுவ அதிகாரிகள், வீரர்கள் என 3000 பேர் கைது செய்யப்பட்டனர்” என பிரதமர் யில்டிரிம் அறிவித்தார். இரண்டு நாட்கள்வரை சலசலப்பாகவே இருந்துள்ளது. சாலைகளில் துப்பாக்கிச்சூடுகள், விமான நிலையம் முன்பு யுத்தபீரங்கிகள் நிப்பாட்டி வைக்கப்பட்டிருந்தன. இராணுவப்புரட்சி கைக்குள் கொண்டுவரப்பட்டவுடன் இராணுவப்படை தளபதிகள் மீண்டும் வேலைக்கு திரும்பினார்கள். இராணுவ கிளர்ச்சியில் முக்கியப்புள்ளியாக இருந்தவர்களுக்கு கடும் தண்டனைகள் வழங்கப்பட்டன, சிலர் கொல்லவும் பட்டனர்.

இவ்வாறு எல்லாம் நடந்ததால் எர்டோகனுக்கு மக்களின் பலம் இந்த தேர்தலில் குறைந்திருக்கும், அவர் வெற்றிபெறுவதே சவால்தான் என்று கூறிவந்தனர்.இறுதியில் அவர் பெரும்பான்மையுடன் ஆட்சியை கைப்பற்றினார். இந்த வெற்றியைக்கூட ஊழல் செய்துதான் பெற்றிருக்கிறார் என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. தேர்தலில் வெற்றிபெற்றதை

தொடர்ந்து பேசிய எர்டோகன் கூறியதாவது, “என்னை அதிபருக்கான கடமையை செய்ய மக்கள் மீண்டும் தேர்ந்தெடுத்திருக்கின்றனர். அதிபருக்கான அதிகார சீர்திருத்தம் விரைவாக செயல்படுத்தப்படும். இந்த தேர்தல் மூலம் ஒட்டுமொத்த உலகத்திற்கே ஜனநாயகம் குறித்து துருக்கி பாடம் கற்பித்துள்ளது.

இந்த நாட்டு மக்களான 8 கோடி பேரும் இதற்கு





சொந்தக்காரர்கள்தான். ஜனநாயகத்தின் மீது எமது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையின் பிரதிபலிப்பு என்றும் கூறியனார். மேலும் எமது மக்களின் இம்முடிவை ஏனைய நாடுகளும் அங்கீகரிக்கும்!" எனத் தெரிவித்துள்ளார்.

எந்த நாடாக எந்த அரசாக இருந்தாலும், மக்கள் சக்தியே எல்லாவிதமான மாற்றத்துக்கும் வழிகோலும் என்னும் உண்மையை மீண்டும் உலகுக்கு காட்டிய துருக்கி மக்களின் முயற்சியை வருங்காலம் எப்படிப் பதிவு செய்யவிருக்கிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்!




மக்கள் சக்திக்கு தலைவணங்கி மகத்தான ஆட்சியை அதிபர் எர்டோகன் தருவார் என்ற எதிர்பார்ப்பை மெய்யாக்குவாரா? ஆல்லது எதிர்க்கட்சிகளின் கூற்றை மெய்யாக்குவாரா என்பதைக் காலம் விரைவில் பதிலாகத் தரக் காத்திருக்கிறது!

# கருத்துப் ப(ா)டம்





# சொல்றாங்க... சொல்றாங்க...



"ஆர்.எஸ்.எஸ், பா.ஜ.க.வுக்குத் துணிவிருந்தால் என் மீது வழக்குகள் போடட்டும்"

– ராகுல் காந்தி


(பச்சபுள்ள எதோ தெரியாம சொல்லிடுச்சு சாமி! உங்க பயங்கரத்தை எதுவும் அதுமேல காட்டிடாதீங்க!)



"வட கொரியா மீதான தடைகள் தொடரும்"

டிரம்ப்


(இப்படித்தான் இந்தாளு ஏதாவது ஏடாகூடம் பண்ணுவாரு!



"போராட வேண்டாம் என்று ரஜினி சொல்வது பைத்தியக்காரத்தனம்"

எஸ்.ஏ.சந்திரசேகர்

(அதுக்குன்னு நீங்க ரஜினியை 'அந்த' மாதிரி சொல்லலாமா சார்?)



"நான் லெஜண்ட் அல்ல; ஒரு சினிமா டைரக்டர் அவ்வளவுதான்!"

ஸ்பீல்பெர்க்

(நீங்க கிளப்பிவிட்ட டினோசர் இன்னமும் சுத்துக்கிட்டு இருக்கு பிரம்மா சார்)



# என்ன

## 40 ஆண்டுகளில் உலகின் மிக சக்திவாய்ந்த நாடாக சீனா உருவானது எப்படி ?

40 ஆண்டுகளில் உலகின் மிக சக்திவாய்ந்த நாடாக சீனா உருவானது எப்படி? சீனாவில் மா சே துங் காலத்துக்கு பிறகு, பொருளாதார புரட்சி ஏற்படுத்திய புகழ் டெங் ஷியாபிங் என்பவரையே சாரும்.

1978ஆம் ஆண்டு டெங் ஷியாபிங் தொடங்கிய பொருளாதார புரட்சி 2018ஆம் ஆண்டில், 40 ஆண்டுகள் பயணித்து இன்று சீனா உலக அளவில் பெற்றிருக்கும் மகத்தான இடத்தை அடைந்திருக்கிறது. இதை, சீனாவின் இரண்டாவது புரட்சி என்று சொல்கிறார் டெங் ஷியாபிங். இந்த பொருளாதார சீர்திருத்தத்திற்கு பிறகே உலக அளவில் பெரிய பொருளாதார சக்தியாக வலுவுடன் தலை நிமிர்ந்து நிற்கிறது சீனா.



இன்றைய நிலையில் சீனாவிடம் அதிக அளவிலான அந்நிய செலாவணி இருப்பு, (3.12 டிரில்லியன் அமெரிக்க டாலர்கள்) உள்ளது.

மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜி.டி.பி.) யின் அடிப்படையில் (11 டிரில்லியன் டாலர்கள்) சர்வதேச அளவில் இரண்டாவது பெரிய நாடாக திகழும் சீனா, நேரடி அந்நிய முதலீட்டை ஈர்க்கும் உலகின் மூன்றாவது பெரிய நாடு.

1978ஆம் ஆண்டில் டெங் ஷியாபிங் பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொண்டபோது உலகப் பொருளாதாரத்தில் சீனாவின் பங்களிப்பு 1.8% ஆக இருந்தது. 2017ஆம் ஆண்டில் உலகப் பொருளாதாரத்தில் சீனாவின் பங்கு 18.2% ஆக உயர்ந்துவிட்டது.

சீனப் பொருளாதாரம் வளர்ந்துவரும் பொருளாதாரம் மட்டுமல்ல, தனது வலிமையான கடந்த காலத்தை நோக்கி மீண்டும் முன்னேறிக்கொண்டிருக்கிறது என்பதையும் குறிப்பிட்டுச் சொல்லலாம். 15 மற்றும் 16ஆம் நூற்றாண்டுகளில் உலகப் பொருளாதாரத்தில் சீனாவின் பங்கு கிட்டத்தட்ட 30 சதவீதமாக இருந்தது.

சீனாவை வலுவாக மாற்றியவர்களைப் பற்றி




பேசும்போது, மா சே துங், டெங் ஷியாபிங் மற்றும் தற்போதைய தலைவர் ஷி ஜின்பிங் ஆகிய மூவரின் பெயர் முதலிடங்களைப் பிடிக்கும். டெங் ஷியாபிங்கின் பொருளாதாரப் புரட்சி தொடங்கிய 40 ஆண்டுகளுக்குப் பிறகு, ஷி ஜின்பிங் போன்ற ஒரு வலுவான தலைவரின் தலைமையில் சீனா மீண்டும் முன்னோக்கி நகர்கிறது.

உற்பத்தி அடிப்படையில் சீனாவின் பொருளாதாரத்தை வலுவாக்க விரும்புகிறார் ஷி ஜின்பிங். அதற்காக அவர், டெங் ஷியாபிங்கின் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்கிறார். அதன்படி, பொருளாதாரத்தை திறந்துவிடுவது, பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்வது உட்பட பல முயற்சிகளை மேற்கொள்கிறார்.

சீனாவின் பொருளாதார வெற்றி மற்றும் கம்யூனிச அரசியலுக்கு இடையே மோதல் நிலவும் சூழ்நிலையும் ஏற்பட்டது. சீனாவின் பொருளாதார முன்னேற்றமானது, அந்நாட்டின் கம்யூனிச அரசியலின் சித்தாந்தத்தில் இருந்து மாறுபட்டது.

சீனாவின் முழு அரசியல் அதிகாரமும் ஷி ஜின்பிங்கின் கைகளுக்குள் அடங்கியுள்ளது. இந்த நிலையில் சீனாவின் தலைவர்கள் பொருளாதாரத்தை எந்த அளவு கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க விரும்புகிறார்கள்? என்ற கேள்வி எழுகிறது.



சீனாவின் எழுச்சியின் கதை, இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஏற்பட்ட வளர்ச்சிக் கதை அல்ல. ஆனால் மிகுந்த கட்டுப்பாட்டுடன் இருந்த பொருளாதாரத்திலிருந்து விடுபட்டு, சந்தைப் பொருளாதாரத்திற்கு மாறிய பொருளாதாரப் புரட்சியின் கதை. உலகின் பல நாடுகள் சீனாவைப் போலவே மாற்றங்களை ஏற்றுக்கொண்டாலும், பல்வேறு கோணங்களில் இந்த விஷயத்தில் வெற்றி பெற்று முதலிடம் பிடித்தது சீனா.

உள்நாட்டுப் பொருளாதாரத்தில் சீரான

முன்னேற்றத்தை மேற்கொண்ட சீனா, சந்தையின் மீதான நம்பிக்கையையும் விட்டுவிடவில்லை. சீனாவின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக, வெளிநாட்டு முதலீடுகளை எங்கு செய்யலாம், எங்கு செய்யக்கூடாது என்பதில் கவனமாக முன்னுரிமை கொடுத்து முடிவெடுத்தது சீனா. இதற்காக, சிறப்பு பொருளாதார மண்டலம் ஒன்று உருவாக்கப்பட்டது. தெற்கு கரையோர மாகாணங்கள் சிறப்பு பொருளாதார மண்டலத்திற்க்காக தேர்வு செய்யப்பட்டன.

கம்யூனிச சோசலிச அரசியல் சூழலில் வலுவான மாற்றத்திற்கான அடித்தளத்தை அமைத்தார் டெங் ஷியாபிங். அதன் முதல் கட்டமாக சோவியத் பொருளாதார மாதிரியின் அமைப்பை முற்றிலுமாக மாற்றியமைத்த அவர், பின்னர் சீனாவின் தேவைகளுக்கு ஏற்ப படிப்படியாக, சோசலிச அடிப்படையில் பொருளாதாரத்தில் நவீனமயமாக்கல் செயல்முறையை தொடங்கினார்.

டெங் ஷியாபிங் தொடங்கிய சமுதாய பொருளாதார சீர்திருத்தம் உலக சரித்திரத்தில் இதற்கு முன் மேற்கொள்ளப்படவில்லை. 1978 — 2016 ஆண்டுகளுக்கு இடையில் சீனாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 3,230% அதிகரித்தது. இதே காலகட்டத்தில் 70 கோடி மக்கள் வறுமைக் கோட்டிற்கு மேலே கொண்டு வரப்பட்டனர். 38.5 கோடி மக்கள் நடுத்தர வர்க்கத்தினராக உயர்த்தப்பட்டனர்.

சீனாவின் வெளிநாட்டு வர்த்தகம் 17,500 சதவிகிதம் அதிகரித்தது, 2015வது ஆண்டுவாக்கில் சீனா வெளிநாட்டு வர்த்தகத்தில் உலக அளவில் முன்னிலை பெற்றது. 1978 ஆம் ஆண்டில், ஆண்டு முழுவதிலும் செய்த வர்த்தகத்தை தற்போது இரண்டே நாட்களில் செய்கிறது சீனா.

சீன கம்யூனிஸ்ட் கட்சி (சி.சி.பி) கூட்டு தலைமையின் கீழ், சீனாவில் சமூக பொருளாதார மாற்றத்துக்கான துரிதமான செயல்முறையைத் தொடங்கினார் டெங் ஷியாபிங். 1960 மற்றும் 70களில் வாங்கிய பல அடிகளுக்கு பிறகு மாவோவின் பாணியைப் பின்பற்றுவதில் எச்சரிக்கையையும் அவர் கடைபிடித்தார். சர்வதேச உறவுகள் தொடர்பாக சில கொள்கைகளை வைத்திருந்த டெங் ஷியாபிங், தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ளமாட்டார். சீனப் பொருளாதாரத்தை துரித கதியில் உயர்த்துவதிலேயே அவரது கவனம் முழுமையாக இருந்தது.

ஹார்வர்ட் பல்கலைக் கழகத்தில் சமூக அறிவியல் பேராசிரியராக இருந்த எஜ்ரா வோஜெல், டெங் ஷியாபிங்கின் வாழ்க்கை வரலாற்றை எழுதினார். அவர் மாபெரும் தலைவர்களில் ஒருவர் என்றும், எந்தவிதமான சிக்கலையும் சமாளித்து, நிலைத்தன்மையை ஏற்படுத்தும் திறன் கொண்டவர் அவர் என்றும் கூறுகிறார்.

சீனாவில் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்கள் சீன குடிமக்களிடையே பொருளாதார செழிப்பை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரத்தை பலப்படுத்தி ஆட்சியையும் வலுப்படுத்தியது.

ஷி ஜின்பிங் மற்றும் புதிய சகாப்தம்

டெங் ஷியாபிங் அடிக்கடி இரண்டு பூனை சித்தாந்தத்தை மேற்கோள் காட்டுவார். ஓடும் எலியை பூனை பிடிக்கும் வரை, பூனையின் நிறம் கருப்பா வெள்ளையா என்பது முக்கியமில்லை என்று அவர் கூறுவார்.

இதே வழியில், சீன மனோபாவத்தில் புதிய தொழில் துறை வளர்ச்சியை முன்மொழிந்தார் ஷி ஜின்பிங். 2014 ஆம் ஆண்டில் 12வது தேசிய காங்கிரசில் உரையாற்றும் போது, ‘இரண்டு பறவை தத்துவம்‘ என்ற ஒன்றை முன்வைத்தார் அவர். கூட்டை திறந்து விட வேண்டிய அவசியம் இருக்கிறது, அந்தக்கூண்டில் வயதான, இறுதி காலத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் பறவைகளை அடைக்கவேண்டும் என்று கூறினார் ஷி ஜின்பிங்.

‘சோசலிசம் மற்றும் புதிய சகாப்தத்தில் சீனாவின் பண்புகள்’ என்ற தலைப்பில் தனது தத்துவத்தை கடந்த ஆண்டு அறிமுகம் செய்து வைத்தார் ஷி ஜின்பிங். அதை தொடர்ந்து, உயர் அதிகாரிகளும், அந்நாட்டின் ஊடகங்களும் தொடர்ந்து அதை, `ஷி ஜின்பிங்கின் கோட்பாடுகள்` என்றே குறிப்பிட்டன. இதை செயல்படுத்தினால், சீனா வெற்றியடையும் என்று அவர் கூறினார். வளர்ச்சியுடன், அடிப்படை தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

சீனாவின் அடுத்த தலைவர் யார்? என்பதே இப்போது சீனாவில் எழுப்பப்படும் முக்கியமான கேள்வி. கடந்த ஆண்டு மார்ச் மாதம், சீன நாடாளுமன்றம் (தேசிய மக்கள் காங்கிரஸ்), அதிபர் பதவிக்கான கால வரம்பை நீக்கியது. மாவோ போன்று தமக்கென ஒரு பிம்பத்தை உருவாக்க ஷி ஜின்பிங் முயல்வதாக பலரும் கூறுகின்றனர். ஷி ஜின்பிங் கோட்பாடு, சீனாவில் சோசலிசம் பற்றிய புதிய பார்வையை அறிமுகப்படுத்தியது. இது சீனாவின் ஒரு புதிய அத்தியாயத்தை அல்லது சகாப்தத்தைக் குறிக்கிறது.

விளக்கமாக கூறினால், சீனாவின் முதல் தலைவரான மாவோவின் கீழ், உள்நாட்டு போரால் பிளவுபட்டு இருந்த நாடு ஒன்றுபட்டது. இரண்டாவது தலைவரான டெங் ஷியாபிங்கின் கீழ், நாடு வளமடைந்தது; இந்த புதிய சகாப்தத்தில், நாடு மேலும் அதிக ஒற்றுமை மற்றும் வளங்களை



பெறுவதோடு, உள்நாட்டில் ஒழுக்கத்தையும், வெளிநாட்டில் உறுதியும் பெறவேண்டும்.

அரசாங்கத் துறைக்கு ஷி ஜின்பிங் கடிவாளம் போட்டார். உதாரணமாக, அரசாங்க நிறுவனங்களை கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டில் இருந்து நீக்கி, நிர்வாகத்தின் பொறுப்பில் முழுமையாக ஒப்படைத்தார். அதேபோல், தொண்டு நிறுவனங்கள் மீதும் கிடுக்கிப்பிடி போட்டார்; பல மனித உரிமை ஆர்வலர்கள் கைது செய்யப்பட்டனர்.

தனது தந்தையைப் போலவே ஷி ஜின்பிங் தாராளமாக இருப்பார் என்று பலர் நம்பினர். ஷி ஜின்பிங்கின் தந்தை ஷி சோங்ஷுஒன், 1978ஆம் ஆண்டு குவாங்டாங் மாகாண ஆளுநராக பதவி வகித்தார். அவர் டெங் ஷியாபிங்கின் பொருளாதாரப் புரட்சியில் பங்களித்தவர்.

2012 டிசம்பர் மாத தொடக்கத்தில், ஷி ஜின்பிங், முதல் உத்தியோகபூர்வ பயணமாக குவாங்டாங்கின் ஷென்செனுக்கு சென்றார். டெங் ஷியாபிங்கின் பொருளாதார சீர்திருத்தங்களில் எந்த தடையும் ஏற்படாது என்பதை இந்த பயணத்தின் மூலம் அவர் அனைவருக்கும் தெரிவிக்க முயன்றார். கடந்த ஐந்தாண்டுகளில் பலமுறை அதை உணர்த்தியும் இருக்கிறார்.

தாராளமயமாக்கலுக்கு முழு அளவிலான திட்டத்தை சீனா தயார் செய்துவிட்டது. சீனத் தலைவர்கள் மத்திய தலைமையை வலியுறுத்தினாலும், உள்ளூர் அரசாங்கத்திற்கும், தனியார் நிறுவனங்களுக்கும், வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் இடையே ஆழமான இணக்கம் ஏற்பட்டுவிட்டது.

வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சீனா அதிகாரம் வழங்கியிருக்கிறது. முந்தைய தலைவர்களுடன் ஒப்பிடுகையில், ஷி ஜின்பிங் பொதுத்துறை—தனியார் கூட்டாண்மையை வலியுறுத்துபவராக இருக்கிறார்.

2014க்கு பிறகு, சீனாவில் தனியார் முதலீடு துரித வளர்ச்சி கண்டுள்ளது. உலகம் முழுவதும் சீனாவின் வர்த்தகத்தை விரிவாக்கினார் ஷி ஜின்பிங். பெல்ட் அண்டு ரோடு திட்டம் எனப்படும் பட்டுசாலை மற்றும் பொருளாதார வழித்தட திட்டத்தின் கீழ், ஆசியா, ஐரோப்பா, மற்றும் ஆப்பிரிக்கா கண்டங்களை கட்டமைப்பு மற்றும் வணிக வலைப்பின்னல் மூலம் இணைக்கும் திட்டத்தை ஷி முன்னெடுத்திருக்கிறார்.

சமீபத்திய நாட்களில், சீனாவின் நோக்கங்கள் தொடர்பாக கேள்விகள் எழுப்பப்படுகின்றன. உதாரணமாக, சீனாவிடம் இருந்து வாங்கிய கடனை இலங்கை செலுத்த தவறிவிட்டதால், தனது அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு 99 வருட குத்தகைக்கு ஒப்படைத்தது இலங்கை.

இதே போன்ற பிடியில்தான் ஜிபௌட்டி, பாகிஸ்தான், கிர்கிஸ்தான் ஆகிய நாடுகளும் சீனாவிடம் சிக்கியுள்ளன. உலக வர்த்தக அமைப்பில் 2001ஆம் ஆண்டு முதல் சீனா இடம் பெற்றுள்ளது. அப்போதிலிருந்து வெளிநாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்காக சீனா ஏழாயிரம் விதிமுறைகளை ரத்துசெய்துவிட்டது. 2011ஆம் ஆண்டில் இருந்து சீனா சராசரியாக 10 சதவிகித அளவுக்கு வரியை குறைத்து விட்டது.

# இரு

### சீனாவும் டிரம்ப் – கிம் சந்திப்பும்!




ஜூன் 12 அன்று சிங்கப்பூரில் நடக்க இருக்கும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்—வட கொரிய இளம் தலைவரான கிம்—ஜோயிக்—உன் சந்திப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்பதில் ஐயமில்லை. 1950—53—இல் நடந்த சிந்தாந்தத்தின் அடிப்படையிலான கொரிய போரில் ராணுவ வலிமை மற்றும் சீனாவின் உதவி மூலம் தென் கொரியாவை கைப்பற்றும் வட கொரியாவின் பகீரத முயற்சியை ஐ.நா. கொடியின் கீழ் செயல்பட்ட அமெரிக்க கூட்டுப்படைகள் தடுத்தன. இதனால் இரு தரப்பிலும் பெரும் இழப்புகள் ஏற்பட்டன.

இப்போரில் விமானப் படை விமானியான மாவோவின் மூத்த மகன் மாவோ ஏனிங் உட்பட ஒரு லட்சத்து எண்பதாயிரம் சீனப் போர் வீரர்கள் உயிரிழந்தனர். போர் நிறுத்தத்திற்கான முறைப்படியான ஒப்பந்தம் இல்லாமல் போர் நிறுத்தப்பட்டது. எனினும், தென் கொரியாவை எப்படியாவது போரின் மூலம் இணைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் 65 ஆண்டுகளாக முயற்சிக்கிறது கிம் குடும்பம்.

ஆனால், தன் நோக்கத்திற்கு தடங்கலான தென் கொரியாவைப் பாதுகாக்க 28,000 அமெரிக்க வீரர்கள் நவீன ஆயுதங்களுடன் நிரந்தமாக முகாமிட்டிருப்பது வட கொரியாவுக்கு எரிச்சலூட்டியது. இதனால், அமெரிக்காவைத் தன் முதல் பகைவனாகக் கருதி, அமெரிக்க எதிர்ப்புப் பிரசாரத்தைத் தொடங்கி நடத்தி வருகிறது வட கொரியா.

அடக்குமுறை மற்றும் குடும்ப ஆட்சியும், பிரசார உத்திகளும், கம்யூனிச சிந்தாந்தமும், அதிநவீன ஆயுதங்களும், கட்டுப்பாடான ராணுவமும்,

# வல்லவர்கள்

பொ. லாசரஸ் சாம்ராஜ்

அமெரிக்க எதிர்ப்பும், எல்லாவற்றிற்கும் மேலாக அண்மைக்காலம் வரை கை கொடுத்த நட்பு நாடான சீனாவும், வட கொரிய ஆட்சியாளர்களைப் பாதுகாத்து வருகின்றன. வட கொரிய குடும்ப அடக்குமுறை ஆட்சியை மாற்ற தென் கொரியாவும் விதவிதமான பிரசார உத்திகள், ராஜதந்திரங்கள், ராணுவக் கூட்டணி, அமைதிப் பேச்சுவார்த்தை, பொருளாதார உதவி என்று பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.




ஆனால், அவ்வப்போது இருநாட்டு எல்லையில் அமெரிக்க படைகளுடன் நடத்தப்படும் அச்சுறுத்தல் போர் ஒத்திகைகள் மற்றும் தென் கொரியாவிலிருந்து அவ்வப்போது அனுப்பப்படும் பிரசார ராட்ஷச பலூன்கள் ஆகியவை வட கொரிய ஆட்சியாளர்களை ஆத்திரமூட்டி வந்தன.

இரு கொரிய இணைப்பு அமைப்பினர் மற்றும் கிம் ஆட்சிக்கு எதிரானவர்களால் ஆயிரக்கணக்கில் அனுப்பப்படும் பிரசார பலூன்களில் கிம் குடும்ப ஆட்சிக்கு எதிரான துண்டு பிரசுரங்களும், உணவுப் பொருள்களும், காணொளிகளும், வட கொரிய மக்களைப் புரட்சி செய்யத் தூண்டி வந்தன. மேலும், இரு கொரிய எல்லையிலிருந்து முழங்கும் பிரசார ஒலிபெருக்கிகள் பரஸ்பரம் எரிச்சலூட்டி இரு நாட்டு எல்லையை எப்பொழுதும் பதற்றத்துடனும், பரபரப்புடனும் மாற்றின. இதனால், தன் ஆட்சியையும், நாட்டையும் காப்பாற்ற கிம் குடும்பம் பெரும்பாலான பணத்தை நாட்டின் பாதுகாப்புக்கு செலவழித்தது.

ஆனால், அமெரிக்கப் பாதுகாப்பிலும், ஆதரவிலும் மேற்கு ஜெர்மனியைப் போன்று, தென் கொரியா மிகப்பெரிய வளர்ச்சியைக் கண்டுள்ளது. ஆயுதப்




பெருக்கத்தையும், பிரசாரத்தையும், தனிமையையும் நம்பிய வட கொரியா தன் மக்களுக்கு கிழக்கு ஜெர்மனியைப் போல, தொடர்ந்து வறுமையையும், அச்சத்தையும் தான் தந்துள்ளது.

உதாரணமாக, 1993—இல் ஏற்பட்ட கடும் உணவுப் பஞ்சத்தின்போது, ஜப்பானிடம் இருந்து உணவை இறக்குமதி செய்வதற்காக, அந்நாட்டில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த மிகக் கொடிய கதிர்வீச்சை ஏற்படுத்தும் அணு உலைக் கழிவுகளை தன் நாட்டில் வைக்க அனுமதித்து, உணவை இறக்குமதி செய்தது வட கொரியா. 1948 — முதல் கொரிய ஆட்சியாளர்கள் அச்சமடைந்தும், அச்சப்படுத்தியும் தங்களையும் தங்கள் நாட்டையும் தனிமைபடுத்தியே ஆட்சியில் தொடர்கின்றனர்.

அணு ஆயுதப் பெருக்கமோ, தொடர் பிரசார உத்திகளோ, அடக்குமுறை சிந்தாந்தமோ, இரும்புத் திரையோ ஒரு நாட்டை பாதுகாக்காது என்பதற்கு முன்னாள் சோவியத் யூனியன் ஒரு சிறந்த உதாரணம். அதுபோல், பல்வேறு அத்துமீறல்களை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் நடத்திவிட்டு, திடீர் சமாதான முயற்சிகளும், அணு ஆயுத ஒழிப்பு ஒப்பந்தங்களும் செய்தால் ஆட்சியைக் காப்பாற்ற முடியாது என்பதும் வரலாறு காட்டும் உண்மை.

உதாரணமாக, 2003 — ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், சதாம் உசேன் பிடிபட்டவுடன், லிபியா அதிபர் கடாபி, தன்னையும், தன் ஆட்சியையும் பாதுகாக்க, தன் நாட்டின் அணு உலைகளை மூடும் ஒப்பந்தத்தை அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் உடன் அவசரஅவசரமாக செய்து கொண்டார். ஆனால், அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள், கடாபி எதிர்ப்பாளர்களின் உதவியுடன் கடாபியை அக்டோபர் 11, 2011—இல் கொன்று, நாட்டையும் சீர்குலைத்தன.

கடாபியின் படுகொலைக்கு சில மாதங்களுக்கு முன்பு, டிசம்பர் 17, 2011—இல் வட கொரிய அதிபராக பதவியேற்றார் கிம். எனவே அணு ஆயுதங்கள் மற்றும் ஏவுகணைகள்தான் தனக்கும், தன் நாட்டுக்கும் பாதுகாப்பு என்பதாக நினைத்தார் அதிபர் கிம். இதன் அடிப்படையில், கடந்த ஓராண்டில் மட்டும் ஏராளமான ஏவுகணைகளையும், நான்கு முறை அணு ஆயுத சோதனைகளையும், அமெரிக்காவின் மேற்கு பகுதியைத் தாக்கும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளையும், ஹைட்ரஜன் குண்டுகளையும் அடுத்தடுத்து சோதித்து தென் கொரியா, ஜப்பான் நாடுகளுக்கு பயத்தையும், அமெரிக்காவிற்கு ஆத்திரத்தையும் ஏற்படுத்தினார் அதிபர் கிம்.

இத்துடன், அனைத்து ஆயுதங்களையும் அமெரிக்காவிற்கு எதிராக தான் பயன்படுத்தப் போவதாகவும் மிரட்டத் தொடங்கினார். ஆத்திரமடைந்த டிரம்ப் வட கொரியாவைத் தீக்கிரையாக்கப்போவதாக எச்சரித்ததோடு, அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தை மீறியதற்காக ஐ.நா. மூலம் கடுமையான பொருளாதாரத் தடைகளையும் விதித்தார்.

இறுதியாக, வட கொரியாவின் ஒரே நட்பு நாடான சீனாவிற்கும் பல்வேறு நிர்பந்தங்களை கொடுத்தது அமெரிக்கா. அணு ஆயுதங்களை வட கொரியா ஒழிக்காவிட்டால் சதாம் உசேன், கடாபி போன்றவர்களின் நிலைமைதான் கிம்முக்கும் ஏற்படும் என்று அமெரிக்கா நேரடியாக எச்சரிக்கை விடுத்தது.




இந்நிலையில், அமெரிக்காவின் தொடர் நிர்ப்பந்தங்களுக்கு அடிபணிந்த சீன அதிபர் ஷீ ஜின்பிங்க்—இன் நிர்ப்பந்தத்தால் அணு ஆயுத ஒழிப்பு பேச்சுவார்த்தையும், அமைதிக்கான பேச்சுவார்த்தையும் தவிர்க்க இயலாதது என்பதை வட கொரிய தலைமை உணரத் தொடங்கியுள்ளது.

கடந்த 65 ஆண்டுகளாக இரண்டாம் மட்ட தலைவர்களின் அளவில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின்போது உலகத்தையும், தென் கொரியாவையும் ஏமாற்றுவதுதான் வட கொரியாவின் வாடிக்கை.

ஆனால், தற்போது அதிரடியாக அதிபர் கிம் அணு ஆயுதங்களை படிப்படியாக அழிக்கவும், அணு ஆயுத சோதனைக் கூடங்களைத் தகர்க்கவும் உத்தரவாதம் அளித்ததோடு, ஏப்ரல் 24—ஆம் தேதி இரு நாட்டு எல்லையில் தென் கொரிய அதிபரான மூன் ஜே—வை சந்தித்து நட்போடு உறவாடியதோடு, புதிய சமாதான வரலாற்றை உருவாக்கவும், போர் நிறுத்தத்தை முறைப்படி அறிவிக்கும் பல்முனை பேச்சுவார்த்தைகளைத் தொடக்குவதாகவும் உறுதியோடு அறிவித்தது மிகப்பெரிய மாற்றம்.

சிங்கப்பூர் உச்சி மாநாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டு கிழக்கு—மேற்கு ஜெர்மனி மற்றும் வட—தென் வியத்நாம் நாடுகளைப் போன்று, வட—தென் கொரிய நாடுகளும் இணைந்தால் தென் கொரியா, ஜப்பான் மற்றும் அமெரிக்காவின் செல்வாக்கு அப்பிராந்தியத்தில் வலுபடும். இதனால் சீனாவின் பிராந்திய மேலாண்மைக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட வாய்ப்புள்ளது.

சீனாவின் விரிவாக்கக் கொள்கையினால் ஏற்கெனவே படிப்படியாக சீனாவை சுற்றி வளைக்கவும், பல்வேறு பொருளாதார நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தவும், பாதுகாப்பு ரீதியாக தனிமைப்படுத்தவும் அமெரிக்கா பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. உதாரணமாக, அமெரிக்காவின் தலைமையில் 26 பசிபிக் பிராந்திய நாடுகள் மூன்று லட்சத்து எழுபத்தைந்தாயிரம் வீரர்களுடன் நடத்தவிருக்கிற பிரம்மாண்டமான இரு வார கடற்படை ஒத்திகையில் கலந்து கொள்ளுமாறு சீனாவிற்கு கொடுத்த அழைப்பை அமெரிக்கா திரும்ப பெற்றுக்கொண்டது, சீனாவிற்கு எரிச்சலூட்டியது.

ஆனால், சீன அதிபர் ஷீ ஜின்பிங் அமைதியாக, ஆனால் உறுதியாக தன் விரிவாக்க கொள்கையில் தீவிரமாக உள்ளார். இதனால், புதிய பனிப்போர் அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையில் உருவாகலாம்.

மிகவும் சிக்கலான, 65 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கொரிய பிரச்னைக்கு நிச்சயமாக இரு தரப்பு பேச்சுவார்த்தை மூலம் ஒரே நாளில் முடிவு கட்ட முடியாது. எனினும், பகைவர்களாக இருந்த டிரம்ப்—கிம் இடையே நட்பை உருவாக்கி, எதிர்காலத்தில் சீனா, ஜப்பான் உட்பட பன்னாட்டு— பலகட்ட பேச்சுவார்த்தைகளுக்கு இன்றைய சிங்கப்பூர் சந்திப்பு அடித்தளமிட்டால் அதுவே மிகப்பெரிய வெற்றியாகக் கருதப்படும். இம்முயற்சியில், இரு தலைவர்களும் வெற்றி பெற்றால் இருவரும் அமைதிக்கான நோபல் பரிசைப் பெற நிச்சயமாக தகுதியுள்ளவர்களாவார்கள்.



# இனவெறி

## கறுப்பின உரிமைகளின் வெள்ளை முகம் !: மார்ட்டின் லூதர் கிங்கின் போராட்டங்களுக்குத் துணைநின்றவர்

ஆங்கிலத்தில் 'ஓவர்ஷேடோட்' எனும் ஒரு சொல் உண்டு. அதாவது, குறிப்பிட்ட ஒரு நோக்கத்துக்காக இரண்டு பேர் உழைக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அதில் ஒருவரது உழைப்பும், அதனால் அவர் பெறும் புகழும் இன்னொருவரின் உழைப்பையும் புகழையும் மறைத்துவிடும். இது அந்த இரண்டு பேருக்குமே தெரியாது. வரலாற்றைக் கொஞ்சம் தள்ளி நின்று பார்த்தால்தான், அந்த வித்தியாசம் புரியும்.

ராபர்ட் எஃப்.கென்னடி விஷயத்திலும் இதுதான் நடந்தது. அமெரிக்காவில் கறுப்பின மக்களுக்கான உரிமைகளைப் பெறுவதற்காகப் போராடியவர், மார்ட்டின் லூதர் கிங். அமைதிக்கான நோபல் பரிசு வென்றவர். அமெரிக்காவில் 1964—ம் ஆண்டு 'சிவில் உரிமைச் சட்டம்' நடை முறைப்படுத்தப்படுவதற்கு மிக முக்கியமான காரண மாக இருந்தவர். வெள்ளையர்களுக்கும் கறுப்பர்களுக்கும் இடையிலான வித்தியாசங்களைக் களைந்து, அனைவரையும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்று வலியுறுத்திய கிங்கை, வெள்ளையர்கள் சிலருக்குப் பிடிக்கவில்லை. எனவே, 1968—ம் ஆண்டு ஏப்ரல் 4—ம் தேதி, ஜேம்ஸ் இயர்ல் ரே எனும் வெள்ளையன் ஒருவனால், மார்ட்டின் லூதர் கிங் கொல்லப்பட்டார். அவரது 50—வது நினைவு தினத்தை இந்த ஆண்டு ஏப்ரலில் உலகம் முழுவதும் உள்ள மனித உரிமை ஆர்வலர்கள் அனுசரித்தனர். மார்ட்டின் லூதர் கிங்குக்குக் கிடைத்த கவனத்தில் சிறு பகுதிகூட, ராபர்ட் கென்னடிக்குக் கிடைக்காமல் போனது துரதிர்ஷ்டம்தான்.



அமெரிக்காவில் 'சிவில் உரிமைச் சட்டம்' நடை முறைப்படுத்தப்படுவதில் ராபர்ட் கென்னடியின் உழைப்பு அபரிமிதமானது. சொல்லப்போனால்,



# மேலாண்மை

ந.வினோத் குமார்

ராபர்ட் கென்னடியின் ஆதரவில்லாமல், மார்ட்டின் லூதர் கிங்கால் மட்டும் அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கவே முடியாது. அந்த அளவுக்கு, கறுப்பின மக்களின் போராட்டங்களுக்குத் துணை நின்றவர் ராபர்ட். அதனாலேயே, மார்ட்டின் லூதர் கிங்குக்கு ஏற்பட்ட அதே கதி, ராபர்ட் கென்னடிக்கும் ஏற்பட்டது. ஆம்ஞ்



மார்ட்டின் லூதர் கிங், கொல்லப்பட்டு சரியாக 62 நாட்களுக்குப் பிறகு, சிர்ஹான் சிர்ஹான் எனும் பாலஸ்தீனிய அமெரிக்கர் ஒருவரால் கொல்லப்படுகிறார் கென்னடி.

ஒற்றுமைகளும் வித்தியாசங்களும்

அமெரிக்காவின் துப்பாக்கிக் கலாச்சாரத்துக்கு எதிராகப் பேசிய ராபர்ட் கென்னடியின் வாழ்க்கையும், துப்பாக்கித் தோட்டாவாலேயே முடிந்தது. ராபர்ட் கென்னடியின் பெயரால் மனித உரிமை விருதுகூட வழங்கப்படுகிறது. ஆனால், அவரது 50—வது நினைவு தினத்தை, எத்தனை மனித உரிமை ஆர்வலர்கள் அனுசரிக்கிறார்கள் என்பது சந்தேகமே! இத்தனைக்கும் ராபர்ட் கென்னடி யார் தெரியுமா? அமெரிக்காவின் 35—வது அதிபராக இருந்த ஜான் எஃப்.கென்னடியின் தம்பி!

அமெரிக்காவின் சிவில் உரிமைப் போராட்ட வரலாற்றைப் படித்தால், மார்ட்டின் லூதர் கிங்கும், ராபர்ட் கென்னடியும் ஒரே நோக்கத்துக்காக, ஆனால் வேறு வேறு திசையில் பயணித்து, இறுதியில் அடைய வேண்டிய இலக்கை அடைந்திருக்கிறார்கள் என்பது புலனாகும்.



காந்தியின் செயல்பாடுகளால் மார்ட்டின் லூதர் கிங் உத்வேகம் பெற்றார் என்றால், அசிஸியின் புனித பிரான்சிஸ் எனும் கத்தோலிக்கப் புனிதரிடமிருந்து தனக்கான உந்துதலைப் பெற்றார் ராபர்ட் கென்னடி. சிவில் உரிமைக்காகப் போராடுவதால், தான் கொல்லப்படலாம் என்று இருவருமே எதிர்பார்த்தார்கள்.

வியட்நாம் மீதான அமெரிக்காவின் போரை இருவருமே எதிர்த்தார்கள். 'தேசத்தின் பெருவிருப்பமாகத் துப்பாக்கிகள் மாறும்போது, அதன் சமூக வளர்ச்சித் திட்டங்களின் நிலை திண்டாட்டமாகும்' என்றார் கிங். 'இந்தப் போர் மிகவும் கொடூரமான தவறு' என்றார் ராபர்ட் கென்னடி.

அடுத்த அதிபர் தேர்தலுக்காகத் தயாராகிக்கொண்டிருந்த சூழலில் ராபர்ட் கென்னடி இதைச் சொன்னார் என்பது இங்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டியது. நாடே, அடுத்த அதிபராக ராபர்ட் கென்னடி வந்து விடுவார் என்று எதிர்பார்த்த சூழலில், வியட்நாம் போருக்கு எதிராக இப்படி ஒரு கருத்தை அவர் தெரிவிப்பார் என்று அவரது அரசியல் எதிரிகள்கூட கற்பனை செய்திருக்க மாட்டார்கள்.

சகோதரத்துவத்துக்கு அங்கீகாரம்

சிவில் உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்ட இவர்கள் இருவருக்குமான பழக்கம் என்பது வெறும் 8 ஆண்டுகள்தான். அதிலும் கடைசி 4 ஆண்டுகளில்தான்,ஒரே ஒரு முறை மட்டும்,இருவரும் நேருக்கு நேராகச் சந்தித்துக்கொண்டார்கள். அதுவும் சில நிமிடங்கள்! மற்றபடி, கடிதங்கள், தொலைபேசி, பத்திரிகையாளர்கள், தனிப்பட்ட உதவியாளர்கள் மூலமே இருவருக்குமான உரையாடல் நிகழ்ந்தன.

கறுப்பர்களுக்கான உரிமையை நிலைநாட்டுவதில், மார்ட்டின் லூதர் கிங், அகிம்சை முறையைப் பின்பற்றினார். ஆனால் அதுவே, பெரும் வன்முறையாக அமெரிக்க அரசியல்வாதிகளால் பார்க்கப்பட்டது. இந்நிலையில், அவருக்கு நோபல் பரிசு கிடைத்தவுடன், கிங்கைப் பாராட்டிய முதல் நபர் ராபர்ட் கென்னடிதான். 'இவருக்கு நோபல் பரிசு கிடைத்திருப்பதன் மூலம் அமெரிக்காவின் சகோதரத்துவத்துக்குப் பெரிய அங்கீகாரம் கிடைத்திருக்கிறது' என்றார் கென்னடி.

கிங்கைவிட நான்கு வயது மூத்தவரான கென்னடியின் மனதில் கிங்கைப் பற்றி உயர்வாக வைத்திருந்ததன் விளைவே, இந்தச் சொற்கள். அதேபோல, இதர கறுப்பினத் தலைவர்கள் ராபர்ட் கென்னடியின் நடவடிக்கைகளை அரசியல் ஆதாயத்துக்கான விஷயமாகச் சந்தேகப்பட்டபோது, 'அவருக்குள் ஒரு நல்ல மனிதன் ஒளிந்திருக்கிறான். அவனை நாம்தான் வெளிப்படுத்த வேண்டும்!' என்றார் கிங்.

மார்ட்டின் லூதர் கிங், கறுப்பர்களுக்காக உழைத்தார். அதனால் வெள்ளையர் ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டார். கறுப்பர்களுக்காகப் பாடுபட்ட ராபர்ட் கென்னடி கொல்லப்பட்டதோ ஒரு பாலஸ்தீனியரால். அதற்குக் காரணம் இஸ்ரேலின் 'ஆறு வாரப் போர்' நடவடிக்கையை அவர் ஆதரித்தார் என்பதுதான். ராபர்ட் கென்னடி இறந்தபோது அதை ஒரு இளைஞனின் பைத்தியக்காரச் செயல்பாடாக அமெரிக்கா பேசியது. உண்மையில், வன்முறைக்கும் பாகுபாட்டுக்கும் எதிரானவர்கள் கொல்லப்படும்போது ஒட்டுமொத்த உலகத்தின் பைத்தியக்காரச் செயல்பாடாகவே அது உருவாகிறது!

# தேவி!

வானுலகில், பூவுலகில், வேறெங்கும்
தேடினாலும் கிடைக்காத

## indian express foods

## இட்லி / தோசை மா

## இலண்டனில் மட்டுமே கிடைக்கும்



indian express foods

+44 20 8133 5144

+44 7878 89 68 37

# வாருமோ?
# மனிதாபிமான

## தூத்துக்குடி குரல்களின் அர்த்தம் என்ன?

குறைந்தது ஈராயிரம் ஆண்டுகள் வாணிப நகரம் தூத்துக்குடி. தமிழர்கள் நினைவு சார்ந்து தூத்துக்குடியின் வரலாற்றை மூன்று காலகட்டங்களாகப் பிரிக்கலாம் என்று நினைக்கிறேன்.

டச்சுக்காரர்கள், பிரிட்டிஷ்காரர்கள் என்று உலகளாவிய ஒரு பெரும் வாணிப பட்டாளத்துடனான உறவில் திளைத்திருந்தது. தூத்துக்குடிக்கு அந்தப் பக்கத்திலுள்ள காயல்பட்டினம் போன்ற பாரசீகக் கலாச்சாரத்தின் மிச்சங்கள் தங்கிய ஊரும், ஆதிச்சநல்லூர் போன்ற தொல்லியல் எச்சங்கள் நிறைந்த ஊரும் பண்டை தூத்துக்குடியின் வாணிப மரபின் எல்லை கடந்த வேர்களுக்கான அத்தாட்சிகள்.




முதலாவது காலகட்டத்தில், அது பண்டைத் தமிழ்நாட்டின் முத்து நகரமாக இருந்தது. நம் ஞாபகங்களின் நினைவடுக்குகளில் ஒரு தொன்மமாகப் பதிந்திருக்கும் அந்த முத்து நகரமானது, அரேபியர்கள், போர்த்துகீசியர்கள்,

இரண்டாவது காலகட்டத்தில், அது இந்திய சுதந்திரப் போராட்டக் குரல்களை எதிரொலிக்கும் எழுச்சி மிக்க சுதேசி நகரமாக உருமாற முனைந்தது. இங்கிருந்து இலங்கைக்குக் கப்பல்களை இயக்கியது ‘பிரிட்டிஷ் இந்திய ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி’.

# அரசியல்

**சமஸ்**

பிரிட்டிஷாரின் வியாபார ஏகாதிபத்தியத்துக்கு எதிரான சிதம்பரனாரின் ‘சுதேசி நாவாய் சங்கம்’ இங்குதான் பிறந்தது. அவருடைய ‘எஸ் எஸ் காலியோ’, ‘எஸ் எஸ் லாவோ’ கப்பல்கள் இங்கிருந்தே கொழும்புக்குப் புறப்பட்டன. தொழிற்சங்கம் எனும் சொல் சாமானியர்களின் புழக்கத்தில் வந்திராத நாட்டில் 1908—ல் பிரிட்டிஷாரின் ‘கோரல் நூற்பாலை’க்கு எதிராக ஊரே திரண்டு தொடர் வேலைநிறுத்தம் நடத்தி,

மூன்றாவது காலகட்டத்தில், இன்று அது பின்காலனிய யுகத்தின் தொழில் நிறுவனங்களுடைய வேட்டை நகரமாகி இருக்கிறது. சுதந்திரத்துக்குப் பிந்தைய இந்திய ஆட்சியாளர்கள் முன்னெடுத்த தொழில் கொள்கைக்கான பரிசோதனைக் களங்களில்




தொழிலாளர் உரிமையை நிலைநாட்டிய நகரமும் இது. அந்தக் காலகட்டத்திய தூத்துக்குடியின் வாணிபச் செல்வாக்கை சொல்லும் சின்னங்கள் நகரின் பழைய துறைமுகம் பகுதியில் இந்தோ சார்சனிக் கட்டிடங்களாக நிற்கின்றன. கலாச்சாரப் பரிவர்த்தனைகளின் செழுமையை தூத்துக்குடிக்கு இந்தப் பக்கத்திலுள்ள மணப்பாடு கிராமத்துக்குச் சென்றால், தேவாலயங்கள், மாளிகை வீடுகள், ஸ்தூபிகளில் பார்க்கலாம்.

ஒன்றாக தூத்துக்குடியையும் சொல்லலாம். அனல் மின் நிலையங்கள், தொழிற்பேட்டைகள், தனியார் — அரசு கூட்டுறவில் உருவாக்கப்பட்ட முன்னோடி நிறுவனங்களில் ஒன்றான ‘ஸ்பிக்’, பன்னாட்டு தொழில் நிறுவனங்களுக்கான முன்னோடி நிறுவனங்களில் ஒன்றான ‘ஸ்டெர்லைட்’, உள்ளூரிலிருந்து சர்வதேசம் நோக்கி விரியும் ‘கனிம ஏற்றுமதி’ என்று இந்திய அரசுக்கு சாத்தியப்பட்ட எல்லாத் தொழில் கற்பனை வகைமையிலும்

தொழிற்சாலைகளை உள்வாங்கி அது நிற்கிறது.

இங்கு ஒரு கேள்வி. இன்று நாம் பார்க்கும் தூத்துக்குடிதான் ஒரு வாணிப நகரம் என்றால், முந்தைய இரு காலகட்டத்திய தூத்துக்குடியை என்ன பெயரிட்டு அழைப்பது?

தூத்துக்குடியின் பல நூற்றாண்டு அடையாளமாக இருந்த முத்துக்குளியல் இன்று தூத்துக்குடியில் கிடையாது. தூத்துக்குடி — ராமேஸ்வரம் கடல் பகுதியை 'இந்தியக் கடல் உயிர்க்கோளக் காப்பகப் பகுதி' என்று வரையறுக்கிறது அரசு. இந்திய




தூத்துக்குடி மக்களின் 'ஸ்டெர்லைட் ஆலை'க்கு எதிரான 100 நாள் போராட்டம், போலீஸார் நடத்திய துப்பாக்கிச் சூடு, 13 உயிர் பலி, கலவரம், நூற்றுக்கும் மேற்பட்டோரின் காயம், அங்கு நிலவிய கொந்தளிப்பான சூழல் இவ்வளவையும் வரலாற்றுப் பின்னணியில் பார்ப்பவர்கள் ஒரு விஷயத்தைப் புரிந்துகொள்ளலாம். வரலாறு நெடுகிலும் தொழில் வளர்ச்சியோடு இயல்பாகத் தன்னைப் பிணைத்துக்கொண்டிருக்கும் நகரமாக அது இருந்திருக்கிறது. பல இனங்கள், கலாச்சாரங்களுடன் ஊடாடும் நகரமாக அது இருந்திருக்கிறது. அதேசமயம், சுரண்டல், ஏகாதிபத்தியத்துக்கு எதிராகத் தொடர்ந்து போரிட்டபடியும் நிற்கிறது.

எவர் ஒருவரும் கற்காலத்துக்குத் திரும்ப கனவு காண்பதில்லை. தூத்துக்குடி மக்கள் இன்று 'ஸ்டெர்லைட் ஆலை'க்கு எதிராக எழுப்பும் குரல் உண்மையில் ஒரு ஆலைக்கு எதிரானது அல்ல. அது தொழில் சூழலுக்கு எதிரானதும் அல்ல. ஒரு ஆலைக்கு எதிரானப் போராட்டத்தில் எப்படி லட்சக்கணக்கான மக்கள் திரள்வார்கள்? எல்லா அச்சுறுத்தல்களையும் தாண்டி எது மக்களை வீதியில் கொண்டுவந்து நிறுத்துகிறது?

அளவில் மட்டும் அல்லாது, சர்வதேச அளவிலும் உயிரோட்டமான பகுதிகளில் ஒன்றாகக் கருதப்படும் மண்டலம் இது. சுரப்புன்னைக்காடுகள், காயல்கள், கடல் கோரைப்படுகைகள், பவளப்பாறைகள், எங்குமில்லாக் கடல் தாவரங்கள் எனப் பல்லுயிர்ச்சூழல் நிறைந்த இந்தப் பகுதி இன்று பெரும் சீரழிவைச் சந்தித்திருக்கிறது. தூத்துக்குடி முத்தில்லா நகரமாக மாறியிருப்பது அதன் வெளிப்பாடுகளில் ஒன்று. முத்துச்சிப்பிகள், கடல் வெள்ளரிகள், சங்குப்பூக்கள் யாவும் அருகிவிட்டன. கடல் சூழல் சிதைவிலிருந்து நிலச் சூழல் சிதைவை யூகித்துக்கொள்ளலாம். நிலமும் நீரும் காற்றும் நஞ்சாகிவிட்ட நிலையிலேயே வீதியில் இறங்குகிறார்கள் மக்கள்.

நம்முடைய அரசானது 'வளர்ச்சி'யின் பெயரால், கடந்த காலங்களில் அங்கு நூற்றுக்கணக்கான தொழிலகங்களைக் கொண்டுவந்தது. அவை உருவாக்கிய தொழில் கலாச்சாரம் மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தியிருக்கிறதா என்றால், மேம்படுத்தியிருக்கிறது; ஆனால், சூழலை அதற்கான விலையாகச் சுரண்டியிருக்கிறது. தங்களுடைய வாழ்வாதாரம் நாசப்படுத்தப்பட்டிருப்பதை இன்று மக்கள் உணர்கிறார்கள். விளைவாகவே







இதுநாள்வரை டாம்பீகமாக உச்சரிக்கப்பட்ட ‘வளர்ச்சி’யை அவர்கள் குற்றவாளிக் கூண்டில் ஏற்றியிருக்கிறார்கள்.

இது மரபார்ந்த தொழில் கொள்கைக்கும் நவீன தொழில் கொள்கைக்கும் இடையிலான முரண்களின் வெடிப்பு மட்டும் அல்ல. மரபையும் நவீனத்தையும் சேர்த்து அனுசரிக்க வேண்டிய தேவைக்கான நிர்ப்பந்தம். நவீனத்தைக் கடக்கும் பார்வை நமக்குத் தேவைப்படுகிறது. இன்று தூத்துக்குடியில் நிர்வகிக்கப்படும் எந்தத் தொழிற்சாலையையேனும் சூழலை நாசப்படுத்தும் இதே கட்டமைப்புடன், பிரிட்டனிலோ, ஜெர்மனியிலோ நடத்த முடியுமா என்று ‘நவீன வளர்ச்சிக்கான வழக்கறிஞர்கள்’ தங்களைக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

ஒரு ‘ஸ்டெர்லைட் ஆலை’யை மூடுவதால் மட்டுமே இந்தப் பிரச்சினையை நாம் முடிவுக்குக் கொண்டுவந்துவிட முடியாது. உற்பத்திப் பெருக்கத்துக்கும் நுகர்வுப் பெருக்கத்துக்கும் ‘வளர்ச்சி’ என்று பெயரிட்டு அதுதான் முன்னேற்றம் என நம்பும் மூடத்தனத்திலிருந்து நாம் வெளியே வர வேண்டியிருக்கிறது. மாற்று வளர்ச்சிக்கான பார்வை அல்ல; வளர்ச்சிக்கான மாற்றுப் பார்வை நமக்கு தேவைப்படுகிறது. இயற்கையைச் சுரண்டாத, மரபார்ந்த சமூகங்களின் பன்மைக் கலாச்சாரத்தை சிதைக்காத புதிய தொழில் கலாச்சாரத்தின் அவசியத்தை நாம் யோசிக்க வேண்டியிருக்கிறது. கூடங்குளம் அதையே வெளிப்படுத்தியது. நெடுவாசல் அதையே வெளிப்படுத்தியது. தூத்துக்குடியும் அதையே வெளிப்படுத்துகிறது. தூத்துக்குடிக்காரர்களின் குரல் தூத்துக்குடிக்கானது மட்டும் அல்ல!




## கை கோக்கும் காங்கிரசும் பா.ஜ.க.வும்

மகாவீரரும், கௌதம புத்தரும், காந்தியடிகளும் மனித நேயத்தின் அடிப்படையில் மானுடம் உய்வதற்கான உயர்ந்த நெறிமுறைகளை வகுத்தும் தங்களின் வாழ்வில் கடைப்பிடித்தும் வழிகாட்டிவிட்டுச் சென்றிருக்கிறார்கள்.

மானுட சமுதாயத்தை உய்விக்க வழிகாட்டிய இந்தியா, இன்று மனித உரிமைகளை அப்பட்டமாக மீறிய நாடாக குற்றவாளி கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கிறது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் காஷ்மீர் பிரச்சனையில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் ஆயுதப் படைகள் தொடர்ந்து மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருவதாகக் குற்றம் சாட்டியுள்ளது. 2016ஆம் ஆண்டு சூலை 8ஆம் தேதி அன்று பர்கான் வானி என்னும் தீவிரவாதத் தலைவர் இந்திய பாதுகாப்புப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். அதைத் தொடர்ந்து ஜம்மு—காஷ்மீர் மாநிலத்தில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது.

பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீர் பகுதியிலும் போராட்டங்கள் வெடித்தன. இப்போராட்டங்களை ஒடுக்குவதற்கு இரு நாடுகளைச் சேர்ந்த ஆயுதப்படைகள் களமிறங்கி மக்களைக் கொன்று குவித்தன.

2016 சூலை 16—ஆம் தேதி, ஐ.நா. மனித உரிமை ஆணையம் இந்திய—பாகிஸ்தான் அரசுகளின் பிரதிநிதிகளை அழைத்து காஷ்மீரில் உள்ள நிலைமையை ஆராய்வதற்கு அனுமதிக்கவேண்டும் என வேண்டிக்கொண்டபோது இந்திய அரசு இவ்வேண்டுகோளை ஏற்க மறுத்துவிட்டது. இந்தியா அனுமதித்தால் தானும் அனுமதிப்பதாக பாகிஸ்தான் அரசு கூறியது. எனவே வேறு வழியின்றி தான் கண்டறிந்த உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு ஐ.நா. மனித உரிமை ஆணையம் 2018 சூன் 14—ஆம் நாள் அளித்த விசாரணை அறிக்கையில் இந்திய ஆயுதப்படைகள் அளவுக்கதிகமான அடக்குமுறைகளையும், சட்டத்திற்குப் புறம்பான முறையிலும் செயல்பட்டு பலரின் படுகொலைக்குக் காரணமாக இருந்தது எனக் கூறி அதற்கான ஆதாரங்களையும் கொடுத்துள்ளது.





## பழ. நெடுமாறன்

இந்தியப் பாதுகாப்புப் படை பெல்லட் தோட்டாக்களைப் பயன்படுத்தி மக்களைச் சுட்டுள்ளது. ஒவ்வொரு தோட்டாவிலும் 500 முதல் 600 வரை பெல்லட் என்னும் வகை சிறு ஈய குண்டுகள் இருக்கும். தோட்டாக்களிலிருந்து சிதறும் இந்த சிறு குண்டுகள் வேகமாகப் பாய்ந்து மக்களை படுகாயத்திற்குள்ளாக்கும். முகம், கண், தலை போன்ற பகுதிகளில் இக்குண்டுகள் பாய்ந்தால் அவர்கள் உயிரிழப்பது உறுதி. ஆனால், பார்வையை இழந்துவிட்டனர். இக்குண்டுகளால் பாதிக்கப்பட்டவர்கள் பலர் மனநிலை இழப்புக்கு ஆளாகி உள்ளனர். காவல்துறை ஆய்வு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பு மக்கள் கிளர்ச்சிகளை





கூட்டத்தைக் கலைப்பதற்காகவே பெல்லட் குண்டுகளைப் பயன்படுத்துவதாக மத்திய காவல்படை கூறுகிறது.

காஷ்மீர் மாநில மனித உரிமை ஆணையம் 2016—ஆம் ஆண்டில் மட்டும் 1726 பேர் இக்குண்டுகளால் படுகாயமடைந்துள்ளனர் என்று கூறியுள்ளது. 2018 ஜனவரியில் காஷ்மீர் சட்டமன்றத்தில் முதல்வர் மெகபூபா முப்தி 6121பேர் இக்குண்டுகளால் படுகாயமடைந்ததாகவும், அதில் 728பேருக்கு கண்களில் காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அறிவித்தார். இவர்களில் ஏராளமானவர்கள் கண் ஒடுக்குவதற்குக் கடைப்பிடிக்கப்படவேண்டிய விதிமுறைகளை வகுத்துள்ளது. அந்த விதிமுறைகளில் பெல்லட் குண்டுகளும், அதைச் சுடும் ஷாட் துப்பாக்கியும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்படுவோம் என்ற அச்சமின்றி இந்திய ஆயுதப்படைகள் ஜம்மு—காஷ்மீர் மாநிலத்தில் செயல்படுகின்றன. இதற்கு அம்மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்படும் ஆயுதப்படைகளின் சிறப்பு அதிகாரச் சட்டமே காரணமாகும் (1990).

இச்சட்டம் குறித்து மறு ஆய்வு செய்வதற்காக குழு ஒன்றை உச்ச நீதிமன்றம் அமைத்தது. இக்குழு "இந்தச் சட்டம் ஒடுக்குமுறையின் சின்னமாகும். வெறுப்பு, பாகுபாடு காட்டுதல் மற்றும் அத்துமீறல் ஆகியவற்றின் அடையாளமாகும்'





எனக் கடுமையாகச் சாடியது. சர்வதேச மனித உரிமை அமைப்புகள் இச்சட்டத்தை ரத்து செய்யவேண்டுதன் மூலம் மக்களுக்கு நீதி வழங்க முன்வருமாறு ஐ.நா. மனித உரிமை ஆணையம் வேண்டிக்கொண்டது. ஆனாலும், அதன்படி நடக்க இரு அரசுகளும் முன்வரவில்லை.

ஜம்மு—காஷ்மீர் மாநிலப் பொதுப் பாதுகாப்புச் சட்டம் (1978) கொடூரமான சட்டமாகும். எத்தகைய காரணமும் கூறாமல், யாரை வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் கைது செய்யலாம். காவலில் வைத்து சித்ரவதை செய்யலாம். சிறையில் அடைக்கலாம். 2016ஆம் ஆண்டு மார்ச் முதல் 2017 ஆகஸ்ட் வரை 1000 பேருக்கும் மேலானவர்கள் இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்கள். அவர்களில் பலர் சிறுவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. காணாமல் போனவர்கள் பட்டியல் இன்னும் நீளமானது. பல இடங்களில் பலர் ஒன்றாகப் புதைக்கப்பட்ட குழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 2011—ஆம் ஆண்டில் காஷ்மீர் மாநில மனித உரிமை ஆணையம் வடக்கு காஷ்மீர் பகுதியில் இத்தகைய புதைக்குழிகளில் ஒன்றில் 574 உடல்களையும் மற்றொன்றில் 2156 உடல்களையும் கண்டுபிடித்தது. இவை குறித்து எத்தகைய நியாயமான விசாரணையும் நடத்தப்படவில்லை.

இந்தியாவில் உள்ள காஷ்மீர் மாநிலத்தில் மனித உரிமைகள் அடியோடு பறிக்கப்படுவதைச் சுட்டிக்காட்டிய ஐ.நா. மனித உரிமை ஆணையம் பாகிஸ்தான் வசமுள்ள ஆசாத் காஷ்மீரிலும் மனித உரிமைகள் மீறப்படுவதைச் சுட்டிக்காட்டிக் கண்டித்துள்ளது. ஆசாத் காஷ்மீரில் மக்பூன் தாஸ் பகுதியில் உள்ள மக்கள் அனைவரும் முன்னறிவிப்பு எதுவும் கொடுக்காமல் வலுக்கட்டாமாக வெளியேற்றப்பட்டு அந்தப் பகுதியின் நிலம் முழுவதும் சீன—பாகிஸ்தான் பொருளாதார வழித் தடத்திற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் படையினரின் மனித உரிமை மீறல்களுக்கும், அட்டூழியங்களுக்கும், படுகொலைகளுக்கும், பாலியல் வன்முறைகளுக்கும் ஆசாத் காஷ்மீர் மக்களும் ஆளாக்கப்படுகின்றனர் என ஐ.நா. மனித உரிமை ஆணையம் தனது அறிக்கையில் குற்றம் சாட்டியுள்ளது.

இந்த அறிக்கை இந்திய அரசுக்குக் கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக, "காஷ்மீரில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும்' என்பதே இந்த ஆத்திரத்திற்கு காரணமாகும். இந்திய வெளியுறவுத்துறை இந்த அறிக்கையை முழுவதுமாக ஏற்கமறுப்பதாகக் கூறியதோடு "பொய்மை நிறைந்தது. உள்நோக்கம் கொண்டது. முற்றிலும் தவறானது. இந்தியாவின் இறையாண்மை, தேசிய ஒருமைப்பாடு ஆகியவற்றை மீறும் வகையில் அமைந்துள்ளது. இத்தகைய அறிக்கைகள் ஐ.நா.நிறுவனத்தின் மீதுள்ள நம்பிக்கையை தகர்த்துவிடும். இத்தகைய




நச்சுத்தன்மை வாய்ந்த அறிக்கையின் மூலம் இந்திய அரசு மற்றும் மக்களின் மன உறுதியை அழித்துவிட முடியாது' என்று கூறியுள்ளது.

எதிர்க்கட்சியான காங்கிரசுக் கட்சியும் இந்த அறிக்கையைக் கண்டித்துள்ளது. "இந்தியாவின் இறையாண்மையையும், தேசிய நலன்களையும் இந்த அறிக்கைப் புண்படுத்தியுள்ளது. காஷ்மீரின் உண்மை நிலவரத்தை தெரிந்துகொள்ளாமலும், பயங்கரவாதிகளை ஊக்குவிக்கும் வகையிலும் இந்த அறிக்கை அமைந்துள்ளது. எனவே இந்த அறிக்கையை காங்கிரசுக் கட்சி ஏற்க மறுக்கிறது. இந்திய அரசின் நிலைப்பாட்டிற்கு காங்கிரஸ் முழுமையான ஆதரவு தெரிவிக்கிறது' எனக் கூறியுள்ளது.

2009—ஆம் ஆண்டில் மிகக் கொடூரமான போர்க் குற்றங்களையும், மனிதகுலத்திற்கு எதிரான அட்டூழியங்களையும் சிங்கள இராணுவம் புரிந்தது. ஜெனீவா உடன்பாட்டின்படி தடை செய்யப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தித் தமிழர்களைக் கொன்றுகுவித்தது. டப்ளின் நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் என்ற அமைப்பு 2010—ஆம் ஆண்டில் விசாரணை நடத்தி மேலே கண்ட குற்றச்சாட்டுகளை உறுதி செய்தது. இதன் விளைவாக ஐ.நா. செயலாளர் — நாயகமான பான்கீ மூன் விசாரணைக் குழு ஒன்றை அமைத்தார். அக்குழுவை இலங்கைக்குள் அனுமதிக்க அதிபர் இராசபக்சே மறுத்த போதிலும் பல்வேறு நெருக்கடிகளுக்கிடையே ஐ.நா. விசாரணைக் குழு தனது கடமையை நிறைவேற்றியது. சிங்கள இராணுவத்தின் மீது ஆதாரபூர்வமான பல்வேறு போர்க் குற்றங்களையும், மனித உரிமை மீறல்களையும், தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியது.

மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என ஐ.நா. மனித உரிமை ஆணையம் கூறியபோது அதை இலங்கை அரசு ஏற்க மறுத்தது. அதைபோலவே இப்போதும் காஷ்மீர் பிரச்னையில் சர்வதேச விசாரணையை ஏற்க பா.ஜ.க. அரசு மறுத்துள்ளது. அதற்கு எதிர்க்கட்சியான காங்கிரசும் ஆதரவுத் தெரிவித்துள்ளது வியப்புக்குரியதல்ல. ஏனெனில் ஜம்மு—காஷ்மீர் மாநிலத்தில் 64% மக்கள் முஸ்லிம்களாக இருந்தபோதிலும் அவர்கள் பாகிஸ்தானுடன் இணைய மறுத்து இந்தியாவுடன் இணைந்தார்கள். அப்போது காஷ்மீர் மக்களுக்கு காங்கிரஸ் அரசு அளித்த வாக்குறுதிகள் காலப்போக்கில் காற்றில் பறக்கவிடப்பட்டன. அதன் விளைவாகவே காஷ்மீரில் கொந்தளிப்பு உருவாயிற்று. காஷ்மீர் பிரச்னை முற்றியதற்கு காங்கிரசுக் கட்சி முக்கிய காரணமாகும். பா.ஜ.க. அரசு அதே பாதையைப் பின்பற்றுவதால் காங்கிரஸ் அதற்கு ஆதரவு தருகிறது.

ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் அறிக்கை வெளியானதைத் தொடர்ந்து அரசுக்கு அளித்த ஆதரவை பா.ஜ.க. திரும்பப் பெற்றதும், அங்கு ஆளுநர் ஆட்சி கொண்டுவரப்பட்டுள்ளதும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாதவை எனக் கூற முடியாது. காஷ்மீரில் சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என ஐ.நா. மனித உரிமை ஆணையம் கூறியதற்கு பதிலடியாக காஷ்மீரின் ஜனநாயகத்தை இந்திய அரசு படுகொலை செய்துள்ளது. இது பொருள் பொதிந்தது மட்டுமல்ல; கடும் எதிர்விளைவுகளை உருவாக்கக் கூடியதும் ஆகும்

# பொருள்வயிற் பிரிதல்

அ.ரோஸ்லின்

பெய்யெனப் பெய்யும் மழை
என்பது போல்
சொல்லெனச் சொன்னவுடன்
வெடித்து வடிக்க
என்னிடம் ஒன்றும்
கவிதைக் கற்பு இல்லை.

குளிர்ந்து இறங்கும்
மேகத்தாரை
காற்றுடன் மோகித்துச்
சல்லாபிக்கும்
ஆனந்தக் கூத்தை
ரசிப்பது மட்டுமே
மழைத் தருணங்களுக்கு
நான் தரும் மரியாதை
என்றிருப்பினும்
இடியையும் மின்னலையும் போல
மழைக் காற்றின்
மூர்க்க முயக்கத்தை
வியந்து சொல்லும்
விந்தையாற்றலும் என்னிடம் இல்லை

எனக்குள்
எங்கெங்கோ சிதறிக் கிடக்கும்
சின்னச்சின்ன வார்த்தைகளை
மழை முடிந்து அடங்கின பின்தான்
கோர்க்க முடிகிறது

மழையின் நினைவாய்த்
தேங்கி நிற்கும் குட்டை நீரில்
குழம்பி நிற்கிற
கூளத்தின் நடுவில் மிதக்கும்
ஒரு காட்டுப்பூ போல
எனக்குள்ளும்
மழையின் பின் நினைவாய்
ஒரு கவிதை நிற்கலாம்.
என்றாலும்
ஒரு குடை, ஒரு மங்கை
இவற்றோடு நானும் என்ற
ஓர் அமைதியான
சித்திரக் காட்சியாக
மழை நாட்கள்
எனக்குள் தீட்டிவிட்டுச் செல்லும்
சந்தோஷம்
மழை இல்லாத நேரங்களிலும்
சாரல் தெளித்துவிட்டுப் போகும்

# மழைக்குப்பின் பூக்கும் சித்திரம்

மூங்கில்களுக்கிடையே
வெளிச்சப்புள்ளியென நீ கடந்து சென்றதைக்
கண்களில் நிறைத்து
முகிழ்த்து இயம்புகிறது என் திசைவழி

வயல் வெளியின் பசுமையொத்து,
நிர்பந்தித்தலுடன் கிடக்கிறது என் மௌனம்

பிரிவின் ரேகை படிந்த வார்த்தைகளை
நம் சேய்களோடு முணுமுணுத்தபடி
கடந்து செல்கிறது களிப்பற்ற பொழுது

நீயற்ற நம் நிலத்தினை
நீயற்ற நம் நதியினை
நீயற்ற நம் இரவினை
அழித்தொழிக்காமல் பிணைத்திருக்கிறது
எமக்கு உணவாகும் உன் பிரயாசத்தின் குருதி

நீ கடந்து சென்ற ஸ்தலமெங்கும்
முளைத்தெழும்பிப் படர்கிறது
உன் விளைவித்தல்

ஒரு நீரோட்டத்தினைப்போல்
நிகழ்ந்திருக்கும் உன் நகருதலில்
கானல் வரிப்பாடலொன்றை இசைக்கும்
தன் மீட்பின் அனுமானங்களுடன்
இடும்பை விழையாப் பறவை

ரமணி

# கோயில் யானை

வறண்ட பாலைநிலப் பாதையிலும்
வளம் கொழித்த கானகப்
பாதையிலுமாக
நெடுந்தூரப் பயணத்தில்
பலம் பொருந்திய தலைவனாகத்
தன் கூட்டத்தார்க்கு வழிகாட்டிய
கம்பீரத் தந்தம் கொண்ட அவ்வானை
அன்பெனும் அங்குசத்துக்குக்
கட்டுப்பட்டு
கொடிமரத்தருகே தானுமொரு
கொடிமரமாய் மாறிப்போய்
கோயில் யானை கோலம் கொண்டது

வந்துபோவோர் தரும்
ஐந்துக்கும் பத்துக்கும்
நீட்டிய அந்தத் துதிக்கையால்தான்
அடையாளமின்றித் திரிந்த பலருக்கும்
மாலையிட்டு
மரியாதை சேர்த்திருக்கிறது.

எவர்மீதும் நிலைகுத்தாமல் அலைபாயும்
அந்தச் சிறிய கண்களில்
வாஞ்சையுடன் வழிகிற ஒரு குறுநகை
எல்லோருக்குமானதாகவே
எப்போதும் ஒளிந்திருக்கும்

எப்போதாவது பிளிரும்
அவ்வானையின் சத்தத்துக்கு
தனி மகத்துவம் இருப்பதாய்
பலரும் பேசிக் கொள்கிறார்கள்

'இருந்தாலும் ஆயிரம் பொன்!
இறந்தாலும் ஆயிரம் பொன்!'
எனும் பொன்மொழியைத்
தன் மொழியாக்கிவிட்ட பெருமிதத்தை
ஊரார் கதைகதையாகப்
பேசிக் கொண்டிருக்கிறார்கள்

நின்றதும்
நடந்ததும்
கிடந்ததுமான
நினைவுகளின் வழியே
அக்கோயிலின் சிறுதெய்வ வரிசையில்
தானுமொரு சிலையாகி நிற்போமனும்
ரகசியம் அறிந்ததான பாங்குடன்
திறந்த விழிகளுடன்
கோயில் மண்டபத்தில்
சடலமாய்க் கிடக்கிற அவ்வானையை
உறவுமுறைச் சொல்லிச்
சத்தமாக அழைக்கவியலாதவொரு
உள்ளத்தின் விம்மல்
கண்களைக் குளமாக்குகிறது!

**கொற்றவன்**

ராஜு முருகன் இயக்கத்தில், ஜீவா, நடாஷா சிங் நடிப்பில் உருவாகிவரும் 'ஜிப்சி' திரைப்படம் காரைக்கால் பகுதியில் படமாக்கப்பட்டு வருகிறது. தமிழகம் மற்றும் வட மாநிலப் பின்னணியில் பயணம் சார்ந்த கதைக்களமாக உருவாகி வரும் இப்படத்தின் பாடல்கள், முக்கிய காட்சிகள் என பெரும்பகுதியை காரைக்காலில் படமாக்கி வருகிறார் இயக்குநர் ராஜு முருகன். படம் குறித்து அவர் கூறும்போது, "காரைக்கால் மற்றும் சுற்றியுள்ள கிராமங்கள் இந்தக் கதைக்களத்துக்கு மிகவும் பொருத்தமாக உள்ளன. அதிகம் சொல்லப்படாத கதையுடன் ரசிகர்கள் நெஞ்சம் நிறைக்கும் படமாக உருவாகிறது ஜிப்சி" என்கிறார்.



## நிறைவான ஜிப்சி?

## நினைவுகளில் ஜிப்சி?



## இன்றைய நடிகையர் திலகம்!

## அன்றைய நடிகையர் திலகம்!

`நடிகையர் திலகம்' என்றாலே நம் எல்லோருக்கும் நினைவு வருவது மறைந்த மாபெரும் நடிகை `சாவித்திரி'. ஆனால், தன்னை மீம்ஸ் போட்டு கேலி செய்தவர்களுக்குத் தனது அசாதாரணமான நடிப்பால் அனைவரையும் `நாக் அவுட்' செய்திருக்கும் கீர்த்தி சுரேஷ், சாவித்திரியின் மறு உருவமாய் மாறி, இந்தப் படத்தின் வெற்றிக்குக் காரணமானார். இந்தியிலும் 'பயோ பிக்' படங்கள் நடிப்பதற்கு கீர்த்திக்கு வாய்ப்புகள் வந்தவண்ணம் இருக்கின்றன. ஆனால், சாவித்திரியாக வாழ்ந்ததே போதும். என் திரையுலக வாழ்வில் இந்தப் படம் போல் வேறெதுவும் வராது. எனவே பயோ பிக் படங்கள் இனி நான் செய்ய மாட்டேன். சாவித்திரியாகவே மக்கள் மனதில் இருக்க விரும்புகிறேன்' என உருக்கமாகச் சொல்லியிருக்கிறார் கீர்த்தி.

குழந்தைகளுக்கு தற்காப்புக் கலை கற்றுக் கொடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி எடுக்கப்பட்டுள்ள 'எழுமின்' படத்தின் ட்ரெய்லர் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்ட விஷால், "நான் ஆக்ஷன் ஹீரோ என சொல்லிக்கொள்ள இனிமேல் வெட்கப்படுவேன். உள்ளபடியே நாங்க ஜீரோ! உண்மையில், இதைக் கொடியசைத்துத் தொடங்கி வைக்க ஜாக்கிசான் தான் வந்திருக்க வேண்டும். நாங்கள் வந்திருக்கக் கூடாது. நான் ஹீரோவாக நடிக்க வாய்ப்பு கிடைத்தபோது, உடல் நெகிழ்வுக்காக டேக்வாண்டோ கற்றுக்கொண்டேன். ஆனால், இவர்கள் முன்னால் அது கால் தூசிக்குச் சமம். இந்தப் படத்தின் ட்ரெய்லரைப் பார்த்த பிறகு, மறுபடியும் தற்காப்புக் கலை கற்றுக்கொள்ள வேண்டும் எனத் தோன்றுகிறது" என்று உருகியிருக்கிறார்.



## 'உள்ளபடியே நாங்க ஜீரோ!'

## உண்மையை உரக்கச் சொன்ன ஹீரோ!



## தனித்துவமான சமந்தா!


## தனியாக சமந்தா!

தமிழ், தெலுங்கு என முன்னணி நாயகியாக வலம் வரும் சமந்தா, திருமணத்துக்கு பிறகும் முன்னணி கதாநாயகியாக வலம் வருகிறார். அவரது நடிப்பில் இந்த ஆண்டின் முதல் பாகத்தில் வெளியான ரங்கஸ்தலம், இரும்புத்திரை, நடிகையர் திலகம் என்று அடுத்தடுத்து 3 படங்களும் வெற்றி பெற்றன. சமந்தா நடிப்பில் அடுத்ததாக சீமராஜா, சூப்பர் டீலக்ஸ் மற்றும் யூ—டர்ன் உள்ளிட்ட படங்கள் தயாராகி வருகின்றன. இதில் யு—டர்ன் படத்தின் மூலம் கதாநாயகிக்கு முக்கியத்துவம் உள்ள கதையில் சமந்தாவும் இணைந்திருக்கிறார். மேலும் அடுத்தடுத்த படங்களிலும் கதாநாயகர்களுக்கு ஜோடியாக அல்லாமல், கதாநாயகிக்கு முக்கியத்துவம் தரும் படங்களில் நடிக்கவே ஆர்வம் கொண்டிருப்பதாக சமந்தா தெரிவித்திருக்கிறார்.

# மங்காத தமிழென்று

**#தமிழ்தேசியம்: தமிழ்நாட்டின் இன்றைய தேவை என்ன தேசியம்?**

தமிழகத்தின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்ற முழக்கங்கள் அதிகரிக்கும் போதெல்லாம், தமிழ் தேசியம் என்ற கோஷமும் ஓங்கி ஒலிப்பது பல்வேறு காலகட்டங்களில் நடந்துகொண்டிருக்கிறது. சமீபத்தில், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக் கோரி நடைபெற்ற போராட்டங்களின்



தொடர்ச்சியாகவும் அத்தகைய கோஷங்கள் ஒலித்தன. இந்த நிலையில், தமிழ் தேசியம் தொடர்பாக பல்வேறு ஆர்வலர்களின் கருத்துக்கள், வெளியிடப்படுகின்றன.

ஒரு பெரியார்—அண்ணா கால தி.(மு).க.காரரின் மகனாகப் பிறந்த காரணத்தால் நான் பல நன்மைகளைப் பெற்றேன் என்று உறுதியாக நினைக்கிறேன். பகுத்தறிவு, சுயமரியாதை, பெண் விடுதலை, மூட நம்பிக்கைக் களைதல் என பல நல்ல சிந்தனைகளை, செயல்பாடுகளைப் பெற அது எனக்கு அச்சாரமாய் அமைந்தது. இவை எல்லாவற்றையும் விட பார்ப்பனீய ஆதிக்கம் எனும் சமூக, கலாசார, பொருளாதார, அரசியல் ஆக்டபசை இனம் கண்டிட, எதிர்த்திட, எடுத்தெறிந்திடவும் பெரிதும் உதவியது.

இந்த விழிப்புணர்வு அன்றைக்கு கிடைக்காமல் போயிருந்தால், இன்றைக்கு பார்ப்பனர் உயர்ந்தவர், அவர் வணங்கும் தெய்வங்கள் உயர்ந்தவை, அவர் ஓதும் வேதம் உன்னதமானது என்று உளறிக்கொண்டிருந்திருப்பேன். காக்கி நிக்கர் போட்டுக்கொண்டு, மராட்டிய பார்ப்பனர்களின் புகழ் பாடிக் கொண்டிருந்திருப்பேன். மனுதர்ம மடமை, சாதீய வெறி, இனவேற்றுமைச் சதி, அதிகாரத் திமிர், அடக்கியாளும் அகந்தை, முதலாளித்துவ காமம் என கட்டமைக்கப்பட்டிருந்த

சங்கே

# முழங்கு!

சுப. உதயகுமாரன்

சமூக ஏற்பாட்டை எந்த விதமான கேள்வியும் இன்றி ஏற்றுக்கொண்டிருப்பேன்.

தீண்டாமை (untouchability), அதைவிடக் கொடுமையான காணாமை (unseeability) போன்றவை இயற்கை விதிகளாகத் தோற்றமளித்திருக்கும். இவை இரண்டையும் விட மோசமானது நம்பாமை (unbelievability) — தங்களால் மட்டுமே சிந்திக்க, செயல்பட, தீர்மானிக்க, நடத்த முடியும்; வேறு யாராலும் தங்களைப் போல் இயங்க முடியாது; மற்றவர்கள் எதிர்ப்பை ஏற்றுக்கொள்ள இயலாது எனும் தான்தோன்றித் தத்துவத்தை தர்க்கரீதியாகப் பார்த்திருக்க மாட்டேன்.



"திராவிடத்தால் வீழ்ந்தோம்" என்று அறிஞர் குணா சொல்வது புரிகிறது என்றாலும், திராவிடத்தால் வாழ்ந்தோம் என்பதையும் மறுப்பதற்கில்லை. காங்கிரஸ் வல்லாதிக்கத்தை எதிர்க்க, பிற்போக்கான சமுதாயத்தைக் கேள்வி கேட்க, அதன் ஏற்பாடுகளை மாற்றியமைக்க பெரியாரியம் உண்மையிலேயே உதவியது.

பெரியார் கையாண்ட சில சொற்கள், சிந்தனைகள், கருத்துக்கள், முடிவுகள், நடவடிக்கைகள், சமரசங்கள் தற்போது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவையாக மாறி இருக்கலாம். காலமும், சூழலும், தேவையும் மாறும்போது, கருத்துக்கள் மாறுவதில் வியப்பேதும் இருக்க முடியாது.

இன்னும் பழைய பெரியாரை, அவரின் பழைய கொள்கைகளை கட்டிக்கொண்டு இழுப்பது தேவையற்றது. பெரியாரிடமிருந்து தேவையானவற்றை எடுத்துக்கொண்டு, தேவையற்றவற்றை விட்டுவிடுவதுதான் அறிவுடைமை.

முன்னாள் தலைவர்கள் இட்ட அஸ்திவாரங்களின் மீது இந்நாளையத் தேவைக்கு ஏற்றாற்போல கட்டிக்கொள்வதுதான் சிறப்பு. இந்தப் படைப்பாற்றலில், புத்தாக்கத்தில் கவனம் செலுத்தவேண்டுமே தவிர, இன்றைய நாளில் நின்று கொண்டு கழிந்த நூற்றாண்டு நிகழ்வுகளை விமர்சிப்பதும், இங்கே நின்றவாறே காலனி ஆதிக்க காலத்து அரசியலை அலசுவதும் நமது தற்போதைய தேவைக்கு பெருமளவில் உதவும்



விடயங்களல்ல என்பது என் எண்ணம். வீடு தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கும்போது, வீண் பேச்சு பேசிக்கொண்டிருப்பது போலவே எனக்குத் தோன்றுகிறது.

பெரியார் கன்னடரா, தமிழரா எனும் விவாதம் எப்படி நமக்கு உதவும் என்பதும் எனக்குப் புரியவில்லை. தமிழரை மட்டும்தான் தலைவராய் ஏற்றுக் கொள்வோம், ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றால், நாம் போற்றுகின்ற புத்தன், ஏசு, நபிகள், மார்க்ஸ், லெனின், காந்தி, அம்பேத்கர் யாருமே தமிழர் அல்லவே. இன்றையச் சூழலில் ஒரே ஒரு தமிழ் தலைவர் வருவார், அவர் ஒரே ஒரு தமிழ் புத்தகம் தருவார், ஒரே ஒரு தமிழ் கொள்கைக் கூறுகளை அருள்வார், நாம் எல்லாம் சுபிட்சத்தை நோக்கி சுகமாக நடப்போம் என்று கனவு காண்பது மடமையிலும் மடமை.

*யார் தமிழர்?*

இப்போது யார் தமிழர் எனும் கேள்வி எழுகிறது. 'யார் தமிழர்' என்பது 'சுத்தமான தமிழ் எது' என்பது போலவே ஒரு பெரியப் பிரச்சினை. நாங்கள் நாகர்கோவில்காரர்கள், எங்கள் தமிழ்தான் உண்மையான தமிழ் மொழி என்கிறோம். வட தமிழ்நாட்டு மக்கள் "என்னய்யா, மலையாளம் போல பேசுகிறீர்களே" என முகம் சுளிக்கின்றனர்.

சென்னைவாசி பேசுவது தமிழா என்று கோவைக்காரர்கள் குமுறுகிறார்கள். இது போன்ற நிலைதான் தமிழர் யார் என்று வரையறுப்பதிலும் நிலவுகிறது. தமிழ் நாட்டில் வாழ்கிறவர் எல்லோரும் தமிழரா? தமிழ் மொழி பேசுகிறவர் அனைவரும் தமிழரா? வீட்டிலே தெலுங்கு, கன்னடம், மலையாளம் பேசினாலும், வெளியே வந்து தமிழ் பேசிவிட்டால் போதுமா என்று பல கேள்விகள் எழுகின்றன.

தன்னுடைய அடையாளம் பற்றிக் கருத்து தெரிவித்த பாகிஸ்தானிய தலைவர் அப்துல் வாலி கான் பேசும்போது, "நான் கடந்த ஐம்பது வருடங்களாக பாகிஸ்தானியாக இருக்கிறேன், ஐநூறு வருடங்களாக முஸ்லிமாக இருக்கிறேன், ஆனால் ஐயாயிரம் வருடங்களாக பட்டானாக இருக்கிறேன்" என்றார். அதுபோல நாமும் அறுபது வருடங்களாகத்தான் இந்தியராக இருக்கிறோம். ஆனால் ஆறாயிரம் ஆண்டுகளாக தமிழராக வாழ்கிறோம்.

இன சுத்தம் இன்றைய உலகில் சாத்தியமா என்பதை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும். நாகரீகத்தோடு இன்னும் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளாத பழங்குடிகளில் மட்டும்தான் இன சுத்தமான மக்களை பார்க்க முடியும். நமது தமிழ்க்குடி வந்தவன், போனவன், தங்கியவன், தயங்கி நின்றவன், கடந்து சென்றவன் எல்லாம் ஏறி மேய்ந்து கலப்படமாகிவிட்ட ஒரு

சமூகமல்ல என்பது உண்மை.

அமெரிக்காவிலே, ஆஸ்திரேலியாவிலே சிலர் சொல்வது போல நான் *50* சதவீதம் ஐரிஷ், *30* சதவீதம் ஜெர்மன், *20* சதவீதம் பூர்வீகக்குடி என்றெல்லாம் நாம் சொல்வதில்லை, சொல்லத் தேவையும் இல்லை. அதே நேரம் நாமெல்லாருமே *100* சதவீதம் சுத்தமான, கலப்பே இல்லாத அக்மார்க் தமிழர்கள் என்பதற்கும் உத்தரவாதம் கிடையாது. யார் யாரோ இங்கே வந்து நம்மை ஆண்டிருக்கிறார்கள். எவரெவர் வாழ்க்கையில் என்னென்ன நடந்தது என்பது யாருக்கும் தெரியாது.



இன சுத்தம் பார்க்கும்போது மாற்று மொழி பேசுகிறவர்; கிறித்தவர், இஸ்லாமியர் போன்ற சிறுபான்மை மதத்தவர்; வேறு இடங்களிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள் என எல்லோரும் தள்ளப்பட்டால் வேறு யார்தான் எஞ்சி இருப்பார்கள்? இந்த இன சுத்த சித்தாந்தம் எவ்வளவு ஆபத்தானது, என்னென்ன தீங்குகளை ஏற்படுத்தி இருக்கிறது என்பதை பல நாட்டு வரலாறுகளில் நாம் பார்க்கிறோம்.

அப்படியானால் தமிழகத்தை வேற்று இனத்தவர்களுக்குத் திறந்து விட்டுவிட்டு வேடிக்கை பார்க்க வேண்டுமா? இல்லை. இன சுத்த சித்தாந்தத்திற்குள் சிக்கிக் கொள்ளாமல் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்.

நமது அடையாளத்தை எப்படி அமைத்துக் கொள்வது என்பது மிக முக்கியம். மலையாளிகள், சிங்களர் மீதான வெறுப்பின் மீது, கோபத்தின் மீது கட்டமைப்பதா? அல்லது நமது பண்டைய புராணங்களின் மீது, வரலாற்றுப் பெருமைகளின் மீது, கலாசார குணநலன்களின் மீது ஏற்படுத்திக் கொள்வதா? அல்லது இன்றைய யதார்த்தம், நாளையத் தேவைகளைக் கருத்திற்கொண்டு வடிவமைத்துக் கொள்வதா? இன அடையாளம் ஒரு வளையாத விறைப்பான பாசிசக் கொள்கையாக இருக்க வேண்டுமா அல்லது மென்மையான, மிருதுவான குழுக் குறியீடாகத் திகழ வேண்டுமா?

தமிழன், தமிழச்சி என்பவர் யார்? தன்னை தமிழ் மகனாக/மகளாக, தமிழ் கூறும் நல்லுலகின் அங்கமாக உணர்வுபூர்வமாகப் பார்க்கிற, தனது தமிழ் இனத்தின் சிறப்புக்கு, உயர்வுக்கு, விடுதலைக்கு தன்னால் இயன்ற வழிகளில் எல்லாம் உழைக்க முன்வருகிறவரே தமிழன், தமிழச்சி எனக் கொள்ளலாம் என்பது என் எண்ணம்.

இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் தென்னாப்பிரிக்கா, மலேசியா, பினாங்கு, மொரீஷியஸ் நாடுகளில் ஆங்கிலேயரால் குடியமர்த்தப்பட்ட தமிழர்களின் இன்றையத் தலைமுறையினர், தமிழில் பேசவோ, எழுதவோ முடியாதிருப்பினும், தங்களைத் தமிழர்களாகவே உணர்கின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் வீடுகளில்கூட அந்தந்த நாட்டு மொழிதான் பேசுகிறார்கள். அதனால் அவர்களை தமிழரல்லர் என்று ஒதுக்கிவிட முடியாது. இது தமிழ் பேச, படிக்கத் தெரியாத மூன்றாம் தலைமுறை

புலம்பெயர் ஈழத் தமிழர்களுக்கும் பொருந்தும்.

எது தமிழ்த் தேசியம்?

இன சுத்தம் இயலாத ஒன்றாகிப் போகும்போது, தமிழகத்தைச் சுற்றி இஸ்ரேல் பாணியில் சுவர் கட்ட முடியாத, கட்டக்கூடாத நிலையில், அரசியல் பூதக்கண்ணாடியை எடுத்துக்கொண்டு அரிய வகைத் தமிழனை தேடுவதற்குப் பதிலாக, நமது பாரம்பரிய வரையறைக்குத்தான் போகவேண்டியிருக்கிறது: "யாதும் ஊரே, யாவரும் கேளிர்!" தமிழ் மண்ணை, தமிழ் வளங்களை, தமிழ் அடையாளத்தை உலகமயமாக்குவதற்கு பதிலாக, உலகை, உலக வளங்களை தமிழ்மயமாக்குவதற்கு முயற்சிப்போம். அதுதான் தமிழ்த் தேசியம். தமிழ் வித்தில் முளைத்தெழுந்து, தமிழ் மண்ணில் வேரூன்றி, தமிழ் மொழியின் சாறெடுத்து, தமிழ் அடையாளத்தை சுவாசித்து வளர்ந்து, தரணியெல்லாம் பரந்து விரிந்து, தன் தண்டமிழ் நிழலில் ஒதுங்குவோர்க்கு காய்கனியும், மாமருந்தும், குளிர்ச்சியும், வளர்ச்சியும் தருகின்ற கற்பகத்தருவே தமிழ்த் தேசியம்.

ஒரு குறிப்பிட்ட தமிழ்த் தேசிய அமைப்போ, குழுவோ, தலைவரோ தேர்ந்து வழங்குவதல்ல தமிழ்த் தேசிய அடையாளம். தனிப்பட்ட மனிதரை சுயமாக தேர்ந்தெடுத்துக்கொள்ள அனுமதிப்பதுதான் தமிழ்த் தேசியம். தமிழ்த் தேசியம் மேலிருந்துக் கீழே திணிக்கப்படுவதல்ல. கீழிருந்து மேலாகப் பரந்து விரிவது. மதவெறி, இனவெறி, சாதீயம், ஆணாதிக்கம், வயதானோரதிகாரம், வகுப்புவாதம், வல்லாதிக்கம், வன்பசகொடுமை, வன்முறை ஏதுமற்ற சமாதானகரமான சமத்துவ சமுதாயத்தை நிர்மாணிக்க முயல்கிற சித்தாந்தம். தமிழ்த் தேசியம் என்பது எது, யார் உண்மையான தமிழ்த் தேசியவாதி என்பதல்ல பிரச்சினை. தமிழ்த் தேசியம் பேசுகிறவர்களாகிய நாம் எதை அடைய விரும்புகிறோம்? அதுதான் மிக முக்கியம்.

பெரியாரையும், திராவிட இயக்கங்களையும் திட்டுவதல்ல தமிழ்த் தேசியம். முக்கிய திராவிடக் கட்சிகளான தி.மு.க., மற்றும் அ.தி.மு.க. கதை முடிந்துகொண்டிருக்கிறது. ஈழத் தமிழர் இனப்படுகொலை செய்யப்படும்போது, ராஜினாமா கூத்து, உண்ணாவிரத நாடகம் நடத்தியவர் பின்னர் டெசோ மாநாடு நடத்தி அரசியல் வாழ்வை புதுப்பித்துக்கொள்ள முயன்றதைப் பார்த்தோம். "போர் என்றால் சாகத்தான் செய்வார்கள்" என்று திருவாய்மலர்ந்தருளி பாராமுகமாய் சும்மா இருந்த அம்மா தமிழ்த் தேசிய அலை தமிழகத்தில் வீசுவதைப் புரிந்துகொண்டு, பரபரப்பான மூவர் தூக்கு, கட்சத் தீவு, மீனவர் கொலை, சிங்களருக்கு இராணுவப் பயிற்சி போன்ற பிரச்சினைகளைக் கையிலெடுத்துக்கொண்டு கபட நாடகம் ஆடினார். தமிழ் மக்கள் தெளிவாகப் புரிந்துகொண்டுதான் இருக்கிறார்கள். செத்துக் கொண்டிருக்கும் திராவிட அரசியலை தூக்கிக் கொண்டுபோய் புதைத்து விட்டு, இனி தமிழகத்தை தமிழன்தான் ஆள்வான், தமிழச்சிதான் ஆள்வாள் என உறுதி பூணுவதுதான் தமிழ்த் தேசியம்.

இவன் தெலுங்கன், இவன் கன்னடன், இவள் மலையாளி என்று நாமகரணம் சூட்டுவது தமிழ்த் தேசியமல்ல. "தமிழ் வாழ்க" என நகராட்சிக் கழிப்பறைகளில் எழுதிவைப்பதும் தமிழ்த் தேசியமல்ல. எந்தக் கட்சி ஆட்சிக்கு வருவது, யாரை முதல்வராக்குவது என நமக்குள் அடித்துக் கொள்வதுமல்ல தமிழ்த் தேசியம். தமிழீழப் பிரச்சினை பற்றி பகட்டாகப் பேசுவதும், தலைவர் பிரபாகரன் புகழ் பாடுவதும் தமிழ்த் தேசியமல்ல. அப்படியானால் எதுதான் தமிழ்த் தேசியம்?

தனியொரு தமிழனுக்கு உணவில்லை எனில், ஒட்டுமொத்தத் தமிழினமும் கேவலப்படுவதுதான், கேள்வி கேட்பதுதான், அதை மாற்றி அமைப்பதுதான்

தமிழ்த் தேசியம். பிரிட்டிஷ்காரன் தேயிலைத் தோட்டத்தில் அடிமை வேலைக்காக அழைத்துச் செல்லப்பட்ட கூலிக்காரனாக இல்லை இன்றையத் தமிழன் என நமது கூலி அடையாளத்தை தூக்கி எறிவதுதான் தமிழ்த் தேசியம். தமிழ் மக்கள் திரைகடல் ஓடி இனி திரவியம் தேடப் போகவேண்டாம், நம் தமிழ் மண்ணிலேயே தன் மனைவி மக்களுடன் நல்வாழ்வு நடத்தி, பொருளீட்டி, புகழோடு வாழமுடியும் எனச்செய்வதுதான் தமிழ்த் தேசியம்.

"மாதராய் பிறந்திடவே மாதவம் செய்திட வேண்டுமம்மா" என்ற பாரதியின் கூற்றை நிலை நிறுத்துவது போல, பெண் விடுதலை, விதவை மறுமணம், அம்மா என்றழைத்து தெய்வமாக்காமல் அருமை நண்பராகவும் பெண்ணைப் பார்க்கலாம் எனும் கலாசார மாற்றத்தைக் கொண்டுவருவதுதான் தமிழ்த் தேசியம்.

திரைப்படம், தொலைக்காட்சி, சினிமா நடிகர், நடிகைகளிடமிருந்து தமிழ் கலாசாரத்தை மீட்டெடுத்து இயல், இசை, நாடகம் எனும் பாரம்பரிய தளங்களுக்குக் கொண்டு போவதுதான் தமிழ்த் தேசியம். உணர்ச்சி வயப்படுவதும், ஓடிப்போய் உயிரை விடுவதுமான 'எடுத்தேன், கவிழ்த்தேன்' நடவடிக்கைகளைக் கைவிட்டு, "எண்ணித் துணிக கருமம்" என நம் மக்களை மாற்றி செயல்படவைப்பதுதான் தமிழ்த் தேசியம்.

அன்பு, வீரம், கொல்லாமை, நல்லாறு எனும் பல்வேறு மாதிரி தமிழ்க் கோட்பாடுகளை உலகுக்கு எடுத்துச் சொல்லி அவற்றை வளர்த்தெடுப்பதுதான் தமிழ்த் தேசியம். "பார்ப்பானை அய்யர் என்ற காலமும் போச்சே, வெள்ளைப் பரங்கியரை

துரை என்ற காலமும் போச்சே” என்று உரக்கப் பாடி சாதி, மதக் குழுக்களால் யாரும் யாரையும் அடக்கமுடியாதபடி, அதட்டமுடியாதபடி புதிய சமுதாயம் ஒன்றைக் கட்டுவதுதான் தமிழ்த் தேசியம்.

தலைமுறை தலைமுறையாய் அடக்கப்பட்டுக் கிடக்கும் பெண்கள், தலித் மக்கள், ஆதிவாசிகள், மலைவாழ் மக்கள், மீனவர்கள், சிறுபான்மையினர் என அனைத்துத் தரப்பினரும் தமிழராய் தலைநிமிர்ந்து வாழ வழி செய்வதுதான் தமிழ்த் தேசியம். ஈழத்தில் வதைபடும் நம் தொப்புள்கொடி உறவுகளுக்கும், உலகெங்குமுள்ள தமிழருக்கும் தோள்கொடுத்து துணை நிற்பதுதான் தமிழ்த் தேசியம்.



வரவறிந்து, திட்டமிட்டு செலவு செய்து, மக்களுக்கு இலவசம் கொடுக்காமல் வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுத்து, தொழில் வளம் பெருக்கி, விவசாயம் காத்து, வாழ்வாதாரங்கள் போற்றி, எதிர்கால சந்ததிகளுக்கு எம்மண்ணை, நீரை, காற்றை, கடலை, மலைகளை, காடுகளை, மரம் மட்டைகளை காப்பாற்றி விட்டுச் செல்வதுதான் தமிழ்த் தேசியம்.

விஞ்ஞானம், வளர்ச்சி என்ற பெயரில் கூடங்குளம், கல்பாக்கம், நியுட்ரினோ, சிர்கோனியம், ஹைட்ரோகார்பன், ஸ்டெர்லைட் போன்ற ஆபத்தான திட்டங்களைத் திணிப்பதை எதிர்ப்பதுதான் தமிழ்த் தேசியம். நதிநீர்ப் பங்கீடு, தன்னிறைவுத் திட்டங்களில், இந்தியத் தேசியத்தின் எல்லா நடவடிக்கைகளிலும் தமிழருக்கு நீதி கிடைக்க, தமிழரின் உரிமை காக்கப் போராடுவதுதான் தமிழ்த் தேசியம்.

“எட்டுத் திக்கும் செல்வோம், கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்போம்“ என்ற நிலையில் பெருந்தன்மையாக வாழ்ந்தாலும், எங்கள் மீது அந்நிய மொழியை, அரசியலை, வல்லாதிக்கத்தை, அடிமைத்தனத்தை சுமத்த வந்தால் எதிர்த்து நின்று, போராடி, விரட்டியடிப்போம் என்று வீறுகொள்வதுதான் தமிழ்த் தேசியம்.

பச்சைத் தமிழ் தேசியம்

இன்றையப் பன்னாட்டுச் சூழலில், பாரத அரசியலில் நமக்குத் தேவைப்படுவது பச்சைத் தமிழ்த் தேசியம். இந்தச் சொற்றொடர் இரண்டு அர்த்தங்களைத் தருகிறது. ஒன்று, அப்பழுக்கற்ற, கலப்படமற்ற, சமரசமற்ற, உண்மையான தமிழ்த் தேசியம் என்பதைக் குறிக்கிறது. இன்னொன்று ‘தமிழ்’ தேசியம், ‘தமிழர்’ தேசியம் போன்ற கொள்கைகளையும் இணைத்து கூடவே பசுமை உணர்வுகளை, விழுமங்களை, கொள்கைகளை, திட்டங்களை உள்ளடக்கியது என்றும் அர்த்தமாகிறது.

இன்றைய தமிழகத்தினுடைய தேவை தமிழ்ச் சூழல் தேசியம்தான். சூழல் என்பது வெறும் இயற்கை சுற்றுச்சூழலை மட்டும் குறிப்பதல்ல. சமூக, கலாசார, பொருளாதார, அரசியல்

ஆக்கங்களும், தாக்கங்களும் கூட பரந்துபட்ட சூழலுக்குள் உட்படுவதால், நமது புத்தாக்கக் கொள்கையும் அகலமானதாய் ஆழமானதாய் இருத்தல் அவசியம்.

பசுமைக் கொள்கை என்பது வெறும் அரசியல் இயற்கை வளங்களைக் காக்கும் நீடித்த நிலைத்த வளர்ச்சி சித்தாந்தத்தைப் பேணுவது, தமிழினத்தை அச்சுறுத்தும் அணுஉலை மற்றும் மாசுபடுத்தும் பிற உலைகளை, ஆலைகளைத் தடுப்பது, அணு ஆயுதங்களை விரட்டுவது, மென்முறையைப்



கொள்கையோ அல்லது பொருளாதாரத் திட்டம் மட்டுமோ அல்ல. அது ஓர் ஒருங்கிணைந்த வாழ்க்கை முறை. இயற்கையைப் பேணுதல், சனநாயகம் காத்தல், சமூக நீதி—சமத்துவத்துக்காய் உழைத்தல், வன்முறை தவிர்த்தல், பகிர்ந்தாளுதல், உள்ளூர் பொருளாதாரம் பேணல், பெண் விடுதலை கோரல், சமூகப் பன்மை போற்றல், பொறுப்போடு வாழ்தல், வருங்காலம் கருதல், நீடித்து நிலைத்து நிற்றல் என்பவையே பசுமை விழுமங்கள்.

நாம் எடுத்தாளப்போகும் பச்சைத் தமிழ்த் தேசியம் என்னென்ன திண்மமான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என ஒத்தக்கருத்து கொண்டோர் ஒன்றிணைந்து முடிவு செய்யலாம். ஒருசில முக்கியமான விடயங்களை மட்டும் இங்கேக் குறிப்பிட விரும்புகிறேன்: தமிழகம் தண்ணீர் தன்னிறைவு பெறுவது, நிலத் தரகர்களிடமிருந்து விளைநிலங்களைக் காத்துக்கொள்வது, மானாவாரிப் பயிர்களை திட்டமிட்டுப் பயிரிட்டு பரந்து கிடக்கும் தமிழ் மண்ணை அறிவுபூர்வமாக பயன்படுத்துவது, உணவுப் பாதுகாப்பை உறுதி செய்துகொள்வது, தமிழ்க் கடலை, கடலுணவைக் காப்பது, நம் போற்றி வளர்ப்பது, மது அரக்கனை அழிப்பது, தீண்டாமையை ஒழிப்பது இன்ன பிற.

“செந்தமிழ் நாடெனும் போதினிலே — ஒரு

தேள் வந்து கொட்டுது காதினிலே — எங்கள்

மந்திரிமார் என்ற பேச்சினிலே — கடல்

மண்ணும் சிரிக்குது பீச்சினிலே” என கவிஞர் கண்ணதாசன் வர்ணிக்கும் இன்றையத் தமிழகத்தை மாற்றியமைத்து,

“செந்தமிழ் நாடெனும் போதினிலே — இன்பத்

தேன் வந்து பாயுது காதினிலே — எங்கள்

தந்தையர் நாடென்ற பேச்சினிலே — ஒரு

சக்தி பிறக்குது மூச்சினிலே” என மகாகவி பாரதியார் கனவில் மிளிரும் தமிழகமாக மாற்றியமைப்பதுதான் பச்சைத் தமிழ்த் தேசியம்.

# புத்தக விமர்சனம்

## *வானவல்லி* *(4 பாகங்கள்)*

**ஆசிரியர் : சி.வெற்றிவேல்**

*(வரலாற்றுப் புதினம்)*

**விலை : ரூ. 80**

**வெளியீடு:**

**வானதி பதிப்பகம்**

Old No 13 New No 23,

Deenadayalu Street, T Nagar,
Chennai - 600017, (Near Head Post Office)



**த**மிழக வரலாற்றில் பொற்காலமான சங்ககாலத்தின் ஆரம்ப காலத்தில் வாழ்ந்த மன்னன், பெரும்புகழ் கரிகாலன். தனது புலிச் சின்னத்தை இமயத்தில் பொறித்து போரில் தோற்ற பிற நாட்டு வீரர்களைக் கொண்டு காவிரிக்குக் குறுக்கே அணையைக் கட்டி, இரு புறங்களிலும் கரை எடுத்து, தமிழக வரலாற்றில் யாராலும் நெருங்க இயலாத புகழின் உச்சியை அடைந்த கரிகாலனைக் கதாநாயகனாகக் கொண்டு நான்கு பாகங்களாக வெளிவந்திருக்கும் சரித்திரப் புதினமே 'வானவல்லி.'

நாயகன் விறல்வேல், வானவல்லி இடையே காதல் மலரும் நிமிடங்கள், அவர்களிடையேயான ஊடல்கள், பிரிவுகள் போன்றவை சங்க இலக்கியங்களின் வாசனையை அனுபவித்து காட்சிப்படுத்தப் பட்டிருக்கின்றன. கதை முழுக்க வரும் உவமைகளும் மிக ரசனையானவை. காதல் காட்சிகள் கரைய வைக்கின்றன என்றால், போர்க்காட்சிகள் உறைய வைக்கின்றன. கடலுக்குள் நடக்கும் போர் நேர்த்தியான காட்சியமைப்புகள்.
இதுவரை எந்த வரலாற்றுப் புதின ஆசிரியரும் தொடாத புதிய களமான கரிகாலனின் இமய படையெடுப்பை மையமாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கும் 'வானவல்லி' பெருங்காவியம் வரலாற்று புதினப் பிரியர்களுக்கு மட்டுமின்றி இலக்கிய ரசனைக்காரர்களுக்கும் கூட நிச்சயம் விருந்தாக அமையும்.

சிறுகதை



# காற்றில் படபடத்த ஒரு காசோலை!

பஞ்சாயத்துத் தலைவர் முனியாண்டி அனல் பறக்கும் விழிகளுடன் நடுநாயகமாக வீற்றிருக்க, அவரைச் சுற்றி அமர்ந்திருந்த ஏழெட்டு மனிதர்கள், தலைவரின் கோபத்தை எப்படித் தணிப்பது என்று புரியாமல் தடுமாறிக் கொண்டிருந்தனர்.

“ஏங்க சுப்பையா, அந்தக் கெழவன் என்னதான் நினைச்சுக்கிட்டு இருக்கான்? நாம யாருன்னு இன்னும் அவனுக்கு சரியாப் புரியலை போல!” என்று உறுமினார் தலைவர்.

“தல, நீங்க ஒண்ணும் கோபப் படாதீங்க. ஊர்ல ரொம்பப் பயலுவ தெனாவட்டாத்தான் திரியறானுவ. அதுல இந்தக் கெழவரும் ஒண்ணு. நம்மையெல்லாம் விரோதிச்சுகிட்டு ஒரு ஆசாமி இந்த ஊருக்குள்ள நடமாடிட முடியுமா?” என்றார் சுப்பையா.

“ஊருக்குள்ள ஒத்தை ரைஸ் மில்லு வெச்சிருக்கிற திமிரு. நாம எல்லாம் நெல்லு அரைக்க அவுருகிட்டத்தான் போவணும். இல்லைன்னா இருவது கிலோ மீட்டர் தாண்டி அகரம்சேரி ஐயர் மில்லுக்குத்தான் போகணும்கிற கர்வம் அந்தக் கெழவருக்கு! சரியான கஞ்சனாம் அந்த ஆளு! அதான் நம்ம பேச்சை மதிக்க மாட்டேங்கறாரு.”

“அது மட்டுமில்லீங்கோ தலைவரே, அவரோட பையன் அமெரிக்காவுல கம்பியூட்டர் கம்பெனியில வேலை பாத்து லச்சக் கணக்குல சம்பாதிக்கிறானாம்ல. அப்பிடியிருக்கும்போது கெழவர் இந்த ஊருப் பெரிய மனுசங்களை எப்பிடி மதிப்பார், சொல்லுங்க?” என்றார் பெரியசாமி.

**ஜே.வி.நாதன்**

“வர்ற தைப் பொங்கலுக்குள்ளாற வேலையை முடிச்சு கும்பாபிஷேகம் செஞ்சுடலாம்னா, ஒரு பய காசை அவுக்க மாட்டேங்கறானுங்களே, அட அவிங்கதான் சரியான வருமானம் இல்லாதவனுங்க. இந்த மில்லுக்காரக் கெழவருக்கு என்ன வந்துச்சு? ஊருல உள்ள ரெண்டு மூணு பணக்கார ஆளுங்கள்ல ஒரு ஆளு அவரு. ஊருப் பஞ்சாயத்துத் தலைவரு வர்றாரு, துணைத் தலைவரு வர்றாரு. ஊரு முக்கியஸ்தருங்கள்ளாம் வந்து நிதி கேக்கறாங்களேன்னு ஒரு பயம் வேணாம்? சரி, பணம் கொடுக்காத ஆளுக வீட்டுக்கு இன்னிக்கு ஒரு ரவுண்டு போயிக் கேட்டுட்டு வருவோம். முதல்ல மில்லுக்காரக் கெழவருகிட்டே போயி நன்கொடை கேப்போம். கொஞ்சம் கறாராக் கேக்கணும்போ!”

“இது சரியான ரோசனை. எல்லோரும் வேற கூடியிருக்கோம். போயி கொஞ்சம் மெரட்டுனாப்புலப் பேசி, ஆயிரம் ரெண்டாயிரத்தைக் கறந்துகிட்டு வந்துடுவோம். வாங்க!” என்றார் சுப்பையா.

துண்டை உதறித் தோளில் போட்டபடி தலைவர் எழுந்து முன்செல்ல, அனைவரும் அவரைப் பின்தொடர்ந்தனர். சுப்பையா நிதி வசூல் நோட்டைக் கையில் எடுத்துக் கொண்டார். வரவு

செலவுக் கணக்கு விவகாரம் சுப்பையாவின் பொறுப்பு. கீழத் தெருக்கோடியில் ரைஸ் மில்லை ஒட்டிய வீடு. கம்பி போட்டுப் பாதுகாக்கப்பட்ட பெரியதும் சின்னதுமான இரு திண்ணைகள்ஞ் நாகரீகமாக டைல்ஸ் போட்டுத் தரை பள பளவென்று காட்சியளித்தது. வாசலில் இந்தக் கூட்டம் போனதும், "ஐயா! ஐயா! வீட்டுல யாருங்க? ஊர்ப் பெரிய மனுசங்க வந்திருக்காங்க.." என்று ஒருவர் குரல் கொடுத்தார்.

உள்ளிருந்து ஓர் ஒல்லியான முதியவர், செக்கச் செவந்த உடலில் வேட்டி கட்டி, திறந்த மேலுடம்பை ஒரு பளீர் வெள்ளைத் துண்டால் மூடிய கோலத்தில் தூய வெண்மை நிறத்தில் தலையில் சிலும்பி நிற்கும் கேசத்துடன், மூக்குக் கண்ணாடி அணிந்த கோலத்தில் வெளியே வந்தார். கையில் ஒரு வெள்ளி வெற்றிலைப் பெட்டி இருந்தது.

சின்னத் திண்ணையில் உட்கார்ந்த அவர், எல்லோரும் "உட்காருங்க. என்ன விஷயம்? ஊரே கூடி என்னைத் தேடி வந்திருக்கீங்கன்னா பெரிய விஷயமாத்தான் இருக்கும்? சொல்லுங்க!" என்றபடி, வெற்றிலைப் பெட்டியைத் திறந்தார்.

கைநிறைய சீவலை எடுத்து வாயில் போட்டுக்கொண்டு வெற்றிலையை எடுத்து வேட்டியில் அழுந்தத் துடைத்தார். பின், அதன் நடு முதுகில் சுண்ணாம்பைத் தடவி, காம்பை மேலிருந்து கீழாகக் கிழித்தார். பின் அதைச் சுருட்டி வாயில் திணிக்கத் தொடங்கினார். பன்னீர்ப் புகையிலையை உள்ளங்கையில் போட்டு அதைக் கசக்கி வாயில் போட, அந்த இடம் பூராவும் பன்னீர்ப் புகையிலை மணம் கமழத் தொடங்கியது.




தலைவர் சுப்பையாவைப் பார்க்க, சுப்பையா முதியவரிடம் பேசத் தொடங்கினார். "ஐயா மில்லுக்காரவுகளே! இந்தத் தாயம்பாளையம் கிராமத்துல இருக்குற கற்பக விநாயகர் கோயில் ஆயிரம் வருஷத்துக்கு முந்தி ஒரு முனிவரால் கட்டப்பட்டதுன்னு ஒங்களுக்கே தெரியும். அழகான விநாயகர், தட்சிணாமூர்த்தி, துர்க்கை அம்மன், நடுவில் சூரிய பகவான் சற்று உயரத்திலும் ஏனைய நவக்கிரகச் சிலைகள் சூரியனைச் சுற்றி வட்டமாகவும் அமைந்துள்ள நவக்கிரக மண்டபம், வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர், சிவலிங்கம், அம்பிகை, பிராகாரம் சுற்றி வர்றப்ப இருக்கிற செவிட்டு சாமி எல்லாச் சிலைகளுமே அழகு கொஞ்சற சிலைகள்! கோயில் ரொம்பப் பழசானதால சிதிலமாயிட்டுது. சுவரையெல்லாம்

இடிச்சுபுட்டுப் புதுசாக் கட்டி, கோபுரத்தையும் இன்னும் உசரமாக்கிடணும்னு நம்ம சாதி செனமெல்லாம் அபிப்ராயப் பட்டு ஒரு முடிவை எடுத்தோம். ஊர்ல ஒசந்த சாதியும் வசதி படைச்ச செனமும் நாமதானே? நம்ம ஆளுங்க பணத்தை வாரிக் கொடுப்பாங்க, பிள்ளையார் கோயிலைக் கட்டிப்புடலாம்னு சாதாரணமா நெனச்சிப் போட்டோம். அது தப்புன்னு இப்பத்தான் தெரியுது. போன வாரம் ஒங்ககிட்டே வந்து இப்ப நாஞ் சொன்னதையெல்லாம் சொல்லி

அவுங்க அங்கே காலம் காலமாக் கும்பிட்டுகிட்டு வர்றாங்க. நம்ம சாதிக்காரங்க முழுசாப் பணம் போட்டுக் கோயிலைக் கட்டிப்புட்டா, மத்த சாதியாரு உள்ளே நுழையக் கூடாதுன்னு

சொல்லி வெரட்டிடலாம் பாருங்கஞ் பதினைந்து லட்சம் ரூபா எஸ்டிமேட்டுல திருப்பணியை ஆரம்பிச்சோம். பக்கத்து ஊருகள்ல வசதியா இருக்கற நம்ம சாதி சனங்க நிறைய நிதியை வாரிக் கொடுத்தாங்க. இப்ப, மூணு லட்சத்துல



நிதி கேட்டோம். யோசிச்சிச் சொல்றேன்னு ஐயா சொன்னீங்க. இப்ப வந்துருக்கோம். நாங்க அன்னிக்குச் சொன்னதையெல்லாம் மறந்துபுட்டு, எதுக்கு வந்தீங்கன்னு ஐயா கேக்கறீங்க. பஞ் சாயத்துத் தலைவர் அண்ணன் முனியாண்டியே வந்து நிதி கேக்கறப்ப, நீங்களும் ஒங்களைப் போல இருக்கற மத்தவங்களும் ஒரு நல்ல காரியத்துக்கு நிதி கொடுத்தாத்தானேங்க நல்லது?"

மில் ஓனரான முதியவர் எழுந்து சாக்கடையில் வெற்றிலை எச்சிலைத் துப்பினார். "நல்ல காரியம் பண்றீங்க. ஏன் இதுக்குப் பணம் கொடுக்க மாட்டேங்கறாங்க? ஊர்ல ஐயாயிரம் தலைக்கட்டுக்கு மேல இருக்கே. நல்லாப் பண்ணலாமே!" என்றார்.

"ஐயா நீங்க சுலபமாச் சொல்லிப்புட்டீங்க. அந்த ஐயாயிரம் பேர்ல நம்ம ஜனம் பாதித்தானே இருக்காங்க? மீதி மத்த ஜாதியாருங்க. அவங்கவங்களுக்கும் தனித் தனிக் கோயில் இருக்கு.

கோபுர வேலை பாக்கி நிக்குதுங்க. தாராபுரத்து கணபதி ஸ்தபதி ரொம்பச் சிக்கனமாத்தான் செலவு வைக்குறாருங்க. ஊருக்குள்ள பலபேரு நம்ம சாதிக் கட்டுமானத்தை மதிக்காம, நிதின்னு போற எங்களைக் கேலி செய்யறாங்க. நிதி கொடுக்க மேலியும் கீழயும் பாக்கறாங்க. ஏதோ ஒங்களைப் ,போல வசதி படைச்சவங்க ஆயிரம் ரெண்டாயிரம்னு நிதியை வாரி வழங்கினீங்கன்னா நல்லா இருக்கும்?"

"ஐயையோ, ஆயிரம் ரெண்டாயிரமா?" முதியவர் பதறினார். ரைஸ் மில்லுல மாவு அரைக்கக் கூலியா அஞ்சு ரூபா, பத்து ரூபான்னு கேக்கும்போதே, எல்லோரும் முனகிக்கிட்டே பணத்தைக் கொடுக்கறாங்க. என்கிட்டே அவ்ளோ ரூபா எதிர்பார்க்கிறீங்களே நியாயமா?

"ஐயா அப்படிச் சொல்லப்படாது? அந்தக் கடவுள் ஒங்களுக்கு எந்தக் குறையும் வைக்கலீங்க. நீங்க மனசு வெச்சுக் கணிசமா நிதி போட்டீங்கன்னா, இன்னும் அக்கம் பக்கத்து ஊர்ப் பெரிய

மனுசங்ககிட்டே கேட்டு தேவைப்படற நிதியைச் சேர்த்துப் புடுவோமுங்க!"

முதியவர் யோசித்தார். சுப்பையாவின் கையிலிருந்த நிதி வசூல் நோட்டை வாங்கிப் பக்கம் பக்கமாகப் புரட்டினார். எழுந்து உள்ளே போனார்.

தலைவர் முனியாண்டி, சுப்பையாவையும் மற்றவர்களையும் பார்த்தார். "இன்னிக்கு மட்டும் கெழவன் பணம் தரலைன்னா, கண்டமேனிக்குத் திட்டிப்புடறதுன்னு இருந்தேம்பா. நம்ம கூட்டத்தைப் பாத்து ஆளு பயந்துடுச்சுன்னு நினைக்கிறேன்.." என்றார்.

ஒருவர் "ஸ்..ஸ். பெரிசு வருது!" என்று அவர்களைப் பேச வேண்டாம் என்று ஜாடை காட்டினார்.



சின்னத் திண்ணையில் உட்கார்ந்த பெரியவர் கையில் வங்கியின் செக் புத்தகம் ஒன்று இருந்தது. அதைப் பிரித்தபடி அவர் சொன்னார். "வழக்கமா டொனேஷன், நிதின்னு நான் யாருக்கும் பணம் தர்றதில்லை. என்னைக் கஞ்சன், திமிர் பிடிச்சவன்னு கூடச் சில பேரு சொல்லுவாங்க,. அதுபத்தியெல்லாம் நான் கவலைப் படறதில்லை. ஆனா, ஊர்க்காரங்க என்னைத் தேடி வந்துட்டீங்க. ஏதோ என்னால முடிஞ்சதைத் தர்றேன். குறை சொல்லாம வாங்கிட்டுப் போங்க. உம், யார் பேருக்கு செக் எழுதட்டும்?" என்று கேட்க, "எஸ். சுப்பையான்னு எழுதுங்க. அவருதான் திருப்பணிக் கமிட்டியின் பொருளாளர்ஞ்" என்றார் பெரியசாமி.

செக்கில் தொகை எழுதிக் கையெழுத்துப் போட்டார் பெரியவர். பிறகு அந்த ஒற்றைச் செக்கைக் கிழித்து பெரிய திண்ணையில் அமர்ந்திருந்த ஊரார் முன் வைத்தார். அந்தக் காசோலையில் எழுதப்பட்டிருந்த தொகையைப் பார்த்த சுப்பையா நடுங்கிப் போனார்.

வெறும் இருநூறு அல்லது முன்னூறு ரூபாய் எழுதுவார் என்று நினைத்திருந்த அவர் மூன்று லட்சம் ரூபாய்க்குக் காசோலை எழுதப்பட்டிருந்தது கண்டு அதிர்ந்தார்.

"ஐயா!" என்று தழுதழுத்த குரலில் கூறியபடி, பெரியவரைக் கையெடுத்துக் கும்பிட்டார்.

பெரியவர், "ஒரு நிமிஷம்!" என்றார். காசோலையை எடுக்கப் போன சுப்பையா, பெரியவரை நிமிர்ந்து பார்த்தார்.

"உங்களுக்கு இன்னும் தேவைப்படும் தொகை மூன்று லட்சம் ரூபாய்னு சொன்னீங்க. நானே மூணு லட்சத்தையும் கொடுத்துட்டேன். ஆனா ஒரு கண்டிஷன். கடல், ஆகாயம், ஆலயம் எதையும் யாரும் தங்களுடையதுன்னு சொந்தம் கொண்டாடக்கூடாது. கோயிலைப் புதுப்பிச்சுக் கட்டறீங்க. சரி. ஆயிரம் வருஷத்துக்கு முந்தி ஒரு முனிவர் இன்ன ஜாதிக்காரங்களுக்குன்னா இந்தக் கோயிலைக் கட்டினார்? ஜாதிக்கு ஒரு கோயில்னு உரிமை கொண்டாடவோ, எங்க கோயிலுக்கு வேற சாதிக்காரன் வரக்கூடாதுன்னு தடுக்கவோ யாருக்கும் உரிமை கெடையாது. ஏழை, பணக்காரன், இந்த ஜாதிக்காரன், அந்த ஜாதிக்காரன்னு யாரும் மனப்பூர்வமா ஒற்றை ரூபாய் நிதியாகக் கொடுத்தாக்கூட அதை வாங்கணும். அதே மாதிரி, கோயில் கட்டி முடிச்சதும் எல்லா ஜாதி, எல்லா மதத்தைச் சேர்ந்தவங்களும் கோயிலுக்குள்ளே வர்றதை யாரும் தடுக்கக் கூடாது. விருப்பப்பட்டு ஆலயத்துக்குள்ளே உங்க நடைமுறையை மதிச்சு வருகிற மனுஷங்களைத் தடுக்கக் கூடாது. இந்த நிபந்தனைகளை ஏத்துக்கறதானால், இந்த செக்கைத் தாராளமாக நீங்க எடுத்துக்கிட்டுப் போகலாம். இது மட்டுமல்ல, கும்பாபிஷேகச் செலவுக்குத் தேவைப்படும் பணத்தையும் நான் என் கையிலிருந்து தரத் தயாரா இருக்கேன்" என்று கூறிய பெரியவர், இரண்டாவது தடவையாகப் போடுவதற்கு வெற்றிலையில் சுண்ணாம்பு தடவ ஆரம்பித்தார்.

வந்திருந்த ஊர்ப் பெரிய மனிதர்கள் பேச்சற்று சிலை போல் அமர்ந்திருக்க, தரையில் கிடந்த அந்தக் காசோலை காற்றில் படபடத்துக் கொண்டிருந்தது.

# அறிவோம் தமிழர்

## ராவுத்த குமாரசாமி: தமிழ் சகோதரத்துவத்தின் இன்னொரு அடையாளம்!

உள்ளூர் விலங்கினம் அல்லாத குதிரை தமிழ் நிலப்பரப்பின் பிரிக்க முடியாத அங்கமாக எப்படி மாறியது? காவல் தெய்வமாக எப்படி மாறியது? ஆச்சரியமான இந்தக் கேள்வி இன்னொரு பக்கம் தமிழ் நிலத்தின் அரவணைக்கும் பண்புக்கு ஓர் அடையாளமாகவும் ஆகிறது அல்லவா? அதுபோலவே தமிழ் மண்ணின் சகோதரத்துவம் எப்படி மதங்களைக் கடந்தது என்பதற்கான ஆச்சரியங்களும் வெவ்வேறு தருணங்களில் என்னுடைய ஆய்வுப் பயணத்தில் வந்தடைந்துகொண்டே இருக்கின்றன.

வயல்களின் நடுவேயும், ஊர் எல்லையிலும் தமிழ் நிலமெங்கும் நிற்கும் குதிரைச் சிலைகளின் மேல் சுடலை மாடன், அய்யனார், கருப்பண்ணசாமி ஆகியோர் அமர்ந்திருப்பதுபோல ஒரு முஸ்லிமான 'ராவுத்த குமாரசாமி' அமர்ந்திருப்பதைக் கொங்கு பகுதியில், சிவகிரியை அடுத்துள்ள காகம் கிராமத்தில் சமீபத்தில் கண்டேன்.

தமிழகத்தில் இஸ்லாமியரைச் சிறுதெய்வங்களாக வழிபடுவது என்பது அரிதெனினும் புதிதல்ல. வைணவர்களுக்கு ஸ்ரீரங்கத்தில் துலுக்க நாச்சியாரும், அய்யப்ப பக்தர்களுக்கு எருமேலியில் வாவர் சாமியும், வட மாவட்டங்களில் திரௌபதி அம்மன் வழிபாட்டில் முத்தால ராவுத்தரும் சிறு தெய்வங்களாக வழிபடப்பட்டுவருகின்றனர். தென் தமிழகத்தின் சிறு கிராமம் ஒன்றில் கப்பலோட்டிய மரைக்காயரும் சிறுதெய்வமாகப் பல நூற்றாண்டுகளாக வணங்கப்பட்டு வருகிறார்.

தமிழ் நிலத்தில் இஸ்லாம் பரவி ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகும் நிலையில், மூதாதையரை, தம்மோடு உயிருக்கு உயிராக வாழ்ந்தோரைக் கௌரவித்து குலதெய்வமாக, காவல் தெய்வமாக வழிபட்டுவரும் இந்நிலத்தில், இந்துக்களோடு உறவுமுறை கொண்டாடும் இஸ்லாமியர்களும் சிறுதெய்வங்களாக இடம்பெற்றிருப்பதில் ஆச்சரியமில்லை. என்றாலும், காகம் கிராமத்தில், கண்ணன் கூட்டத்தினரால் காவல் தெய்வமாகவும், குலதெய்வமாகவும் வழிபடப்படும் 'ராவுத்த குமாரசாமி' சற்றே வேறுபடுகிறார். சிறு மினாராக்கள், விமானம் என்று கோயிலின் அமைப்பே, மதங்களைக் கடந்து இங்கு மனிதநேயம் வழிபடப்படுவதை நமக்குச் சுட்டிக்காட்டுகின்றன. கோயிலின் நுழைவாயிலிலிருந்து கருவறை வரை, வாளை உயர்த்திப் பிடித்து அமர்ந்தவாறும், வாயில் சுருட்டுடன் கைலி உடுத்தி ஒருக்களித்துப் படுத்தவாறும், குதிரையின் மேல் அமர்ந்தவண்ணம் என வெவ்வேறு நிலைகளில் ராவுத்தர் சிலைகள் காணப்படுகின்றன. கருவறையில் குமாரசாமியான முருகனுக்குப் பின்னால், பீடத்தில் வாளை உயர்த்திப் பிடித்தவண்ணம், ஒரு கால் தொங்கவிட்டு அமர்ந்த நிலையில் இரு ராவுத்தர்கள்.

தமிழ் முஸ்லிம்களில் குதிரை வணிகர்களாகவும் வீரர்களாகவும் அறியப்பட்ட ராவுத்தர்கள், கொங்கு வெள்ளாளக் கவுண்டர்களின், காகம் கண்ணன் கூட்டத்தாரின் குலதெய்வமானது குறித்துப் பல்வேறு கதைகள் நிலவுகின்றன. புலவர் செ.இராசுவால் ஆவணப்படுத்தப்பட்ட 'அரசூர் முழுக்காதன் குல வரலாறும் வெள்ளையம்மாள் காவியமும்' நூல் உட்பட இதுகுறித்துச் சொல்லும் எல்லாக் கதைகளும் ஒரே பொதுத்தன்மையையே கொண்டிருக்கின்றன. 'கண்ணன் கூட்டத்தாரின் மூதாதையர் பெரும் சங்கடத்தில் இருந்தபோது, அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து, குலம் தழைக்க உதவியது முஸ்லிம் ராவுத்தர்கள்' என்பதே அது! இதனாலேயே காவல் தெய்வமாகவும், குலசாமியாகவும் ராவுத்தரை வணங்குகின்றனர் இம்மக்கள். அதன் வெளிப்பாடாகச் சிலர் தங்கள் பெயரின் முன்னால் ராவுத்தர் என்றும் இணைத்துக்கொள் கிறார்கள். ஓர் உதாரணப் பெயர் ராவுத்தக் கவுண்டன்.

கொங்கு மண்டல சமூகத்தை வெகு உன்னிப்பாகக் கவனித்து தனது கதைகளின் மையப்புள்ளியாக்கியிருக்கும் கதாசிரியர் இரா. முருகவேள், இதில் ஒரு முக்கியமான தொடர்பைச் சுட்டிக்காட்டுகிறார். "கொங்கு வேளாளர் சேடக் குலத் தலைவர் தன்னுடைய பெண்ணுக்குச் சொத்தில் பங்கு தர வேண்டும் என்று நினைக்கிறார். அவருடைய மறைவுக் குப் பின் அவளை ஏமாற்ற

# பெருமை

**கோம்பை எஸ்.அன்வர்**

முற்படுகின்றனர் அவளுடைய சகோதரர்கள். அவள் நீதி கேட்கும்போதுதான் அவளுக்கு உதவுகிறார் ராவுத்தர். சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் வரை, கொங்கு சமூகத்தில் பெண்ணுக்குச் சொத்துரிமை என்பது நடைமுறையில் இல்லை. அப்போது பெண்ணுக் கான சொத்துரிமையின் நியாயத்தை ஏனைய சமூகங்களைக் காட்டிலும் இஸ்லாமிய சமூகத்தைச் சார்ந்த ஒரு ராவுத்தரால் புரிந்துகொண்டிருக்க முடியும். இதில் ஒரு பண்பாட்டுப் பரிமாற்றமும் இருக்கிறது" என்கிறார்



எழுத்தாளரும் வழக்குரைஞருமான இரா. முருகவேள். இதுபோக, தமிழ் முஸ்லிம் சமூகத்தில் ஒரு பிரிவினரான ராவுத்தர்கள் குதிரை வணிகர்களாக மட்டுமின்றி வீரர்களாகவும் அறியப்பட்டவர்கள். 15—ம் நூற்றாண்டில் அருணகிரிநாதர் முருகனைப் புகழ்ந்து பாடும்போது 'சூர்க்கொன்ற ராவுத்தனே' என்றும் 'மாமயிலேறும் ராவுத்தனே' என்றும் பாடுகிறார்.

சில வருடங்களுக்கு முன்னர் வரை வெறும் கூரையோடு வயல் வெளியில் வீற்றிருந்த சுதையிலான ராவுத்தசாமி களுக்கு ஆகம முறைப்படி கோயில் எழுப்ப வேண்டும் என்று கண்ணன் கூட்டத்தார் விரும்பியிருக்கின்றனர். ஸ்தபதியின் அறிவுரைப்படி அவை வேங்கை மரத்தால் செய்யப்பட்ட சிலைகளாக மாறின. "வேங்கை மரத்தின் உக்கிரத்தைத் தணிக்க, 'மூன்றாவது மூர்த்தியாக குமாரசாமியான முருகனின் கற்சிலை அபிஷேக மூர்த்தியாக இடம்பெற வேண்டும்' என்ற ஸ்தபதியின் ஆலோசனைப்படி, இன்று கருவறையில் ராவுத்தர்களுடன் குமாரசாமியான முருகனும் வீற்றிருக்கின்றார்" என்கிறார் கோயில் பூசாரியான மகாலிங்கம். நான்காவது தலைமுறையாக பூசாரியாகப் பணியாற்றும் மகாலிங்கம் கண்ணன் கூட்டத்தைச் சேர்ந்தவர்.

கருவறைக்குள் குமாரசாமியுடன் அமர்ந்திருக்கும் ராவுத்தர்களுக்குப் பூ, பழம் என்று பூசைசெய்யும் மகாலிங்கமும் அவரது உறவினரும், கோயிலின் ஒரு நுழைவாயிலின் மேல் ஒருக்களித்துப் படுத்தவாறு, வாயில் சுருட்டும், இடுப்பில் கைலியும் அணிந்து காணப்படும் ராவுத்தருக்கு, பிற காவல் தெய்வங்களுக்குப் பூசையில் படைக்கும் போதை வஸ்துக்களும் மாமிசமும் படைக்கின்றனர். மூன்று வருடங்களுக்கு ஒரு முறை கண்ணன் கூட்டத்தினர் அனைவரும் ஒன்றுகூடி கெடா வெட்டி விமரிசையாக ராவுத்த குமாரசாமிக்குப் பொங்கல் வைக்கின்றனர். வாரத்தில் திங்கள், வெள்ளி, அமாவாசை, பௌர்ணமி, கார்த்திகை தீப பூசை மற்றும் மார்கழி மாதம் முழுவதும் என்று அட்டவணையின்படி பூசை நடத்துகின்றனர்.

இன்று அருகில் வெவ்வேறு ஊர்களில் வசித்துவந்தாலும், தங்கள் முறை தவறாது வந்து வழிபடுவது மட்டுமின்றி, வீட்டில் எந்த ஒரு விசேஷமென்றாலும் ராவுத்த குமாரசாமியிடம் வந்து கெடா வெட்டி, நல்ஆசி பெற்றுச் செல்கின்றனர். தங்கள் மூதாதையர்களைப் பாதுகாத்த ராவுத்தர்கள், தங்களையும் பாதுகாப்பார்கள் என்ற உறுதியான நம்பிக்கையுடன். தமிழ்ச் சமூகத்தின் மதம் கடந்த சகோதரத்துவத்துக்கு மேலும் ஓர் உதாரணம், காகம் கண்ணன் குலத்தாரின் ராவுத்த குமாரசாமி வழிபாடு!




## இரண்டாம் பாகம் : காஞ்சி முற்றுகை

# குதிரை கிடைத்த விதம் 21

அத்தை வண்டியில் ஏறிக்கொண்டதும் வண்டி புறப்பட்டது மற்றவர்கள் பின்னால் நடந்து சென்றார்கள். குண்டோ தரனும் தன் குதிரையின் தலைக்கயிற்றைப் பிடித்து நடத்திக் கொண்டு வந்தான்.

"அப்பா! குண்டோ தரனுக்குக் குதிரை எப்படிக் கிடைத்தது? அதைச் சொல்லும்படி கேளுங்கள்!" என்றாள் சிவகாமி.

"குண்டோ தரனுக்குக் குதிரை ஏறத் தெரியும் என்றே எனக்குத் தெரியாது, அம்மா! குண்டோ தரா, நீ எப்போது குதிரை ஏற்றம் கற்றுக்கொண்டாய்?" என்று கேட்டார் ஆயனர்.

"குருவே! உலகத்தைத் துறந்து காவித் துணி புனைந்த புத்த பிக்ஷுக்கள்கூட இந்த நாளில் குதிரை ஏறுகிறார்களே! இந்தக் குதிரை கூட ஒரு இளம் புத்த பிக்ஷு ஏறிக்கொண்டு வந்ததுதான். குருவே! அந்த இளம் பிக்ஷுவை ஏரியிலே தள்ளிவிட்டு நான் குதிரை மேல் ஏறி வந்துவிட்டேன்!" என்று குண்டோ தரன் கூறிக் கலகலவென்று சிரித்தான்.




குண்டோ தரன் சொல்லுவதெல்லாம் நாகநந்திக்குக் கோபம் மூட்டுவதாயிருப்பதைக் கண்ட ஆயனர், "குண்டோ தரா! இது என்ன? என் சிஷ்யன் என்று பெயர் வைத்துக்கொண்டு இப்படியெல்லாம் செய்யலாமா? கொஞ்சமும் நன்றாயில்லையே?" என்றார்.

சிவகாமி "அப்பா! குண்டோ தரன் அப்படியெல்லாம் ஒன்றும் செய்திருக்கமாட்டான், வேடிக்கைக்காகச் சொல்கிறான்" என்றாள்.

"இல்லை, இல்லை! நிச்சயமாகத்தான் சொல்கிறேன். இங்கேயிருந்து இரண்டு காத தூரத்தில் சாலை ஓரமாக ஒரு ஏரி இருக்கிறதே, நீங்கள் பார்க்கவில்லையா? அந்த ஏரியிலே தான் அந்த இளம் பிக்ஷுவைத் தள்ளினேன்" என்றான் குண்டோ தரன்.

நாகநந்தி பெரிதும் கலக்கமடைந்த குரலில் ஆயனருக்கு மட்டும் கேட்கும்படியாக, "சிற்பியாரே! என்ன நடந்தது என்று விவரமாய்க் கேளுங்கள்!" என்றார்.

ஆயனர் அவ்விதமே விவரமாய்ச் சொல்லும்படி கேட்டதன் மேல் குண்டோ தரன் சொன்னான்: "உங்களை வீட்டில் காணாமல், "அடடா! நம்முடைய குரு இப்படி நம்மைக் கைவிட்டு விட்டுப் போய்விட்டாரே!" என்று நான் கவலையுடன் மரத்தடியில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தேன். பல குதிரைகள் வரும் சத்தம் கேட்டு விழித்துக் கொண்டு மரத்தடியில் மறைவிலிருந்தபடி பார்த்தேன். வந்தவர்கள் அனைவரும் அவசரமாய்த் திரும்பிப் போய் விட்டார்கள். 'அடடா! இவ்வளவு குதிரைகளில் நமக்கு ஒரு குதிரை கிடைத்தால் நமது குருவைப் போய்ப் பிடித்து விடலாமே? கால்நடையாகப் போய்ப் பிடிக்க முடியுமா?' என்று நான் கவலைப்பட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கையில், ஒரு இளம் புத்த பிக்ஷு சற்று தூரத்திலிருந்த இன்னொரு மரத்தடியின் மறைவிலிருந்து வெளியே வந்தார். அந்த வீட்டுக்கு நாகநந்தி அடிகள் வந்திருந்தாரா என்று என்னைக் கேட்டார். அப்போது தாமரைக் குளக்கரையில் இந்த அடிகளைப் பார்த்த நினைவு எனக்கு வந்தது. 'அவர் பெயர் என்னவோ எனக்குத் தெரியாது, ஒரு பிக்ஷுவைத் தாமரைக் குளக்கரையில் கண்டேன்' என்றேன். இளம்




பிக்ஷு சற்று யோசித்து விட்டுக் கிளம்பினார். வழித்துணை கிடைத்தது என்ற சந்தோஷத்துடன் நானும் அவருடன் கிளம்பினேன். ஆனால் அந்த இளம் பிக்ஷு என்னை ஏமாற்றிவிட்டார். கொஞ்ச தூரம் போனதும் காட்டின் மறைவில் கட்டியிருந்த இந்தக் குதிரைமேல் ஏறிக்கொண்டு என்னிடம் சொல்லிக் கொள்ளக்கூடச் செய்யாமல் வேகமாகப் போய்விட்டார். ஆகா! யாரை நம்பினாலும் நம்பலாம்; புத்த பிக்ஷுக்களை மட்டும் நம்பக்கூடாது! இதோ நம்முடன் வரும் அடிகள் நீங்கலாகச் சொல்கிறேன்" என்றான் குண்டோதரன்.

ஆயனர், "குண்டோதரா! பெரியோர்களாகிய புத்த பிக்ஷுக்களைப்பற்றித் தூஷணை சொல்லாதே! பிறகு நீ என்ன செய்தாய் என்று சொல்லு!" என்றார்.

"நானா? நான் என்ன செய்வது, குருவே! 'நமக்குக் குதிரை இல்லாமற்போனால் போகட்டும்; கடவுள் கொடுத்த இரண்டு கால்கள் இருக்கிறதல்லவா?' என்று எண்ணிக்கொண்டு கிளம்பினேன். இரண்டு நாள் பிரயாணம் செய்ததில் கால் வலி கண்டு இன்று மத்தியானம் ஏறிக் கரையில் சாலை ஓரமாக உட்கார்ந்து கொண்டிருந்தேன். அப்போது பாருங்கள், அதே இளம் பிக்ஷு குதிரை மேல் வந்தார். 'அடிகளே! இதென்ன, எனக்கு முன்னால் கிளம்பினீர்கள்





பின்னால் வருகிறீர்களே!' என்று கேட்டேன். என்னைப் பார்த்ததில் அவருக்கு அதிக ஆச்சரியமாய்ப் போய்விட்டது. 'ஆமாம், அப்பா! இந்தக் காலத்தில் கால்நடைப் பிரயாணத்தை விடக் குதிரைப் பிரயாணம்தான் அதிக ஆபத்தாயிருக்கிறது. பல்லவ ராஜாங்கம்தான் தரித்திரம் பிடித்த ராஜாங்கமாயிருக்கிறதே? எங்கேயாவது குதிரையைக் கண்டால் யுத்தத்துக்கு வேண்டுமென்று கைப்பற்றிக் கொள்கிறார்களாமே? அதற்காகப் பயந்து பயந்து வரவேண்டியதாயிருந்தது!' என்றார். அப்புறம் பிக்ஷு குதிரை மேலும் நான் கால்நடையாகவும் கொஞ்சதூரம் வந்தோம். அப்போது பிக்ஷு அடிக்கடி 'தாகமாயிருக்கிறது' 'தாகமாயிருக்கிறது' என்று சொல்லிக்கொண்டே வந்தார். அவர் மேல் எனக்கு மிகவும் பரிதாபம் உண்டாகி விட்டது. 'அடிகளே! இந்தத் திவ்யமான ஏரியில் தண்ணீர் குடித்துத் தாகம் தணித்துக் கொள்ளுங்களேன்!' என்று சொல்லி அவரைக் குதிரை மேலிருந்து ஒரு தள்ளுத் தள்ளினேன் பிக்ஷு ஏரியில் விழுந்தார். அடடா! என்ன ஆனந்தமாக அவர் ஏரித் தண்ணீர் குடித்தார் தெரியுமா..."

இதைக்கேட்ட சிவகாமியினால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. ஆயனர், "அம்மா, இதென்ன அசந்தர்ப்பமான சிரிப்பு?" என்று அதட்டிவிட்டு, "அட பாவி! அப்புறம் என்னடா செய்தாய்?" என்று குண்டோதரனைப் பார்த்துக் கேட்டார்.

"குருவே! புத்த பிக்ஷுவுக்குத் தண்ணீர் கொடுத்துத் தாகத்தைத் தணிப்பது பாவமா?" என்றான் குண்டோதரன்.

"அப்புறம் என்ன செய்தாய், சொல்!" என்று ஆயனர் மிகவும் கடுமையான குரலில் கேட்டார்.

"என்ன செய்தேனா? பிக்ஷுவுக்கு நீந்தத் தெரியாதென்று தெரிந்ததும் கரையிலே கிடந்த அவருடைய மேல் வஸ்திரத்தை எடுத்து அதன் ஒரு முனையைக் கரையிலிருந்த மரத்தின் வேரில் கட்டினேன். இன்னொரு முனையை அவர் பிடித்துக்கொண்டதும், 'பிக்ஷுவே! மெதுவாகக் கரையேறிவந்து சேருங்கள்! நான் போகிறேன்!' என்றேன். அப்போது அவர், 'ஐயோ! ஓலை! ஓலை!' என்று அலறினார். 'என்ன ஓலை?' என்று கேட்டேன். 'நாகநந்திக்குக் கொண்டுவந்த ஓலை! கரையிலே கிடக்கிறதா, பார்!' என்றார். கரையிலே பார்த்தேன் ஒரு ஓலை கிடந்தது. அதை எடுத்து அவருக்குக் காட்டி, 'ஓலை பத்திரமாயிருக்கிறது கவலை வேண்டாம்' என்று சொல்லிவிட்டுக் குதிரை மேல் ஏறிக் கொண்டேன். அவ்வளவுதான்; இங்கே வந்து சேர்ந்தேன்" என்று குண்டோதரன் தன் கதையை முடித்தான்.

குரோதம் நிறைந்த குரலில் நாகநந்தி, "ஆயனரே! தயவு செய்து உமது சீடனிடமிருந்து ஓலையை வாங்கிக் கொடுங்கள்!" என்றார்.

ஆயனரும் கலக்கத்துடன், "குண்டோதரா! என் பெயரைக் கெடுக்கவா நீ என் சீடனானாய்? நல்ல காரியம் செய்தாய்! போகட்டும், இவர்தான் நாகநந்தியடிகள், அந்த ஓலையைக் கொண்டு வந்திருக்கிறாயா? இப்படிக் கொடு!" என்றார்.

"குருவே! அப்படியா? நான் நினைத்தது நிஜமாய்ப் போயிற்றே? இவர்தானா நாகநந்தியடிகள்! சுவாமி! இதோ ஓலை!" என்று குண்டோதரன் நாகநந்தியடிகளிடம் ஓலையைக் கொடுத்தான்.

அதை அவர் மௌனமாக வாங்கிக் கொண்டு சாலை மரங்களின் வழியாக வந்து கொண்டிருந்த நிலாக் கிரணங்களின் உதவியினால் படிக்க முயன்றார் ஆனால் படிக்க முடியவில்லை என்று தெரிந்தது.

பிக்ஷுவின் நடை முன்னைக் காட்டிலும் வேகத்தையடைந்தது. அந்தச் சாலையில் வண்டிச் சத்தத்தையும் குதிரையடிச் சத்தத்தையும் மனிதர் காலடிச் சத்தத்தையும் தவிர மற்றபடி நிசப்தம் குடிகொண்டது. மனிதரின் பேச்சுச் சத்தம் அடியோடு நின்றது.

(சபதம் தொடரும்)

# SAKTHI CASH & CARRY

245-247 High Street North, East Ham,
London E12 6SJ
+44(0)20 8471 4713

இந்திய – இலங்கை மளிகைப்
பொருட்கள்
குறைந்தவிலையில் உயர்தரமாகவும்
சுவையாகவும் கிடைக்கும்
தாயகத்தின் அனைத்துவிதமான
பொருட்களும் கிடைக்கும்

வந்து பாருங்கள்!!!

வியந்து
போவீர்கள் !!!






# SWATHI CASH & CARRY

306-308 High Street North, East Ham,
London E12 6SA
+44(0)20 8586 7648



# வனங்களை வாழவைப்போம் !

தமிழகத்தில் அரசுக்காகட்டும், மக்களுக்காகட்டும், வனங்கள் பற்றிய புரிதல் இல்லை. வனங்களும் அவற்றின் உயிரினங்களும் மக்களின் வாழ்க்கைக்கு எவ்வளவு இன்றியமையாதவை என்பதை இவர்கள் உணரவேயில்லை. காடுகள் செழிப்பாக இருந்தால்தான் மழையைப் பூமிக்குக் கொண்டுவர முடியும்; மழை பெய்தால்தான் அருவிகளும், ஆறுகளும், குளம் குட்டைகளும் நிரம்பும்; நிலத்தடி நீர்மட்டம் உயரும்; நகரங்களின் தண்ணீர்த் தேவையை நிறைவேற்ற முடியும். காடுகள் வளமாக இருக்க வேண்டுமானால், மக்கள் காடுகளை விட்டு ஒதுங்கி இருப்பது நல்லது. ஆனால், அரசின் நிலைப்பாடோ நேர் எதிராக இருக்கிறது. 'சூழல் சுற்றுலா' என்ற பெயரில் காடுகளைச் சுற்றுலாத் தலங்களாக மாற்றி வருகிறது.

'சுற்றுலா' என்ற பெயரில் நம் பாரம்பரியச் சின்னங்களைச் சிதைத்து விட்டோம்; கோயில்களை வியாபாரத் தலங்களாக்கி விட்டோம்; வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களை ஒழித்துவிட்டோம். இப்போது வனங்களையும் பாழ்படுத்தப் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

காடுகளுக்குள் தார்ச் சாலைகள், ரயில் தண்டவாளங்கள், விடுதிகள், வாகன நிறுத்தங்கள், கல்வி நிலையங்கள், ஆன்மிக மையங்கள் முதலியவை அரசின் அனுமதியோடு அல்லது அனுமதியின்றி உருவாகியுள்ளன. காடுகளுக்குள் தார்ச்சாலைகள் எதற்கு? விலங்குகள் தாங்கள் நடந்து செல்வதற்கு சாலை வசதி கேட்பதில்லை. வனத்துறையினர் வனப்பணிகளுக்காகக் காடுகளுக்குள் செல்வதற்கு மிக நவீன வாகனங்கள் உள்ளன. பின் யாருக்குச் சாலைகள்? நாடு, நகரங்களைச் சுற்றிப் பார்க்கிறோம் என்று விலங்குகள் ஊருக்குள் செல்கின்றனவா? இல்லையே. பின் மனிதர்கள் ஏன் அவற்றின் வாழ்விடங்களுக்குச் சுற்றுலா செல்ல வேண்டும்?

வனத்துறையின் பெரும்பாலான உயரதிகாரிகள் 'சூழல் சுற்றுலாவை' முன்னெடுத்துச் செய்வதில் உடன்பாடு கொண்டிருக்கிறார்கள். அதற்கு அவர்கள் சொல்லும் காரணங்கள் இரண்டு. ஒன்று, 'மக்கள் வனங்களுக்குள் சென்று இயற்கையை ரசித்தால்தான் அதன் அருமை அவர்களுக்குப் புரியும். அப்போதுதான் வனங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்படும்' என்பது.






# வனம்

முனைவர் இரா.கற்பகம்


இதனால் பள்ளி, கல்லூரி மாணவர்களையும், பொதுமக்களையும் பல குழுக்களாக வனத்துறை சில நிபந்தனைகளோடு வனங்களுக்குள் சுற்றுலா செல்ல அனுமதிக்கிறது. ஆனால், இந்த நிபந்தனைகளை மக்கள் பின்பற்றுகிறார்களா என்று வனத்துறை கண்காணிப்பதில்லை, அதற்குண்டான ஆள் வசதியோ, நவீன வசதிகளோ வனத்துறையிடம் இல்லை.

கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் வனத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள மிருகக்காட்சி சாலைகள், பாம்புப் பண்ணைகள், முதலைப் பண்ணைகள், சூழல் சுற்றுலாத் தலங்கள் ஆகியவற்றில் சுற்றுலாப் பயணிகள்




பிளாஸ்டிக், உணவுப் பொருள்களைக் கொண்டு செல்லத் தடை உள்ளது. வெளியிலேயே பயணிகள் சோதனையிடப்பட்டுத் தடை செய்யப்பட்ட பொருள்கள் இருந்தால் கைப்பற்றப்படுகின்றன. தமிழ்நாட்டில் அப்படி ஏதும் கிடையாது.சோதனைச் சாவடியில் ஒரே ஒரு காவலர் மட்டும் இருப்பார். அவரது வேலை வண்டிகளின் எண்களைக் குறித்துக் கொள்வது மட்டுமே. சூழல் சுற்றுலாத் தலங்களில் வனத்துறை சார்பாக ஒன்றோ இரண்டோ ஊழியர்கள் இருப்பார்கள். அவர்கள் சொல்வதை நம் பயணிகள் காதில் கூட வாங்க மாட்டார்கள். நம் மக்களில் பெரும்பாலானோர் வனங்களுக்கு வருவது சத்தம் போட்டுப் பேச, ஆடிப் பாட, வாகனங்களில் பயணித்தபடிசத்தமாகப் பாடல்கள் கேட்க, நன்றாகச் சாப்பிட, புகைப்படங்கள் எடுத்துக்கொள்ள !

இரண்டாவது காரணம், மக்கள் நடமாட்டம் அதிகரிப்பதால் வேட்டையாடுவது குறைந்திருக்கிறது. அதாவது காட்டைப் பூட்டி வைத்திருக்கும்போது வேட்டையாடுவது அதிகமாக இருப்பதாகவும்,திறந்துவிட்டால் வேட்டையாடுவது குறைந்திருப்பதாகவும் சொல்கிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், 'வீட்டின் கதவைப்





பூட்டி வைத்திருந்தீர்களானால் கதவை உடைத்துத் திருடர்கள் திருடிக்கொண்டு போய்விடுவார்கள், அதனால் கதவுகளைத் திறந்தே வைத்திருங்கள்' என்று சொல்வது போல் இருக்கிறது! வேட்டையாடுவது குற்றம், அதைத்தடுக்க காவலை அதிகப்படுத்துவதை விட்டுவிட்டு, காட்டைத் திறந்து விடுவது எந்த விதத்தில் நியாயம்?

உயரதிகாரிகள் நிலைப்பாடு இதுவென்றால், கீழ்மட்டத்தில் உள்ளவர்களின் நிலைப்பாடு நேர் எதிராக உள்ளது. ஆள்பற்றாக்குறையால், இருப்பவர்களுக்கு அதிக பணிச்சுமை, வனப் பராமரிப்புப் பணிகளோடு கூடுதலாக 'சூழல் சுற்றுலாவுக்கான' பணிகள், பயணியர் காட்டில் விட்டுச் செல்லும் குப்பைகளை அகற்றும் பணி, வனங்களுக்கும் வன உயிரினங்களுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதை விடுத்து, சுற்றுலாப் பயணிகளுக்கு முக்கியத்துவம் தரவேண்டிய கட்டாயம் ஆகியவற்றால் இவர்கள் சூழல் சுற்றுலாவுக்கு எதிராகவே இருக்கிறார்கள். ஆனால் அரசிடமோ, தங்கள் உயரதிகாரிகளிடமோ தங்கள் நிலைப்பாட்டை இவர்கள் வெளிப்படையாகச் சொல்ல முடியாது.

எடுத்துக்காட்டுக்கு இரண்டு நிகழ்வுகளைக் கூறலாம். ஒரு வேட்டைத் தடுப்பு முகாமைத் தத்தெடுத்து அதில் பணியில் இருந்த வேட்டைத் தடுப்புக் காவலர்களுக்குச் சில வசதிகள் செய்துதரும் பணி தொடர்பாக நாங்கள் ஒரு மிக அடர்ந்த வனப்பகுதிக்குச் சென்றிருந்தோம். எல்லாக் காடுகளுக்கு உள்ளேயும் இருப்பது போல் இங்கும் ஓரிரு கோயில்கள் இருந்தன. வாரத்திற்கு மூன்று நாள்கள் மட்டும் பக்தர்கள் உள்ளே செல்ல வனத்துறை அனுமதிக்கிறது.

எங்கள் பணிகள் முடிந்து நாங்கள் திரும்பும் நேரம், 'பக்தர்கள்' சிலர் வழிபாடு முடிந்து திரும்பினார்கள். லாரிகளிலும், டெம்போக்களிலும், கூட்டம் கூட்டமாக, கூச்சலிட்டுக் கொண்டும், துணிகளையும், பிளாஸ்டிக், கண்ணாடி




பாட்டில்களை வீசிக் கொண்டும் சென்றார்கள். யானை, சிறுத்தை, கரடி, காட்டெருமை ஆகியவை நடமாடும் பகுதி அது. இவர்கள் போட்ட கூச்சலில் ஒன்று அந்த மிருகங்கள் அரண்டு ஓடி ஒளிந்துகொள்ளும் அல்லது வெகுண்டு தாக்கும்.

நல்ல வேளையாக இரண்டாவது நிகழவில்லை! எங்களோடு வந்த வேட்டைத் தடுப்புக் காவலர்கள் இதை இயலாமையோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள்.




உயரதிகாரிகளுக்கு நடைமுறையில் அங்கு என்ன நடக்கிறது என்பது தெரியவில்லை. உண்மையை அவர்களுக்கு எடுத்துச் சொல்ல கீழ்மட்டத்தில் உள்ளவர்களுக்குத் துணிவில்லை. நமது சுற்றுலாப் பயணிகளோ இயற்கையை நேசிக்கும் பொறுப்பான பயணிகள் இல்லை. இந்த முக்கோணத்தில் சிக்கிச் சீரழிவது நமது வனங்களே! இச்சீரழிவிலிருந்து வனங்களைக் காப்பாற்றாவிடில், வருங்காலத்தில், எஞ்சிய வனப்பகுதியையும் நாம் இழக்க நேரிடும்.

அரசு, உடனடியாக பத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

1. வனம், சுற்றுச் சூழல் ஆகிய இரு பெரும் துறைகள் தற்போது ஒரே துறையாக இருக்கின்றன. இவை வனத்துறை, சுற்றுச்சூழல் துறை என்று தனித்தனியாகச் செயல்பட்டால் நிர்வாகம் மேம்படும்.

2. வனத்துறையில் பல்வேறு நிலைகளிலும் காலியாக இருக்கும் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். இவற்றிற்கு முற்றிலுமாக வனம் பற்றிய அறிவும், புரிதலும் உள்ளவர்களையே பணியமர்த்த வேண்டும். வனக் கல்லூரிகளில் வனம் சார்ந்த படிப்புகளைப் படித்து வரும் மாணவர்களை, அவர்களின் மதிப்பெண்களுக்கு ஏற்ப வெவ்வேறு நிலைகளில் பணியமர்த்தலாம்.

3. வனத்துறையின் செயலராக இந்திய ஆட்சிப்பணி அதிகாரி நியமிக்கப்படுகிறார். இந்திய வனப் பணி அதிகாரி இப்பதவியில் இருந்தால் நிர்வாகம் இன்னும் சிறப்பாக இருக்கும்.

4. வனத்துறையின் எல்லா மட்டத்திலும் உள்ள ஊழியர்களில் தொண்ணூற்றி ஐந்து சதவீதம் பேர் வனங்களையும் விலங்குகளையும் தங்கள் உயிரினும் மேலாக நேசிப்பவர்களாகவே இருக்கிறார்கள். அவர்களுக்குரிய அங்கீகாரமும், மேலும் பல சலுகைகளும், வசதிகளும் அரசால் அளிக்கப்பட வேண்டும். எந்த மட்டத்திலும் அரசியல் தலையீடின்றிச் சுதந்திரமாகச் செயல்படும் சூழலையும் அரசாங்கம் அவர்களுக்கு உருவாக்கித் தர வேண்டும்.

5. எக்காரணத்தாலும், யார் சிபாரிசினாலும், வனங்களுக்குள் வெளியாள்கள் வனப் பணி சாராத உல்லாசப் பயணம் செல்வது தடுக்கப்பட வேண்டும்.

6. யானை வழித்தடங்களில் முளைத்திருக்கும் எண்ணற்ற கட்டடங்களையும், பிற ஆக்கிரமிப்புகளையும் பாரபட்சமின்றி இடித்துத்தள்ளலாம்.

7. வனங்களுக்குள் மக்கள் வசதிக்காகச் சாலைகள், ரயில் பாதைகள் அமைப்பது கூடாது.

8. வனத்துறை ஊழியர்களுக்கு இக்காலத்துக்கேற்ற நவீன உபகரணங்கள், பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். ஒலிமாசு, காற்றுமாசு ஆகியவற்றை இந்த ஊழியர்களே ஏற்படுத்தாமலிருக்கும் வண்ணம் அவர்களுக்குப் போதிய விழிப்புணர்வும், பயிற்சியும் தர வேண்டும்.

9. காவல் துறையில் இருக்கும் 'ஆர்டர்லி' முறைபோன்று இத்துறையில் இல்லாத போதும், சில சமயங்களில் கீழ்நிலை ஊழியர்கள் சிலர் தங்கள் பணியைத் தவிர வேறு சில பணிகளைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இது தவிர்க்கப் பட வேண்டும்.

10. சோதனைச் சாவடிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவது, எல்லாச் சோதனைச் சாவடிகளையும் ஒருங்கிணைத்து வனத்துறைக் கட்டுப்பாட்டு அறைகளை ஆங்காங்கே அமைப்பது, உயரதிகாரிகள் முன்னறிவிப்பின்றி சோதனையிடுவது போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு நாம் வனங்களை வாழவைப்போம்!




## மகத்துவம் நிறைந்த கீரைகள்

கீரையில் இருக்கும் சத்துக்கள் அனைத்தும் வீணாகாமல் அப்படியே முழுமையாக கிடைக்க, முதலில் கீரைகளை நீண்ட நேரம் சமைப்பதை தவிர்க்க வேண்டும். அதிக நேரம் சமைப்பதினால் கீரையில் இருக்கும் முக்கிய சத்துபொருளான கரோட்டின் சிதைந்து விடும்.

கரோட்டின் பார்வைத் திறனுக்கு உதவும் சத்துப்பொருள் என்பது குறிப்பிடத்தக்கது. கீரைகளை சமைப்பதற்கு பயன்படுத்தும் தண்ணீரை வீணாக கீழே கொட்டிவிடக் கூடாது. மேலும் கீரைகளை சமைக்கும்—பாத்திரங்களை சமைக்கும்போது திறந்து வைக்காமல் மூடி வைக்க வேண்டும்.

* கீரைகளை வெயிலில் உலர்த்தக்கூடாது. அப்படி உலர்த்தினால் அவற்றில் இருக்கும் கரோட்டீன்கள் வீணாகி விடும்.

* கீரைகளை பொரிப்பதை தவிர்க்க வேண்டும்.

சத்து நிறைந்த உணவு கீரைகீரை உலகில் மிகவும் சத்து நிறைந்த உணவுகள் ஒன்றாகும்! கீரையில், வைட்டமின் கே, வைட்டமின் ஏ, மாங்கனீசு, மக்னீசியம், இரும்பு, வைட்டமின் சி, கால்சியம், பொட்டாசியம், ஃபோலேட் மற்றும் வைட்டமின்கள் பி உட்பட பல முக்கியமான வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள், ஒரு சிறந்த ஆதாரமாக உள்ளது. கீரையை காலை அல்லது மாலை என உணவுகளில் சேர்த்துக்கொண்டால் உடல் நலம் பெறும். குழந்தைக்கு கீரையை உணவுகளில் பிசைந்து சாப்பிட்டால் மருத்ததுவரை அணுகவேண்டிய அவசியம் இல்லை.




கழுத்து வலி உள்ளவர்கள் தினந்தோறும் முருங்கைக் கீரையை உணவுடன் உட்கொண்டு வர படிப்படியாக நிவாரணம் கிடைக்கும். முருங்கை இலையுடன் வசம்பு, உப்பு சேர்த்து சுட்டு கரியாக்கி, அதை நீரில் குழைத்து தொப்புளைச் சுற்றி பற்றிட குழந்தைகளின் வயிற்று உப்புசம், வயிற்று வலி தீரும்.

முருங்கைக் கீரையை துவரம் பருப்புடன்




சமைத்து, அதனுடன் ஒரு கோழி முட்டை சேர்த்து, நெய்விட்டு கிளறி உட்கொண்டு வரவும். இதை 1 மண்டலம் (48 நாட்கள்) சாப்பிட்டு வர ரத்தம் விருத்தியாகும். முருங்கைக் கீரையுடன் எள் சேர்த்து சமைத்து சாப்பிட நீரிழிவு நோய் குணமாகும்.

நன்கு பசுமையாகவும், இளசாகவும் உள்ள முருங்கை காய்களை எடுத்து, இடித்து சாறு பிழிந்து, அத்துடன் சம அளவு தேன் கலந்து சாப்பிட ஜலதோசம் குணமாகும். கழுத்து வலி உள்ளவர்கள் தினந்தோறும் முருங்கைக் கீரையை உணவுடன் உட்கொண்டு வர படிப்படியாக நிவாரணம் கிடைக்கும்.



முருங்கை இலையுடன் வசம்பு, உப்பு சேர்த்து சுட்டு கரியாக்கி, அதை நீரில் குழைத்து தொப்புளைச் சுற்றி பற்றிட குழந்தைகளின் வயிற்று உப்புசம், வயிற்று வலி தீரும். முருங்கைக் கீரையை துவரம் பருப்புடன் சமைத்து, அதனுடன் ஒரு கோழி முட்டை சேர்த்து, நெய்விட்டு கிளறி உட்கொண்டு வரவும். இதை 1 மண்டலம் (48 நாட்கள்) சாப்பிட்டு வர ரத்தம் விருத்தியாகும்

இரத்த மூலத்தை சரியாக்கும் கீரைகள்முளைக்கீரை, துத்திக்கீரை இரண்டையும் சம அளவு எடுத்து, சிறுபருப்பு சேர்த்துச் சமைத்துச் சாப்பிட்டால் உள் மூலம், சூடினால் ஏற்படும் கட்டி, இரத்த மூலம் போன்றவை எளிதில் சரியாகும். பொன்னாங்கண்ணிக் கீரையுடன் சிறுபருப்பு சேர்த்து சமைத்துச் சாப்பிட்டால் மூலச்சூடு, மூலக்கடுப்பு போன்றவை தீரும்.

வெங்காயத்தாள், பொடுதலை, வெந்தயம் மூன்றையும் சம அளவு எடுத்து அரைத்துச் சாப்பிட்டால் இரத்த மூலம், பௌத்திரக் கட்டி போன்றவை குணமாகும். முடக்கத்தான் கீரையுடன் 2 கடுக்காயைத் தட்டிப்போட்டு கஷாயமாக்கிச் சாப்பிட்டால் மூல நோய்கள் குணமாகும்.

அகத்திக்கீரையை சாறாக எடுத்து சாற்றில் 5 கடுக்காய்களை உடைத்துப்போட்டு கஷாயம் தயாரித்து, அதை வாய் அகன்ற பாத்திரத்தில் ஊற்றி சுமார் அரை மணி நேரம் ஆசனக் குளியல் செய்தால், மூலக்கிருமிகள், மூல எரிச்சல், மூலச்சூடு, இரத்த மூலம் போன்றவை முழுமையாக குணமாகும்.

கானாம்வாழைக் கீரையையும் துத்தி இலையையும் சேர்த்து அரைத்துச் சாப்பிட்டால் இரத்த மூலம் எளிதில் குணமாகும். துத்திக் கீரையுடன் சிறிது மஞ்சள் சேர்த்து விளக்கெண்ணெய் விட்டு

வதக்கிக் கட்டினால், மூல நோயில் உண்டாகும் பௌத்திரக் கட்டி குணமாகும்.

புளியாரைக் கீரைச் சாறில் துத்தி இலையை சேர்த்து அரைத்துச் சாப்பிட்டால் இரத்த மூலம் சரியாகும். சுக்காங் கீரைச் சாறில் கடுக்காய் தோலை ஊற வைத்து அரைத்துச் சாப்பிட்டால் மூல நோய்கள், குடற்புண்கள் குணமாகும்.

விடும். வயிற்று உப்பிசம் இருந்தாலும் தணிந்து விடும். வெந்தயக் கீரையைப் பொடியாக நறுக்கி ஒரு சட்டியில் போட்டு வதக்கி, இரண்டு டம்ளர் தண்ணீர் விட்டு,ஒரு டம்ளர் அறவிற்குச் சுண்டக்காய்ச்சி, காலை மாலை அரை டம்ளர் வீதம் கொடுத்து வந்தால் நெஞ்சுவலி பூரணமாகக் குணமாகும்.

வெந்தயக் கீரையை ஆய்ந்து வேரை நீக்கி, கழுவி



சுக்காங் கீரை, துத்திக் கீரை இரண்டையும் சம அளவு எடுத்துப் பாலில் கலந்து சாப்பிட்டால் இரத்த மூலம் உடனே தீரும். பண்ணைக் கீரைச் சாறில் நாவல் பருப்பை அரைத்துச் சாப்பிட்டால் இரத்த மூலம் உடனே குணமாகும்.

பாற்சொரிக் கீரைச், துத்திக்கீரை இரண்டையும் அரைத்து பாலில் கலந்து சாப்பிட்டால் மூல நோய்கள் குணமாகும். பாற்சொரிக் கீரைச் சாறில் வெந்தயத்தை ஊற வைத்து அரைத்துச் சாப்பிட்டால் இரத்த மூலம் குணமாகும்.

கண் பார்வை குறைவை நீக்கும் வெந்தயக்கீரைவெந்தயக் கீரையைக் கொண்டு அல்வா தயாரித்துக் காலை மாலை கொட்டைப் பாக்களவு சாப்பிட்டு வந்தால் உடல் சூடு தணிந்து சமப்படும். சீதபேதி குணமாகும். வயிற்றுப் போக்கை நிறுத்தும். மாதவிடாய் தொல்லை நீங்கவும், உடலை வளர்க்கும் புதிய இரத்தத்தை உற்பத்தி செய்யும். உடலுக்கு நல்ல பலம் தரும்.வெந்தயக்கீரையைக் கூட்டு வைத்துப் பகலில் சாப்பிட்டால் வாய்வு கலைந்து விடும். மூன்றே நாட்களில் வாயு முழுவதையும் கலைத்து

ஒரு சட்டியுல் போட்டுச் சிறிதளவு தண்ணீர் விட்டு நன்றாக வேகவைக்க வேண்டும். வெந்தயக்கீரை இருக்கும் அளவில் இரண்டு பங்கு கோதுமை ரவையை எடுத்து லேசாக வறுத்து இதில் கொட்டி, எல்லாம் எந்த அளவு இருக்கிறதோ அந்த அளவிற்கு சர்கரை சேர்த்து இலேசாகக் கிளறிக் கொண்டே இருந்தால் அல்வா போல வரும்.

வயதுக்கு வரும் பெண்கள் இதைச்சாப்பிட்டால் இரத்த விருத்தியுண்டாகும். வெந்தயக்கீரையில் ஏ வைட்டமின் சத்தியும், சுண்ணாம்புச்சத்தும் இருப்பதால் இதைப் சாப்பிடும் போது மாரடைப்பு, கண்பார்வை குறை, வாதம், சொறி சிரங்கு, இரத்தசோகை ஆகியவை குணமடையவும்,, பசியைப்போக்கவும் பயன்படுகிறது. வெந்தயக்கீரையில் 49 கலோரி சத்துள்ளது. வெந்தயக்கீரையுடன் பாசிப்பயிர் சேர்த்து குழம்பு வைத்துச் சாப்பிட்டால் கல்லீரல் பலப்படுகிறது வாய்ங்குவேக்காடு வராது.

இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை குறைக்கும் வெந்தயக்கீரைசாதாரணமாகச் சமையலில் பயன்படுத்தப்படும் வெந்தயத்தின்

தழைதான் வெந்தயக்கீரை . இது சத்து நிறைந்த கீரை. வெந்தயம் விதைகளின் மூலம் பயிரடப்படுகிறது. இது மூன்று மாதங்களில் பூத்துக் காய்த்துப் பலன் தந்துவிடும். கீரையாகப் பயன்படுத்துவதற்குப் பூக்கும் முன்னரேயே வெந்தயச் செடியைப் பிடுங்கிவிட வேண்டும். வெந்தயச் செடி இளம் பச்சை நிறமுடையது. சுமார் இரண்டரை அடி வரை வளரும். வீட்டுத் தோட்டத்திலும்தொட்டியிலும் இதை மிக எளிதாக வளர்க்க முடியும். வெந்தயக் கீரையில் வைட்டமின்களும், தாது உப்புகளும் அதிக அளவில் இருக்கின்றன. வெந்தயக் கீரையை பல முறைகளில் சமைத்து உண்ணலாம். இதை துவரம்பருப்புடன் வேக வைத்து கூட்டாகச் செய்து சாப்பிடலாம். இந்தக் கீரையுடன் புளி சேர்த்து வேக வைத்தும் கூட்டு தயாரிக்கலாம்.




வெந்தயக் கீரை சீரண சக்தியைச் செம்மைப்படுத்துகிறது. சொறி, சிரங்கை நீக்குகிறது. பார்வைக்கோளாறுகளைச் சரி செய்கின்றது. வெந்தயக் கீரையைத் தொடர்ந்து சாப்பிட்டால் காசநோயும் குணமாவதாகக் கூறுகின்றனர். இந்தக் கீரை வயிற்று நோய்களையும் குணப்படுத்துகின்றது. வெந்தயக் கீரையை வேக வைத்து அதனுடன் தேன் கலந்து கடைந்து உண்டால் மலம் சுத்தமாகும். உடல் சுத்தமாகும்.

குடல் புண்களும் குணமாகின்றன. மலம் கழிக்கும்போது ஏற்படும் உளைச்சலையும் எரிச்சலையும் வெந்தயக்கீரை குணப்படுத்துகின்றது. வெந்தயக்கீரையை வெண்ணெயிட்டு வதக்கி உண்டால் பித்தக்கிறுகிறுப்பு, தலை சுற்றல், வயிற்று உப்பிசம், பசியின்மை, ருசியின்மை ஆகியவை குணமாகும். உட்சூடும் வறட்டு இருமலும் கட்டுப்படும்.

நீண்ட நேரம் அமர்ந்திருந்து வேலை செய்ய முடியாமல் இடுப்பு வலிப்பவர்கள் வெந்தயக் கீரையுடன் கோழி முட்டை மற்றும் தேங்காய்ப்பால் சேர்த்து நெய்யில் வேக வைத்து உணவுடன் சேர்த்து வந்தால் இடுப்பு வலி நீங்கும். வெந்தயக் கீரை ஒரு சிறந்த பத்திய உணவாகும். இதை அரைத்து நெய் சேர்த்து சாதத்துடன் பிசைந்து சாப்பிட்டால் தொண்டைப்புண், வாய்ப்புண் ஆகியவை ஆறும். இந்தக் கீரையை வதக்கி அதனுடன் வாதுமைப் பருப்பு, கசகச கோதுமை ஆகியவற்றைச் சேர்த்துப் பால்விட்டு அரைத்து நெய்விட்டுக் கிண்டி உட்கொண்டால் உடலுக்கு வலிமையும், வனப்பும் ஏற்படும்.

இடுப்பு வலி நீங்கும். வெந்தயக் கீரையுடன் சீமைப்புள், அத்திப்பழம், திராட்சை ஆகியவை சேர்த்துக் கஷாயமிட்டு தேன் கலந்து உண்டால் மார்பு வலி, மூக்கடைப்பு ஆகிய நோய்கள் நீங்கும். மூலநோய், குடல் புண் போன்ற நோய்களுக்கும் இந்தக் கீரை சிறந்த மருந்தாகத் திகழ்கிறது. வெந்தயக் கீரையை அரைத்துச் சூடு செய்து வீக்கங்கள் மீது பூசினால் வீக்கம் குறையும். இவ்வாறு செய்வதால் தீப்புண்களும் குணமாகும். இந்தக் கீரையை சீமை அத்திப்பழத்துடன் சேர்த்துக் கரைத்துக் கட்டிகளின் மீது பற்றுப் போட்டால் அவை விரைவில் பழுத்து உடையும்.

வெந்தயக் கீரைக்கு இரத்தத்தில் உள்ள சர்க்கரையையும், சிறுநீரில் உள்ள சர்க்கரையையும் குறைக்கும் ஆற்றல் உள்ளது. இந்தக் கீரையைத் தொடர்ந்து 40 நாட்களுக்குச் சாப்பிட்டு வந்தால் நீரிழிவு கட்டுப்படும். எனவே, நீரிழிவு உள்ளவர்கள் வெந்தயக் கீரையைத் தொடர்ந்து சாப்பிடுவது நல்லது. வெந்தயக் கீரை சீரண சக்தியை அதிகரித்து, பசியைத் தூண்டுகிறது.


சிறுநீர் உறுப்புகளை சுத்தம் செய்கிறது. மூளை நரம்புகளைப் பலப்படுத்துகிறது. வயிற்றுக் கட்டி, உடல் வீக்கம், சீதபேதி, குத்திருமல், வயிற்று வலி ஆகியவற்றைக் குணப்படுத்துகிறது. வெள்ளைப் பூசணிக்காய் சாம்பாரில் வெந்தயக் கீரையைச் சேர்த்துச் சாப்பிட்டால் பெருத்த உடல் இளைக்கும்.



# தேவை ஒரு கூட்டுக்

## புத்துயிர் பெறவேண்டும் கூட்டுக் குடும்பம் !

குழந்தைகள்தான் ஒரு குடும்பத்தின், தேசத்தின் செல்வம் என்ற நம்பிக்கை கொண்ட கலாசாரம் நம்முடையது. நமது தாத்தா, பாட்டிகளுக்கு பத்துப் பன்னிரெண்டு பிள்ளைகள் இருந்ததை நாம் அறிவோம். பதினாறு பிள்ளைகள் பெற்ற பெண்ணை “ஒரு கோட்டை பிள்ளை பெற்ற மகராசி’ என்று கொண்டாடியும் இருக்கிறார்கள். இருபது ஆண்டுகளுக்கு முன்பு கூட நான்கைந்து குழந்தைகள் ஒவ்வொரு வீட்டிலும் இருந்திருக்கிறார்கள்.




அந்தப் பிள்ளைகள் எப்படி வளர்ந்தார்கள்?அப்போதைய குழந்தை வளர்ப்பின் சாத்தியப்பாடுகள் என்ன? என்று யோசிக்கப் புகுந்தால் மலைப்பும் ஆச்சர்யமும் தோன்றும். மூத்த பிள்ளை கடைசிப் பிள்ளையைப் பொறுப்பாய் பார்த்துக்கொள்ளும். பெண் பிள்ளைகள் ஒன்றுகூடி ஒருவருக்கொருவர் ரகசியம் பேசுவதும், உதவி புரிவதும் துணையாய் இருப்பதும் என அவர்களின் வாழ்வியல் முறையே ஒரு கொண்டாட்டம் போல இருந்தது. குழந்தைப் பருவம் முதல் வயோதிகம் வரை இந்தச் சகோதர உறவுகள் ஒருவருக்கொருவர் துணை நின்று அன்பு பாராட்டித் தங்கள் வாழ்வையே ஒரு திருவிழா போல ஆக்கிக் கொண்டார்கள்.

பத்துப் பிள்ளைகள் பெற்ற பெற்றோருக்குத் தங்கள் பிள்ளைகளுக்குத் தேவையானதெல்லாம் தர முடிந்ததா என்ற கேள்வியை இன்றைய தலைமுறையினர் முன்வைக்கிறார்கள். இதற்கான பதில் “நிச்சயமாய் இல்லை’ என்பதுதான். என்றோ விசேஷ நாட்களில் மட்டுமே அவர்கள் பலகாரங்களை ருசித்தார்கள். அந்த விசேஷ நாட்களுக்காக கற்பனையோடு காத்திருந்தார்கள். நண்பர்களோடு கூடி பண்டமாற்று செய்து




# குடும்பம்

கொண்டார்கள். ஒரு புதிய உடைக்காக தீபாவளி வரை காத்திருந்த அவர்களின் காத்திருப்பில் மகிழ்ச்சியும் சுவாரசியமும் இருந்தது.

'கோதை' ஜோதிலட்சுமி

வாழ்வில் எதுவும் உடனே கிடைத்து விடாது. எதனையும் அடைவதற்கு காத்திருத்தல் அவசியம் என்று கற்றுக்கொண்டிருந்தார்கள். அதனால் பொறுமை எனும் குணம் அவர்களுக்கு இயல்பாகவே அமையப்பெற்றிருந்தது. பெரிய கூட்டுக்குடும்பத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு




விதமான இயல்பு கொண்டவர்களாய் இருந்த சூழலில் வளர்ந்தவர்கள் சூழ்நிலைக்கு ஏற்ப தங்களைத் தகவமைத்துக் கொள்ளும் தன்மையைப் பெற்றிருந்தார்கள்.

தம்பியைப் படிக்க வைத்த அண்ணன்மார்கள், சகோதரியின் திருமணத்திற்காக உழைத்த சகோதரர்கள், குடும்பத்திற்கென தன் ஆசைகளைத் துறந்த பெண்கள் என அவர்கள் தங்கள் குடும்பத்தில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, ஒற்றுமை, உழைப்பு, இப்படி பல நற்பண்புகளைப் பெற்று செம்மையாய் வளர்ந்திருந்தார்கள். குழந்தை வளர்ப்புக்கென பிரத்யேகத் திட்டங்கள் எதனையும் இந்தப் பெற்றோர்கள் வைத்திருக்கவில்லை. குழந்தைகள் கூடி வாழ வேண்டுமென நினைத்தார்களே தவிர, எப்படி சம்பாதிக்க வேண்டுமென நினைத்தார்களில்லை. "மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான்'என்ற நம்பிக்கை பெரியவர்களுக்கும், பெரியவர்கள் மீது மரியாதை பிள்ளைகளுக்கும் இருந்தது.

இப்படி இருந்த நமது குடும்ப கலாசாரம், கடந்த இருபது ஆண்டுகளுக்குள் பெரும் மாற்றத்தைச் சந்தித்துள்ளது கண்கூடான உண்மை. கூட்டுக் குடும்பங்கள் மறைந்து தனிக் குடும்பங்கள் தோன்றிவிட்டன. இதற்குப் பணி நிமித்தமான

## The Joint Family

- It stays together, eats together, celebrates together, works together and dodges tax together with help of friendly regulations for the "undivided family". the extended family is generally melodramatic- from Ramayana to Hum Apke Hain Kaun? – Sometimes quarrelsome, and occasionally stifling.

காரணங்கள் இருக்கின்றன என்றாலும், அதனால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் இன்றைய தலைமுறை குழந்தைகளுக்கே.

இன்று குழந்தை வளர்ப்பு என்பது ஆகக்கடின பணி என்றும், சிக்கலான, சவால்கள் நிறைந்த பெரும் சுமை என்றும் கருதுகிறார்கள். வீடு நிறைய குழந்தைகள் கூடிக்களித்து ஒருவருக்கொருவராக வளர்ந்த காலம் போய், ஒரேயொரு குழந்தை தன்னந்தனியே ஏது செய்வதென அறியாது தவிக்கும் நிலைக்கு குழந்தைகளைத் தள்ளி விட்டோம்.

தாத்தா, பாட்டி, பெரியப்பா, அத்தை போன்று வீட்டில் குழந்தைகளுக்கு அன்பு செய்த உறவுகளெல்லாம் கனவாய்ப் போய்விட்ட நிலையில், வேலைக்காரப் பெண்களின் அல்லது குழந்தைகள் பாதுகாப்பு மைய பணிப்பெண்களின் கைகளில் பிள்ளைகள் சிக்குண்டு தவிக்கிறார்கள். இந்த நிலையில், அக்குழந்தைகள் தங்கள் பொழுதுபோக்கிற்கு நாடுவது பொம்மைகள், வீடியோ கேம்ஸ் எனப்படும் மின்னணு சாதன விளையாட்டுப் பொருட்கள் மற்றும் தொலைக்காட்சி ஆகியவற்றையே.

குழந்தைகளோடு நேரம் செலவிட முடியாமல் அவர்களைத் தனிமைப்படுத்தியிருக்கும் பெற்றோர் தங்கள் அன்பைப் பிள்ளைகளுக்குக் காட்ட சில வழிகளைத் தேர்ந்தெடுத்திருக்கின்றனர். அது, குழந்தைகள் கைகாட்டும் பொருள்களையெல்லாம் அவர்களுக்கு வாங்கித் தருவது. அது மட்டுமல்ல, தாராளமயமாக்கல், உலகமயமாக்கல் கொள்கைகளால் சந்தையாக மாறியிருக்கும் நம் தேசத்தில் வந்து குவியும் சர்வதேசப் பொருட்களையெல்லாம் வாங்கித் தந்து தங்கள் பிள்ளைகளுக்கு அபரிமிதமான சொகுசு வசதிகளை ஏற்படுத்தி தருவது.

உடைகள், அலங்காரப் பொருட்கள் தொடங்கி கைக்கடிகாரங்கள், காலணிகள் வரை தேவைக்கு அதிகமாக வாங்கிக் குவிப்பது, சர்வதேச உணவுகள் என்ற பெயரில் நம் சீதோஷண நிலைக்கு ஒவ்வாத உணவுப் பொருட்களை வாங்கித் தருவது என அவர்களின் மன, உடல் ஆரோக்கியத்தைக் கெடுத்துக் கொண்டிருக்கின்றனர் பெற்றோர்.

கூடி வாழ்ந்து பகிர்ந்துண்ட கலாசாரம் மறைந்து, நுகர்வு கலாசாரம் தலைதூக்கி, காண்பதையெல்லாம் யோசனையின்றி வாங்கிக் குவிக்கும் நிலையில் குழந்தைகள் தங்கள் தேவை, ஆசை என்பதையன்றி வேறு எதையும் அறியாதவர்களாக மாறிப் போனதில் வியப்பில்லை. பெற்றோர் இதனை வாங்குவதற்கு எத்தனை உழைத்தார்கள் என்பது அவர்களுக்குத் தெரிவதில்லை. பொறுமை, சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுத்தல் போன்ற அடிப்படைப் பண்புகளைக் கற்றுக்கொள்வதற்கான சூழலே அவர்கள் வாழ்வில் இல்லாமல் செய்தாயிற்று.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் குழந்தை வளர்ப்பு சுலபமல்லதான். குழந்தை வளர்ப்பென்பதை வரவு, செலவுக் கணக்கோடு தொடர்புபடுத்தும் நிலை தோன்றிவிட்ட சோகம் குழந்தைகளை எப்படியெல்லாம் பாதிக்கிறது என்பதை எவரும் யோசிப்பதில்லை. ஆனால், அடிப்படை குடும்ப கலாசாரத்தையும் மனிதர்களின் இயல்புகளையுமே மாற்றம் காணச் செய்து கொண்டிருக்கும் இந்த நுகர்வு கலாசாரம் பற்றி சிந்தித்துத் தீர்வு காண வேண்டிய அவசியமும் அவசரமும் இப்போது ஏற்பட்டிருக்கிறது.

கேட்டதையெல்லாம், நினைத்ததையெல்லாம் வாங்கிப் பழகிவிட்ட பின்னர் வளரிளம் பருவப் பிள்ளைகள் தங்கள் விருப்பம் போல எல்லாம் நடந்தாக வேண்டுமென எதிர்பார்க்கத்

தொடங்குவது பல குற்றங்களுக்கும் வழி செய்கிறது என்பதையும் மறுப்பதற்கில்லை.

குழந்தைகளுக்கு வசதியான சூழலை உருவாக்கித் தருவதைவிட ஆரோக்கியமான சூழலை ஏற்படுத்தித் தரவேண்டியது அவசியம். தொலைக்காட்சி மற்றும் வீடியோ கேம்ஸ் இவற்றிலிருந்து மீட்டு நம்மோடு வைத்துக் கதை சொல்லலாம். இது அவர்களுக்குக் கற்பனையை, அறம் பற்றிய சிந்தனையை வளர்க்கும் என்கிறார்கள் மனநல ஆலோசகர்கள். விரும்பியதை உடனே அடைய அடம் பிடிக்கும் பிள்ளைகள் காலப்போக்கில் எல்லாம் தனக்கு மட்டுமே வேண்டும் என்றும் தனக்கு மட்டுமே சொந்தமென்றும் எண்ணும் மனப்பான்மையைப் பெறுவதற்கான சாத்தியங்கள் அதிகம் என்பதால் அடம் பிடித்தவுடன் அவர்கள் விரும்பியதை வாங்கித் தராதீர்கள் என்கின்றனர்.



காத்திருப்பதற்கு அவர்களைப் பழக்குவதும், அவசியமானவற்றை மட்டுமே வாங்கித் தருவதும் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தக்கூடும். குழந்தைகளிடம் அன்போடும் அதே நேரத்தில், உறுதியோடும் நடந்து கொண்டு சூழலை விளக்கிசொல்ல முற்படும்போது அவர்களுக்கும் புரிந்து கொள்வதற்கான பக்குவம் வரும். பொருட்கள் மட்டுமே ஒருநாளும் மனநிறைவைத் தரப்போவதில்லை, ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மனம் மாறிக் கொண்டே இருக்கும் என்பதால் திருப்தியும் நிம்மதியும் பொருட்களின் அடிப்படையில் இல்லை என்பதை முதலில் நாம் உணர வேண்டும்; பிள்ளைகளுக்கும் உணர்த்த வேண்டும்.தன்னிடமிருப்பதை இல்லாதவர்களோடு பகிர்ந்து கொள்ள கற்றுக்கொடுத்தால் அவர்களின் மனநலம் மேம்படும்.

பெற்றோராகிய நாம்தான் பிள்ளைகள் முன் இருக்கும் உதாரணம் என்பதை நினைவில் கொண்டு எளிமையான வாழ்க்கைக்கு நாம் நம்மைத் தயார்படுத்திக் கொண்டால் குழந்தைகளும் அதையே கற்றுக்கொள்வார்கள். பெற்றோர், பிள்ளைகளுக்கு நட்போடு துணை நிற்க முற்பட்டால் அவர்கள் மனஅழுத்தம் இல்லாமல் இயல்பாய் நல்ல ஆரோக்கியத்துடன் வளர முடியும். குடும்பத்தில் அவர்களுக்கும் வளரும் வயதில் சில பொறுப்புகளைத் தந்து குடும்பத்தின் செயல்பாடுகளில் அவர்களையும் இணைத்துக் கொண்டால், பிற்காலத்தில் அவர்கள் தங்கள் சொந்த காலில் நிற்க முடியும். உழைப்பின் அருமையையும் அவசியம் அறிந்து செலவு செய்வதையும் சேமிப்பின் அவசியத்தையும் அவர்கள் அறிய இது உதவும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, நம் பிள்ளைகளுக்கு தாத்தா, பாட்டி எனும் உறவோடு சகோதர வாஞ்சையை அனுபவிக்கும்படியான குடும்ப கட்டமைப்பை சரிசெய்து கொள்ள வேண்டியதன் அவசியத்தை நாம் உணர வேண்டும். நுகர்வு கலாசாரத்தைப் புறந்தள்ளுவதும், கூட்டுக் குடும்ப கலாசாரத்திற்குப் புத்துயிர் தருவதும் நாளைய தலைமுறையின் மேன்மைக்கு அவசியம்.

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

2018


CALENDAR

2018


JANUARY





FEBRUARY




MARCH




APRIL




MAY




JUNE




JULY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

AUGUST

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

SEPTEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | | | | | | |

OCTOBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

NOVEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

DECEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | 31 | | | | | |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com




editor@ithamil.com

# VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products


**Idli / Dosa Wet Mix** • இட்லி / தோசை மாவு

ఇడ్లీ దోస పిండి • ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡളി / ദോശ മാവ്



CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI



100% Pure Vegetarian

ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा